# ஹஜ், உம்ரா
# ஆய்வும் தெளிவும்



தமிழில்

எம். முஜீபுர் ரஹ்மான் உமரீ

மின் நூல் ஆக்கம்

குலசை சுல்தான்

بسم الله الرحمن الرحيم

# ஹஜ், உம்ரா மற்றும் ஜியாரத்தின் பல சட்டங்களுக்கு அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் ஆய்வும் தெளிவும்


ஆசிரியர்

அப்துல் அஜீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ் -ரஹ்

தமிழில்

எம். முஜீபுர் ரஹ்மான் உமரீ

மின் நூல் ஆக்கம்

குலசை சுல்தான்

# பொருளடக்கம்

முன்னுரை ........ 4
புகுமுன் ........ 5
1. ஹஜ், உம்ரா கடமைக்கான ஆதாரங்களும் அதனை விரைவாக நிறைவேற்றுவதன் அவசியமும் ........ 7
2. பாவங்களுக்கு மன்னிப்புத் தேடுவது மற்றும் அநீதங்களை விட்டும் விடுபடுவதன் அவசியம் ........ 11
3. இஹ்ராமிற்காக நிய்யத் வைக்க வேண்டிய எல்லையை அடைந்ததும் செய்யவேண்டியவை ........ 17
4. இஹ்ராமிற்காக நிய்யத் வைக்க வேண்டிய இடங்களும் எல்லைகளும் ........ 23
5. ஹஜ்ஜுடைய காலங்கள் அல்லாத நாட்களில் எல்லையை அடைபவருக்குரிய சட்டம் ........ 28
6. சிறு குழந்தைகளின் ஹஜ், அவர்களின் கடமையான ஹஜ்ஜுக்கு நிகராகுமா? 32
7. இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துள்ளவருக்கு தடுக்கப்பட்டவைகளும் அனுமதிக்கப்பட்டவைகளும் ........ 35
8. மக்காவில் நுழையும்போது செய்யவேண்டியவை களும் மஸ்ஜிதுல் ஹராமில் நுழைந்த பின் செய்யும் தவாஃப் பற்றிய விளக்கங்களும் ........ 43
9. துல்ஹஜ் 8-ம் நாள் ஹஜ்ஜுக்குரிய இஹ்ராமிற்காக நிய்யத் வைத்து மினாவுக்குப் புறப்படுவது பற்றிய சட்டம் ........ 53
10. ஹஜ் செய்பவர் 10-ம் நாளின் செயல்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவது பற்றிய விளக்கம் ........ 75
11. தமத்துஃ மற்றும் கிரான் ஹஜ் செய்பவர் மீது பலிப்பிராணி கடமை ........ 81
12. நன்மையை ஏவுதல் ........ 84
13. அதிகமாக இறைவழிபாட்டில் ஈடுபடுதல் ........ 94
14. ஜியாரத்தின் சட்டங்களும் ஒழுக்கங்களும் ........ 95
15. எச்சரிக்கை ........ 110
16. குபா மஸ்ஜிதையும் பகீஃயையும் ஜியாரத் செய்தல் ........ 114

## முன்னுரை

ஹஜ், உம்ரா மற்றும் ஜியாரத்தின் பல சட்ட விளக்கங் களையும் ஆய்வுகளையும் அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் உள்ளடக்கிய தொகுப்பே தங்கள் கையில் தவழும் இச்சிறியநூல். இதனை எனக்காகவும் அல்லாஹ் நாடும் பிற முஸ்லிம்களுக்காகவும் தொகுத்துள்ளேன். இதன் சட்டங்களை ஆதாரங்களுடன் குறிப்பிட முயன்றுள்ளேன்.

இந்நூல் முதல் முறையாக ஹிஜ்ரீ 1363-ம் ஆண்டு கண்ணியமிகு மன்னர் அப்துல் அஜீஸ் பின் அப்துர் ரஹ்மான் அல்ஃபைஸல் அவர்களின் செலவில் அச்சிடப்பட்டது. -அல்லாஹ் அவர்களின் ஆன்மாவை தூய்மையாக்கி, அவர்களின் தங்குமிடத்தை சிறந்ததாக்குவானாக!

அதன் பிறகு இந்நூலின் சட்டங்களை சற்று விரிவாக்கினேன். தேவைப்படும் சட்டங்களுக்கு ஆய்வுகளை அதிகமாக்கினேன். அல்லாஹ்வின் அடியார்களில் அவன் நாடுபவர்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக அதனை மீண்டும் அச்சிட விரும்பினேன். இதற்கு ஹஜ், உம்ரா மற்றும் ஜியாரத்தின் பல சட்டங்களுக்கு அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் ஆய்வும் தெளிவும் என பெயரிட்டுள்ளேன். முழுமையாக பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அதன் பிறகும் சில முக்கிய விளக்கங்களையும் பயனுள்ள குறிப்புகளையும் அதில் இணைத்துள்ளேன். இந்நூல் பலமுறை அச்சிடப்பட்டு விட்டது.

அல்லாஹ் இதனை அனைவரும் பயனடையும் நூலாக ஆக்கியருள்வானாக! இம்முயற்சி அக்கருணையாளனின் திருப் பொருத்தத்தைப் பெறவும், அவனிடத்தில் இனிய சொர்க்கங்களைப் பெற்று வெற்றியடையக் காரணமாக அமையவும் அவனிடம் பிரார்த்திக்கின்றேன். நிச்சயமாக அவனே நமக்குப் போதுமானவன். அவனே பொறுப்பாளர்களில் மிகச் சிறந்தவன். மகத்துவமிக்க மிக உயர்ந்தவனான அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டும்) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

நூலாசிரியர்
அப்துல் அஜீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ்
ஸவூதி அரேபியாவின் தலைமை முஃப்தீ
பேரறிஞர்கள் சபை, மார்க்க ஆய்வு மற்றும்
மார்க்கத் தீர்ப்பு நிறுவனத் தலைவர்.

## புகுமுன்

அனைத்துப் புகழும் அகிலத்தோரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தாகுக! நல்ல முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே! இறையருளும் அமைதியும் அவனுடைய அடியாரும் அவன் தூதருமான முஹம்மது (ஸல் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் அனைவரின் மீதும் பொழியட்டுமாக!

ஹஜ்ஜைப் பற்றிய இச்சிறிய நூல், அதன் சிறப்புகள், ஒழுக்கங்கள், அதனை நிறைவேற்ற புறப்படுபவர் கடைபிடிக்க வேண்டியவைகள், ஹஜ், உம்ரா மற்றும் ஜியாரத்தின் முக்கிய சட்ட விளக்கங்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. அல்லாஹ்வுடைய வேதம் மற்றும் அவனுடைய தூதர்(ஸல் அவர்களின் சுன்னா ஆகியவற்றின் ஆதாரங்களின் அடிப்படையிலும் அல்லாஹ்வின் கட்டளைக்கு இணங்க முஸ்லிம்களுக்கு உபதேசமாகவும் இதனை தொகுத்துள்ளேன். அல்லாஹுதஆலா கூறுகின்றான்:

وَذَكِّرْ فَإِنَّ الذِّكْرَى تَنْفَعُ الْمُؤْمِنِيْنَ

மேலும் (நபியே!) நீர் நல்லுபதேசம் செய்வீராக! ஏனெனில் நிச்சயமாக நல்லுபதேசம் விசுவாசிகளுக்குப் பயனளிக்கும்.
(அல்குர்ஆன் 51:55)

وَإِذْ أَخَذَ اللهُ مِيْثَاقَ الَّذِيْنَ أُوْتُوا الْكِتَابَ لَتُبَيِّنُنَّهُ لِلنَّاسِ وَلاَ تَكْتُمُوْنَهُ

(உங்களுக்குக் கொடுக்கப்பட்ட) வேதத்தை மறைத்துவிடாது மக்களுக்குத் தெளிவாக நீங்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று வேதம் கொடுக்கப்பட்டவர்களிடம் அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவுபடுத்துவீராக!)
(அல்குர்ஆன் 3:187)

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوَى

நன்மையான மற்றும் இறையச்சமுடைய காரியங்களில் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து கொள்ளுங்கள்!
(அல்குர்ஆன் 5:2)

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் :
( وَعَامَّتِهِمْ الْمُسْلِمِينَ وَلأَئِمَّةِ وَلِرَسُولِهِ وَلِكِتَابِهِ لِلَّهِ : قَالَ لِمَنْ؟ قُلْنَا -ثلاثًا– النَّصِيحَةُ الدِّينُ )
மார்க்கம் என்பது உபதேசம் செய்வதாகும் என நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள். -அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!- யாருக்கு (உபதேசம் செய்வது)? என்று நாங்கள் கேட்டோம். அதற்கு, அல்லாஹ்வுக்கும் அவனுடைய வேதத்திற்கும் அவனுடைய தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் முஸ்லிம் பொதுமக்களுக்கும் என பதிலளித்தார்கள்.
(அறிவிப்பவர்: தமீம் அத்தாரீ-ரலி, நூல்: முஸ்லிம், அபூதாவூத்)

(مَنْ لَمْ يَهْتَمَّ بِأَمْرِ الْمُسْلِمِيْنَ فَلَيْسَ مِنْهُمْ، وَمَنْ لَمْ يُمْسِ وَيُصْبِحْ نَاصِحًا ِللهِ وَلِكِتَابِهِ وَلِرَسُوْلِهِ وَلِأَئِمَّةِ الْمُسْلِمِيْنَ وَعَامَّتِهِمْ فَلَيْسَ مِنْهُمْ)
முஸ்லிம்களின் விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக் காதவர் அவர்களைச் சார்ந்தவர் அல்ல. மேலும் அல்லாஹ் வுக்கும் அவனுடைய வேதத்திற்கும் அவனுடைய தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் முஸ்லிம் பொது மக்களுக்கும் உபதேசம் செய்யாதவராக காலைப் பொழுதை யும் மாலைப் பொழுதையும் அடைபவர் அவர்களைச் சார்ந்தவர் அல்ல என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : ஹுதைஃபா -ரலி, நூல் : தபரானீ)

இந்நூலின் மூலம் நானும் அனைத்து முஸ்லிம்களும் பயனடையவும் இம்முயற்சி கருணையாளனான அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும், அவனிடத்தில் இனிய சொர்க் கங்களைப் பெற்று வெற்றியடையக் காரணமாக அமையவும் பொறுப்பாளனான அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன். நிச்சயமாக அவனே செவிமடுப்பவன், பதிலளிப்பவன், அவனே நமக்குப் போதுமானவன், அவனே பொறுப்பாளர்களில் மிகச் சிறந்தவன்.

# ஹஜ்,உம்ரா ஆய்வும் தெளிவும்

## 1. ஹஜ், உம்ரா கடமைக்கான ஆதாரங்களும் அதனை விரைவாக நிறைவேற்றுவதன் அவசியமும்

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் சத்தியத்தை அறிந்து, அதனைப் பின்பற்ற வாய்ப்பளிப்பானாக!

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் அவனுடைய புனித வீட்டை ஹஜ் செய்வதை தன் அடியார்களின் மீது கடமையாக்கியுள்ளான். அதனை இஸ்லாத்தின் அங்கங்களில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلِلهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيْلاً وَمَنْ كَفَرَ فَإِنَّ اللهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِيْنَ

எவர்கள் அங்கு யாத்திரை செய்ய சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் அப்போது (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தா(ர் அனைவ)ரை விட்டும் தேவையற்றவன். (அல்குர்ஆன் 3:97)

( بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ )

இஸ்லாம் ஐந்து காரியங்களின்மீது நிறுவப்பட்டுள்ளது. அவை: நிச்சயமாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை என்றும் நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்றும் சாட்சி கூறுவது, தொழுகையை நிறைவேற்றுவது, ஜகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது, ரமலானில் நோன்பு நோற்பது என நபி

(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: இப்னுஉமர் -ரலி, நூற்கள் : புகாரீ,முஸ்லிம்)

"இப்பட்டணங்களுக்கு சிலரை அனுப்பி, பொருளாதார வசதியுள்ள அனைவரையும் கண்டறிந்து, அதில் ஹஜ் செய்யாதவர் மீது வரி விதிக்கலாம் என நினைக்கின்றேன். ஏனெனில் அவர்கள் முஸ்லிம்கள் இல்லை! அவர்கள் முஸ்லிம்கள் இல்லை!" என உமர் (ரலி) கூறியதாக ஸயீத் அவர்கள் தனது ஹதீஸ் தொகுப்பு நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

ஹஜ்ஜை நிறைவேற்ற சக்திபெற்றிருந்தும் அதனை -நிறை வேற்றாது- விட்டுவிட்டவன் யூதனாகவோ கிருத்துவனாகவோ மரணிப்பதில் ஆச்சரியமில்லை என அலி (ரலி) கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் செய்ய சக்தி பெற்றிருந்தும் ஹஜ் செய்யாதிருப்பவர் விரைவாக அதனை நிறைவேற்றுவது கடமையாகும்.

( تَعَجَّلُوا إِلَى الْحَجِّ يَعْنِي الْفَرِيضَةَ فَإِنَّ أَحَدَكُمْ لاَ يَدْرِي مَا يَعْرِضُ لَهُ )

-கடமையான- ஹஜ்ஜை விரைவாக நிறைவேற்றிவிடுங்கள்! ஏனெனில் உங்களில் ஒருவருக்கு என்ன தடை நேரும் என்பதை அவர் அறியமாட்டார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூல் : அஹ்மத்)

ஹஜ் செய்ய சக்தி பெற்றவர் அதனை விரைவாக நிறைவேற்றுவது கடமை என்பதை கீழ்காணும் அல்லாஹ்வின் கட்டளையும் நபிமொழியும் உணர்த்துகின்றன:

وَلِلهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيْلاً وَمَنْ كَفَرَ فَإِنَّ اللهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِيْنَ

எவர்கள் அங்கு யாத்திரை செய்ய சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் அப்போது (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து

விடுவதில்லை. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தா(ர் அனைவ)ரை விட்டும் தேவையற்றவன். (அல்குர்ஆன் 3:97)

(. . أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللَّهُ عَلَيْكُمُ الْحَجَّ فَحُجُّوا . . )

மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். எனவே ஹஜ் செய்யுங்கள்! என்று நபி (ஸல்) அவர்கள் தமது பிரசங்கத்தில் கூறினார்கள்.

(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : முஸ்லிம்)

உம்ராச் செய்வதும் கடமையாகும் என்பதை உணர்த்தும் பல நபிமொழிகள் வந்துள்ளன. அவைகளில் சில:

ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் இஸ்லாம் என்றால் என்னவென்று வினவியபோது,

(الإِسْلاَمُ : أَنْ تَشْهَدَ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّداً رَسُوْلُ اللهِ، وَتُقِيْمَ الصَّلاَةَ، وَتُؤْتِيَ الزَّكَاةَ، وَتَحُجَّ الْبَيْتَ وَتَعْتَمِرَ، وَتَغْتَسِلَ مِنَ الْجَنَابَةِ، وَتُتِمَّ الْوُضُوْءَ، وَتَصُوْمَ رَمَضَانَ)

இஸ்லாம் என்பது: நிச்சயமாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை என்றும் நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்றும் நீர் சாட்சி கூறுவது, தொழுகையை நிறைவேற்றுவது, ஜகாத் கொடுப்பது, (அல்லாஹ்வுடைய) வீட்டை ஹஜ் செய்வது, உம்ராச் செய்வது, பெருந்தொடக்கிற்காக -ஜனாபத்திற்காக- குளிப்பது, உளுவை முழுமையாகச் செய்வது, ரமலானில் நோன்பு நோற்பது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: இப்னு உமர் -ரலி, நூற்கள் : இப்னு குஸைமா, தாரகுத்னீ - இமாம் தாரகுத்னீ அவர்கள் இந்த அறிவிப்பின் அறிவிப்பாளர் வரிசை தரமானது, ஸஹீஹானது என்று கூறியுள்ளார்கள்.)

عَنْ عَائِشَةَ قَالَتْ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ هَلْ عَلَى النِّسَاءِ مِنْ جِهَادٍ قَالَ نَعَمْ عَلَيْهِنَّ جِهَادٌ لَا قِتَالَ فِيهِ الْحَجُّ وَالْعُمْرَةُ

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெண்கள் மீது ஜிஹாத் கடமை ஏதும் உள்ளதா? என்று ஆயிஷா (ரலி) அவர்கள் வினவியதற்கு, ஆம்! அவர்கள் மீது சண்டை இல்லாத ஜிஹாத் செய்வது கடமையாகும். அது ஹஜ்ஜும் உம்ராவும் என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.
(அறிவிப்பவர்: ஆயிஷா -ரலி, நூற்கள்: அஹமத், இப்னுமாஜா)

ஹஜ்ஜும் உம்ராவும் வாழ்நாளில் ஒரு தடவை மட்டுமே கடமையாகும்.

(اَلْحَجُّ مَرَّةٌ فَمَنْ زَادَ فَهُوَ تَطَوُّعٌ)

ஹஜ் ஒரு தடவைதான் (கடமையாகும்). அதற்கு அதிகமாகச் செய்வது உபரியாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : இப்னுஅப்பாஸ் -ரலி, நூல் :அஹ்மத்)

உபரியான ஹஜ் மற்றும் உம்ராவை அதிகமாக நிறைவேற்றுவது சுன்னத்தாகும்.

( اَلْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلَّا الْجَنَّةُ )

ஒரு உம்ரா மற்றொரு உம்ராவிற்கு இடைப்பட்ட (காலங்களில் நிகழும்) பாவங்களுக்கு பரிகாரமாக அமைகின்றது. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சொர்க்கத்தைத் தவிர வேறில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா-ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

## 2. பாவங்களுக்கு மன்னிப்புத் தேடுவது மற்றும் அநீதங்களை விட்டும் விடுபடுவதன் அவசியம்

ஹஜ், உம்ராவை நிறைவேற்றப் புறப்படுபவர் தன் குடும்பத்தார் மற்றும் தன்னைச் சார்ந்தோருக்கு இறையச்சத்துடன் நடந்து கொள்ளுமாறு உபதேசம் செய்வது விரும்பத்தக்க செயலாகும். இறையச்சமென்பது: அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுவதும் அவன் தடுத்தவைகளை விட்டு விலகிக் கொள்வதுமாகும்.

மேலும் அவர் கொடுக்கவேண்டிய மற்றும் அவருக்கு வர வேண்டிய கடன் விபரங்களை சாட்சிகளுடன் எழுதிக் கொள்வது அவசியமாகும்.

وَتُوبُوْا إِلَى اللهِ جَمِيْعًا أَيُّهَ الْمُؤْمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ

முஃமின்களே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் (பாவமன்னிப்புக்கோரி) தவ்பாச் செய்யுங்கள்! (24:31) என்ற அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க அனைத்துப் பாவங்களை விட்டும் மனத்தூய்மையுடன் விரைவாகத் தவ்பாச் செய்து, அதனை விட்டும் மீள்வது கடமையாகும். தவ்பா என்பது:

- பாவங்களை விட்டும் விலகி, முழுமையாக விட்டுவிடுவது.
- கடந்த காலங்களில் செய்த பாவங்களை எண்ணி வருந்துவது.
- அதனை மீண்டும் செய்யாமலிருக்க உறுதிகொள்வது.
- மனித உயிர், மானம் ஆகியவற்றில் அநீதம் இழைத்திருந்தால் ஹஜ் பயணத்திற்கு முன்னர் அதற்காக சமாதானம் செய்து கொள்வதும், பொருள் போன்றவற்றில் உரிமை மீறியிருந்தால் அதை மீட்டிக் கொடுப்பது அல்லது பொருத்துக் கொள்ள வேண்டிக் கொள்வதும் அவசியமாகும்.

( مَنْ كَانَتْ لَهُ مَظْلَمَةٌ لِأَخِيهِ مِنْ عِرْضِهِ أَوْ شَيْءٍ فَلْيَتَحَلَّلْهُ مِنْهُ الْيَوْمَ قَبْلَ أَنْ لَا يَكُونَ دِينَارٌ وَلَا دِرْهَمٌ إِنْ كَانَ لَهُ عَمَلٌ صَالِحٌ أُخِذَ مِنْهُ بِقَدْرِ مَظْلَمَتِهِ وَإِنْ لَمْ تَكُنْ لَهُ حَسَنَاتٌ أُخِذَ مِنْ سَيِّئَاتِ صَاحِبِهِ فَحُمِلَ عَلَيْهِ )

யாரேனும் தன் சகோதரரின் மானத்தில் அல்லது ஏதேனும் ஒன்றில் அநீதம் இழைத்திருந்தால் தங்கக் காசோ, வெள்ளிக் காசோ அவரிடம் இல்லாத நிலை (மறுமை நாள்) வருவதற்கு முன் இன்றே அவர் அதிலிருந்து விடுபட்டுக் கொள்ளட்டும். (அவர் அந்த அநீதங்களிலிருந்து விடுபடாமல் மரணித்து

விட்டால், மறுமையில்) அவரிடம் நல்லறங்கள் இருந்தால் அதிலிருந்து அவர் செய்த அநீதியின் அளவு எடுத்து (அநீதி இழைக்கப்பட்டவருக்குக்) கொடுக்கப்படும். அவரிடம் நன்மைகள் இல்லையெனி;ல் அநீதமிழைக்கப்பட்டவரின் தீமை களை எடுத்து இவர்மீது சுமத்தப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூஹுரைரா-ரலி, நூல்:புகாரீ)

ஹஜ், உம்ராவின் செலவினங்களுக்காக ஹலாலான பொருளாதாரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

( إِنَّ اللَّهَ طَيِّبٌ لاَ يَقْبَلُ إِلَّا طَيِّبًا )

நிச்சயமாக அல்லாஹ் தூய்மையானவன், தூய்மையானதைத் தவிர ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூஹுரைரா-ரலி, நூல்: முஸ்லிம்)

( إِذَا خَرَجَ الرَّجُلُ حَاجًّا بِنَفَقَةٍ طَيِّبَةٍ وَوَضَعَ رِجْلَهُ فِي الْغَرْزِ فَنَادَى : لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، نَادَاهُ مُنَادٍ مِنَ السَّمَاءِ : لَبَّيْكَ وَسَعْدَيْكَ، زَادُكَ حَلاَلٌ، وَرَاحِلَتُكَ حَلاَلٌ، وَحَجُّكَ مَبْرُوْرٌ غَيْرُ مَأْزُوْرٍ. وَإِذَا خَرَجَ الرَّجُلُ بِالنَّفَقَةِ الْخَبِيْثَةِ فَوَضَعَ رِجْلَهُ فِي الْغَرْزِ فَنَادَى : لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، نَادَاهُ مُنَادٍ مِنَ السَّمَاءِ : لاَ لَبَّيْكَ وَلاَ سَعْدَيْكَ، زَادُكَ حَرَامٌ، وَنَفَقَتُكَ حَرَامٌ، وَحَجُّكَ غَيْرُ مَبْرُوْرٍ )

ஒரு மனிதர் தூய்மையான பொருளுடன் ஹஜ் செய்யப் புறப்பட்டு, தன்னுடைய காலை வாகனத்தில் -சேணத்தில்-வைத்து, லப்பைக் அல்லாஹு{ம்ம லப்பைக் (யாஅல்லாஹ்! உன்னுடைய அழைப்பிற்குக் கட்டுப்பட்டு வந்துள்ளேன்) என்று கூறினால் வானத்திலிருந்து ஒரு அழைப்பாளர் அவரை அழைத்து, உன்வரவு நல்வரவாகட்டும்! உன்னுடைய பொருள் ஹலாலானது! உன்னுடைய வாகனமும் ஹலாலானது! உன்னுடைய ஹஜ்ஜும் பாவமற்ற, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக ஆகட்டும்! என்று கூறுவார்.

ஒருவர் அசுத்தமான (ஹராமான) பொருளாதாரத்துடன் புறப்பட்டு, தன்னுடைய காலை வாகனத்தில் -சேணத்தில்- வைத்து, லப்பைக் அல்லாஹு{ம்ம லப்பைக்! என்று கூறினால் வானத்திலிருந்து ஒரு அழைப்பாளர் அவரை அழைத்து, உன்னுடைய வரவு நல்வரவாகாமல்

போகட்டும்! உன்னுடைய பயண சாதனம் ஹராமானது! உன்னுடைய செலவினம் -பொருளாதாரம்- ஹராமானது! உன்னுடைய ஹஜ்ஜும் ஏற்றுக் கொள்ளப்படாத ஹஜ்ஜாக ஆகட்டும்! என்று கூறுவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா-ரலி, நூல் : தபரானீ)

ஹஜ் செய்பவர் பிறமக்களின் உதவியை எதிர்பார்க்காமல் இருப்பதும் அவர்களிடம் யாசகம் கேட்காமல் கண்ணியத்தை காப்பாற்றிக் கொள்வதும் அவசியமாகும்.

(. . وَمَنْ يَسْتَعْفِفْ يُعِفَّهُ اللَّهُ وَمَنْ يَسْتَغْنِ يُغْنِهِ اللَّهُ )

யார் தன் கண்ணியத்தை காத்துக் கொள்ள முயல்கிறாரோ அவர் கண்ணியத்தை அல்லாஹ் காப்பாற்றுகிறான். யார் பிறர் தேவையின்றி வாழ முயல்கிறாரோ அவரை அல்லாஹ் பிறர் தேவையற்றவராக்கிவிடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : ஹகீம்-ரலி, நூல் : புகாரீ)

(. . مَا يَزَالُ الرَّجُلُ يَسْأَلُ النَّاسَ حَتَّى يَأْتِيَ يَوْمَ الْقِيَامَةِ لَيْسَ فِي وَجْهِهِ مُزْعَةُ لَحْمٍ . . )

மக்களிடம் தொடர்ந்து யாசகம் கேட்டுக் கொண்டிருப்பவன் மறுமை நாளில் அவன் முகத்தில் -சிறிதளவு கூட- தசையற்ற நிலையில் வருவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு உமர் -ரலி, நூல் : புகாரீ)

ஹஜ் செய்பவர், அல்லாஹ்விற்காகவும் மறுமைப் பயனை நோக்கமாகக் கொண்டும் ஹஜ், உம்ராவை நிறைவேற்றுவது அவசியமாகும். மேலும் புனிதத் தலங்களில் அல்லாஹ்விற்கு விருப்பமான சொல், செயல்களில் ஈடுபட்டு அவனுடைய நெருக்கத்தைப் பெற முயற்சிக்கவேண்டும்.

இவ்வுலகப்; பயன்களைப் பெறும் நோக்கத்திலோ அல்லது பிறர் பார்ப்பதற்காகவோ, தன்னைப் புகழ்ந்து பேசுவ தற்காகவோ, பெருமைக்காகவோ ஹஜ் செய்வதை விட்டும் முற்றிலும் தவிர்ந்து கொள்ளவேண்டும். ஏனெனில் இவைகள் மிகவும் இழிவான நோக்கங்களாகும். மேலும் நன்மைகள் அழிவதற்கும், நல்லறங்கள் ஏற்றுக்

கொள்ளப்படாமலிருக்கவும் இவைகள் காரணமாகிவிடும். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مَنْ كَانَ يُرِيْدُ الْحَيَاةَ الدُّنْيَا وَزِيْنَتَهَا نُوَفِّ إِلَيْهِمْ أَعْمَالَهُمْ فِيْهَا وَهُمْ فِيْهَا لاَ يُبْخَسُوْنَ-أُولَئِكَ الَّذِيْنَ لَيْسَ لَهُمْ فِي الآخِرَةِ إِلاَّ النَّارُ وَحَبِطَ مَا صَنَعُوْا فِيْهَا وَبَاطِلٌ مَا كَانُوْا يَعْمَلُوْنَ

எவர்கள் இவ்வுலக வாழ்வையும் அதன் அலங்காரத்தையும் நாடு பவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் செயல்(களுக்குரிய பலன்)களை இ(வ்வுலகத்)திலேயே நாம் பூரணமாக அவர்களுக்கு நிறைவு செய்வோம். அவர்களோ அதில் குறைவு செய்யப்பட மாட்டார்கள்.
இத்தகையோர் தாம் - அவர்களுக்கு மறுமையில் (நரக) நெருப்பைத் தவிர (வேறு ஒன்றும்) இல்லை. அவர்கள் அ(வ்வுலகத்)தில் செய்தவை அழிந்தும் விட்டன. அவர்கள் செய்து கொண்டிருந்தவை வீணானவையேயாகும்.
(அல்குர்ஆன் 11:15-16)

مَنْ كَانَ يُرِيْدُ الْعَاجِلَةَ عَجَّلْنَا لَهُ فِيْهَا مَا نَشَاءُ لِمَنْ نُرِيْدُ ثُمَّ جَعَلْنَا لَهُ جَهَنَّمَ يَصْلَهَا مَذْمُوْمًا مَدْحُوْرًا – وَمَنْ أَرَادَ الآخِرَةَ وَسَعَى لَهَا سَعْيَهَا وَهُوَ مُؤْمِنٌ فَأُولَئِكَ كَانَ سَعْيُهُمْ مَشْكُوْرًا

எவர் (மறுமையை மறந்துவிட்டு) இம்மையை நாடுகிறாரோ, அவருக்கு அதில் நாம் நாடியதை, நாம் நாடியவருக்குத் துரிதமாக கொடுத்துவிடுகின்றோம். பின்னர், மறுமையில் அ(த்தகைய)வருக்காக நரகத்தை நாம் ஆக்குகின்றோம். அ(த்தகைய)வர் நிந்திக்கப்பட்டவராக, (அல்லாஹ்வின் அருளிலிருந்து) தூரமாக்கப்பட்டவராக அதில் நுழைவார்.

இன்னும், எவர் விசுவாசியாக இருக்க, அவர் மறுமையை நாடி அதற்குரிய முயற்சியையும் மேற்கொண்டாரோ அத்தகையோர் -அவர்களின் முயற்சி (அல்லாஹ்விடம்) அங்கீகரிக்கப்பட்டதாகும்.
(அல்குர்ஆன் 17:18-19)

(قَالَ اللَّهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيهِ مَعِي غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ )

எனக்கு இணைவைப்பவர்களின் இணையை விட்டும் நான் தேவையற்றவனாவேன். யாரேனும் ஒரு அமலைச் செய்து அதில் என்னுடன் பிறரை இணையாக்கிவிட்டால் (அதனை நான் ஏற்றுக் கொள்ளாமல்)

அவரையும் அவரது இணையையும் விட்டுவிட்டேன் என அல்லாஹ{ தஆலா கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : முஸ்லிம்)

ஹஜ் செய்பவர், மார்க்கத்தைப் பேணக்கூடிய, இறையச்சமுடைய, மார்க்க விளக்கமுடைய நல்லவர்களுடன் தனது பயணத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். மார்க்க விளக்கமற்றவர்கள் மற்றும் பாவம் செய்பவர்களுடன் இணைவதை விட்டும் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஹஜ், உம்ராவை முறையான கல்வியுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதால் அதில் தான் செய்யவேண்டியவைகளைக் கற்றுக் கொள்வதும் அதன் அறிவைப் பெறுவதும் தனக்கு தெளிவற்ற விஷயங்களை பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதும் அவசியமாகும்.

அவர் கால்நடையின் மீதோ, வாகனத்திலோ, விமானத்திலோ அல்லது இவை தவிர உள்ள வாகனங்களிலோ அமர்ந்து புறப்படும் போது - பிஸ்மில்லாஹ் என- அல்லாஹ்வின் பெயர் கூறி, அவனைப் புகழ்ந்து, பிறகு மூன்று முறை அல்லாஹு அக்பர் எனக் கூறிவிட்டு, ஸஹீஹான ஹதீஸில் இடம் பெற்றுள்ள கீழ்காணும் துஆவை ஓதிக் கொள்வது விரும்பத்தக்க செயலாகும்.

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ ( اللَّهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِي سَفَرِنَا هَذَا الْبِرَّ وَالتَّقْوَى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضَى اللَّهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اللَّهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ وَالْخَلِيفَةُ فِي الْأَهْلِ، اَللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ )

(பொருள் : எங்களுக்கு இதனை வசப்படுத்தித் தந்தவனான அவன் மிக்க பரிசுத்தமானவன். (இதன் மீது பிரயாணிக்க அவன் இதனை வசப்படுத்தித் தந்திராவிட்டால்) இதற்கு சக்தி பெற்றவர் களாக நாங்கள் இருக்கவில்லை. மேலும் நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம். (அல்குர்ஆன் 43: 13-14)

யாஅல்லாஹ்! இப்பயணத்தில் நாம் உன்னிடம் நல்லறங்களையும் இறையச்சத்தையும் நீ பொருந்திக் கொள்ளும் செயலையும் கேட்கின்றோம். யாஅல்லாஹ்! இப்பயணத்தை எங்களுக்கு நீ எளிதாக்குவாயாக! அதன் தூரத்தை நீ சுருக்கிடுவாயாக! யாஅல்லாஹ்! இப்பயணத்தில் நீயே எங்களுடன் இருப்பவன். மேலும் நீயே எங்கள் குடும்பத்தினருக்கு பிரதிநிதி (பொருப்பாளன்). யாஅல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் பயணத்தின் கஷ்டங்களை விட்டும் கோரக் காட்சிகளை விட்டும் செல்வம் மற்றும் குடும்பத்தில் தீயவிளைவுகள் ஏற்படுவதை விட்டும் பாதுகாவல் தேடுகின்றேன்.)
(அறிவிப்பவர் : இப்னு உமர் - ரலி, நூல் : முஸ்லிம்)

அவர் தன் பயணத்தில் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறவேண்டும். மிகப்பணிவாக துஆ மற்றும் பாவமன்னிப்புத் தேடுவதில் அதிகமாக ஈடுபடவேண்டும். குர்ஆனை பொருளுணர்ந்து, அதிகமாக ஓதவேண்டும். தொழுகைகளை ஜமாஅத்துடன் பேணித் தொழ வேண்டும்.

பிறரைப் பற்றிய தேவையற்ற, வீண் பேச்சுக்களில் மூழ்குதல், அளவு கடந்து பரிகாசம் செய்தல், பொய், புறம், கோள் மற்றும் தன்னுடன் இருப்பவர்களையோ அல்லது பிற முஸ்லிம் சகோதரர்களையோ கேலி செய்தல் போன்ற அனைத்துச் செயல்களை விட்டும் நாவைப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

மேலும் தன்னுடன் இருப்பவர்களுக்குப் பணிவிடை செய்வதும் அவர்களை விட்டும் நோவினை தருபவற்றை நீக்கி விடுவதும் அவசியமாகும். தனது சக்திக்கேற்ப, நுட்பமாகவும் அழகிய உபதேசங்களுடனும் அவர்களுக்கிடையே நன்மைகளை ஏவி, தீமைகளைத் தடுக்க வேண்டும்.

## 3. இஹ்ராமிற்காக நிய்யத் வைக்க வேண்டிய எல்லையை அடைந்ததும் செய்யவேண்டியவை

எல்லையை -மீகாத்தை- அடைந்து விட்டால் குளித்து, நறுமணம் பூசிக் கொள்வது விரும்பத்தக்க செயலாகும். நபி (ஸல்) அவர்கள் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்த போது தைக்கப்பட்ட ஆடையைக் கழற்றினார்கள், மேலும் குளித்தார் கள். (அறிவிப்பவர் : ஜைது பின் ஸாபித் -ரலி, நூல் : திர்மிதி)

நபி (ஸல்) அவர்கள் இஹ்ராமிற்காக நிய்யத் வைப்பதற்கு முன்பும் (துல்ஹஜ் 10-ம் நாள்) இஹ்ராமைக் களைந்து, கஃபாவைத் தவாஃப் செய்வதற்கு முன்பும் நான் அவர்களுக்கு நறுமணம் பூசிவிட்டேன் என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். (நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

உம்ராவிற்காக நிய்யத் வைத்து இஹ்ராமான நிலையிலிருந்த ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மாதவிடாய் வந்துவிட்டபோது, குளித்து விட்டு, அதனை ஹஜ்ஜுக்குரிய இஹ்ராமாக நிய்யத் வைத்துக் கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளை யிட்டார்கள்.

அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் துல்ஹுலைஃபா எனும் இடத்தில் பிரசவித்த போது, குளித்து விட்டு, (இரத்தம் வெளியேறாமல்) துணி வைத்துக் கட்டிக் கொண்டு இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துக் கொள்ளுமாறு அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.
(அறிவிப்பவர் : ஜாபிர் -ரலி, நூல் : முஸ்லிம்)

மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் வரும் நிலையில் இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கும் எல்லையை அடைந்த பெண்கள், குளித்துவிட்டு பிற மக்களுடன் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் கஃபாவை தவாஃப் செய்வதைத் தவிர மற்ற அனைத்தையும் (பிறரைப் போல்) செய்து கொள்ளலாம் என்பதையும் ஆயிஷா (ரலி) மற்றும் அஸ்மா (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் இட்ட கட்டளைகளின்

வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இஹ்ராமிற்காக நிய்யத் செய்பவர் மீசை, நகம், வெட்கத்தலங்களின் முடி, அக்குள் முடி ஆகியவற்றைக் கவனித்து, இஹ்ராமிற்காக நிய்யத் வைத்ததற்குப் பிறகு அவைகளை எடுக்கும் அவசியம் ஏற்படாதவாறு, தேவைக்கு ஏற்ப எடுத்துக் கொள்வது விரும்பத்தக்கச் செயலாகும். ஏனெனில் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்த பிறகு இவைகளை எடுப்பது கூடாது.

முஸ்லிம்கள் இக்காரியங்களை எல்லாக் காலங்களிலும் கடைபிடிப்பதை நபி(ஸல்) அவர்கள் மார்க்கமாக்கியுள்ளார்கள்

(الْفِطْرَةُ خَمْسٌ الْخِتَانُ وَالِاسْتِحْدَادُ وَقَصُّ الشَّارِبِ وَتَقْلِيمُ الْأَظْفَارِ وَنَتْفُ الْآبَاطِ)

ஐந்து காரியங்கள் இயற்கை நடைமுறைகளாகும். அவை : விருத்த சேதனம் -கத்னாச்- செய்தல், வெட்கத்தலங்களின் முடிகளைக் களைதல், மீசையைக் கத்தரித்தல், நகங்களை வெட்டுதல், அக்குளின் முடிகளைக் களைதல் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

(وُقِّتَ لَنَا فِي قَصِّ الشَّارِبِ وَتَقْلِيمِ الْأَظْفَارِ وَنَتْفِ الْإِبِطِ وَحَلْقِ الْعَانَةِ أَنْ لَا نَتْرُكَ أَكْثَرَ مِنْ أَرْبَعِينَ لَيْلَةً)

மீசையைக் குறைத்தல், நகங்களை வெட்டுதல், அக்குள் முடியைக் களைதல், வெட்கத்தலங்களின் முடியை மழித்தல் ஆகியவற்றை 40 நாட்களுக்கு அதிகமாக (எடுக்காமல்) விட்டுவிடக் கூடாதென எங்களுக்கு காலம் நிர்ணயிக்கப் பட்டிருந்தது என அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.
(நூல் : முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் காலம் நிர்ணயித்தார்கள் என்ற வாசகம் நஸயீயின் அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது. இந்த ஹதீஸ் அஹமத், அபூதாவூத் ஆகிய நூல்களிலும், நஸயீயில் இடம்பெற்ற அதே வாசகம் திர்மிதியிலும் இடம் பெற்றுள்ளது.

ஆண்களோ, பெண்களோ இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கும் போது

தலையில் (முடி) எதையும் எடுக்க மார்க்கத்தில் வழிகாட்டப் படவில்லை. தாடியைப் பொறுத்தவரை எந்தக் காலத்திலும் அதனை மழிப்பதோ, குறைப்பதோ கூடாது. மாறாக தாடியை பூரணமாக, அடர்த்தியாக வைப்பது கடமையாகும்.

( خَالِفُوا الْمُشْرِكِينَ وَفِّرُوا اللِّحَى وَأَحْفُوا الشَّوَارِبَ )
இணைவைப்பாளர்களுக்கு மாறு செய்யுங்கள்! தாடியை முழுமையாக்குங்கள்! மீசையைக் கத்தரியுங்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
(அறிவிப்பவர் : இப்னு உமர் -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( جُزُّوا الشَّوَارِبَ وَأَرْخُوا اللِّحَى خَالِفُوا الْمَجُوسَ )
மீசையைக் கத்தரியுங்கள்! தாடியைத் தொங்கவிடுங்கள்! நெருப்பு வணங்கிகளுக்கு மாறு செய்யுங்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
(அறிவிப்பவர்: அபூஹுரைரா-ரலி, நூல்: முஸ்லிம்)

இக்காலத்தில் பெரும்பாலான மக்கள் இந்த நபிவழிக்கு மாற்றமாக நடப்பதும் தாடி வைப்பதை எதிர்ப்பதும் -அதனை மழித்து விட்டு- பெண்களுக்கும் இறைநிராகரிப்பாளர்களுக்கும் ஒப்பாக காட்சியளிக்க விரும்புவதும் பெரும் சோதனையான நிலைதான். அதிலும் குறிப்பாக, மார்க்கக் கல்வியுடன் தொடர்புடைய வராகவும் அதனை போதிப்பவராகவும் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் இவ்வாறு செய்வது மிகப்பெரிய சோதனையே! -இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்-

அல்லாஹ் நமக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் நபி வழியை உறுதியாகப் பற்றிப்பிடித்து, அதன் வழிநடக்கவும், அதன்பால் பிறரை அழைக்கவும் வழிகாட்டுவானாக! -அவ்வழியை பலர் புறக்கணித்தாலும் சரியே!-

அல்லாஹ் நமக்குப் போதுமானவன்! அவனே சிறந்த பொறுப்பாளன்! மகத்துவமிக்க, மிக உயர்ந்தவனான அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டு) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

பிறகு, ஆண்கள் ஒரு மேலாடையையும் ஒரு கீழாடையையும் (இஹ்ராமாக) அணிந்து கொள்ள வேண்டும். அவை தூய்மையாகவும் வெண்மையாகவும் இருப்பது விரும்பத் தக்கது. மேலும் இஹ்ராமின் போது செருப்பு அணிந்திருப்பதும் விரும்பத்தக்க செயலாகும்.

( . . وَلْيُحْرِمْ أَحَدُكُمْ فِي إِزَارٍ وَرِدَاءٍ وَنَعْلَيْنِ . . )

உங்களில் ஒருவர் ஒரு மேலாடையுடனும் ஒரு கீழாடையுடனும் செருப்புகளுடனும் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துக் கொள்ளட்டும்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : அஹ்மத்)

பெண்களைப் பொருத்தவரை கறுப்பு, பச்சை நிறம் உட்பட தான் விரும்பிய எந்த நிற ஆடைகளிலும் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவை ஆண்களின் ஆடைகளுக்கு ஒப்பாக இருக்கக் கூடாது. மேலும் அவர்கள் இஹ்ராமுடைய நிலையில் நிகாப் (கண்கள் மட்டும் தெரியுமாறு முகத்தை மறைக்கும் ஆடை) அணிவதும் கை உறைகள் அணிவதும் கூடாது. நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்த பெண்கள் நிகாப் மற்றும் கை உறை அணிவதைத் தடுத்துள்ளார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு உமர் -ரலி, நூல் : புகாரீ )

எனினும் நிகாப் மற்றும் கை உறை தவிர உள்ள ஆடைகளைக் கொண்டு முகத்தையோ, கைகளையோ மறைத்துக் கொள்ளலாம்.

பொதுமக்களில் சிலர் பெண்கள் பச்சை அல்லது கருப்பைத் தவிர வேறு (நிற) ஆடைகளை இஹ்ராமாக அணியக் கூடாது என்று கருதுகின்றனர். இவ்விருநிறங்களையும் குறிப்பாக்கு வதற்கு (மார்க்கத்தில்) எந்த ஆதாரமும் கிடையாது.

குளித்து, தூய்மையாகி, இஹ்ராமுடைய ஆடையை அணிந்த பிறகு தான் நிறைவேற்ற விரும்பும் ஹஜ் அல்லது உம்ரா வழிபாட்டைத் துவங்குதாக மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும்.

( إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى . . )

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எண்ணியதே கிடைக்கின்றது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : உமர் -ரலி, நூல் : புகாரீ)

மேலும் அவர் நினைத்ததை நாவினால் மொழிவது ஸ{ன்னத்தாகும். அவர் உம்ராச் செய்ய நினைத்திருந்தால் லப்பைக்க உம்ரதன் என்றோ, அல்லாஹும்ம லப்பைக்க உம்ரதன் என்றோ கூறவேண்டும். அவர் ஹஜ் செய்ய நினைத்திருந்தால் லப்பைக்க ஹஜ்ஜன் என்றோ, அல்லாஹும்ம லப்பைக்க ஹஜ்ஜன் என்றோ கூறவேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள்.

அவர் இவ்விரண்டையும் நிறைவேற்ற நினைத்திருந்தால் அல்லாஹும்ம லப்பைக்க உம்ரதன் வஹஜ்ஜன் என்று கூறவேண்டும். மேலும் இதனை தனது வாகனமான கால்நடை அல்லது பேருந்து அல்லது இவைதவிர உள்ள வாகனத்தில் அமர்ந்த பின்னர் கூறுவதே சிறந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் தமது வாகனத்தில் அமர்ந்து, இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கும் எல்லையை கடக்கும் போதுதான் தல்பியாக் கூறினார்கள். இதுவே அறிஞர்களின் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றாகும்.

(பொதுவாக) நிய்யத்தை நாவால் மொழிவதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. எனினும் இஹ்ராமின் போது நபி (ஸல்) அவர்கள் நாவினால் மொழிந்ததாக ஹதீஸ் வந்துள்ளதால் இஹ்ராமின் போது மட்டும் நாவினால் மொழிய அனுமதியுள்ளது.

தொழுகை, தவாஃப் போன்ற எதிலும் நிய்யத்தை நாவால் மொழியக் கூடாது. -குறிப்பிட்ட- இந்தத் தொழுகையைத் தொழ நிய்யத் செய்கிறேன் என்றோ, -குறிப்பிட்ட- இந்த தவாஃப் செய்ய நிய்யத் செய்கின்றேன் என்றோ நாவினால் மொழியக் கூடாது. மாறாக இவ்வாறு நாவினால் மொழிவது

மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட செயலாகும். இதனை (பிறர் கேட்கும் அளவு); சப்தமாகக் கூறுவது மிக அருவருப்பான செயலும் பெருங்குற்றமுமாகும். நிய்யத்தை நாவினால் மொழிவதுதான் மார்க்கச் சட்டம் என்றிருந்தால் அதனை நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக விளக்கிக் கூறியிருப்பார்கள். அதனை தம் சொல்லாலும் செயலாலும் சமுதாயத்திற்கு தெளிவாக்கியிருப்பார்கள். அதனை நமக்கு முன் சென்ற நல்லோர்(களான ஸஹாபாக்)கள் நடைமுறைப் படுத்தியிருப்பார்கள். ஆனால் இவ்வாறு நபி (ஸல்) அவர்களோ, அவர்களின் தோழர்களோ செய்ததாக எந்த ஆதாரமும் இல்லாதிருப்பது நிச்சயமாக இது பித்அத்தான செயல் என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

( . . وَشَرُّ الْأُمُور مُحْدَثَاتُهَا وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ . . )

-மார்க்கத்தில்- புதிதாக உருவாக்கப்பட்டவைகள் செயல்களில் மிகக் கெட்டவைகளாகும். -மார்க்கத்தில்- புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து -பித்அத்து-ம் வழிகேடாகும்.

(அறிவிப்பவர் : ஜாபிர் -ரலி, நூல் : முஸ்லிம்)

( مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ مِنْهُ فَهُوَ رَدٌّ )

நம்முடைய -மார்க்க- விஷயத்தில் அதில் இல்லாததை யாரேனும் புதிதாக உருவாக்கினால் அது -அல்லாஹ் விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல்- மறுக்கப்பட்டுவிடும்.

(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( مَنْ عَمِلَ عَمَلًا لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ )

யாரேனும் -மார்க்கத்தில்- நாம் கட்டளையிடாத ஏதேனும் ஒரு செயலைச் செய்தால் அது -அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல்- மறுக்கப்பட்டுவிடும்.

(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூல் : முஸ்லிம்)

## 4. இஹ்ராமிற்காக நிய்யத் வைக்க வேண்டிய இடங்களும் எல்லைகளும்

இஹ்ராமிற்காக நிய்யத் வைக்க வேண்டிய எல்லைகள் (மீகாத்) : ஐந்து

1- துல்ஹுலைஃபா: இது மதீனா வாசிகளுக்குரிய எல்லையாகும். இதனை இன்று அப்யார் அலி என மக்கள் அழைக்கின்றனர்.

2- ஜுஹ்ஃபா: இது ஷாம் (பலஸ்த்தீன், சிரியா, லெபனான், ஜோர்டான்) தேசத்தினருக்குரிய எல்லையாகும். இது ராபிக் எனும் ஊரை அடுத்துள்ள அழிந்துவிட்ட ஒரு கிராமமாகும். இன்று மக்கள் ராபிகிலிருந்தே இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கின்றனர். ராபிகிலிருந்து இஹ்ராமிற்காக நிய்யத் வைத்தவர் -மீகாத்- எல்லையிலிருந்து நிய்யத் வைத்தவராகவே கருதப்படுவார். ஏனெனில் ராபிக் எனும் ஊர் எல்லைக்கு சற்று முன்னர்தான் உள்ளது.

3- கர்னுல் மனாஸில்: இது நஜ்த் (ரியாத், தம்மாம்) வாசிகளுக்குரிய எல்லையாகும். இதனை இன்று ஸைல் என்று அழைக்கின்றனர்.

4- யலம்லம்: இது யமன் தேசத்தினருக்குரிய எல்லையாகும்.

5- தாதுஇர்க்: இது ஈராக் வாசிகளுக்குரிய எல்லையாகும்.

நபி (ஸல்) அவர்கள் இந்த எல்லைகளை நாம் மேலே குறிப்பிட்டவர்களுக்கும் ஹஜ், உம்ரா செய்யும் நோக்கத்தில் அவ்வழியில் வருகின்ற பிறருக்கும் எல்லைகளாக நிர்ண யித்தார்கள். எனவே -ஹஜ், உம்ராவிற்காக- அவ்வழியில் செல்பவர் அங்கிருந்து இஹ்ராமிற்காக நிய்யத் வைப்பது கடமை யாகும். ஹஜ், உம்ராச் செய்யும் நோக்கமிருந்தும் இஹ்ராமின்றி அவ்வழிகளைக் கடப்பது கூடாது. அவ்வாறு கடப்பது தரை மார்க்கமாகவோ, ஆகாயமார்க்கமாகவோ இருந்தாலும் சரியே! ஏனெனில் எல்லைகளை நிர்ணயித்த நபி (ஸல்) அவர்கள்

( . . فَهُنَّ لَهُنَّ وَلِمَنْ أَتَى عَلَيْهِنَّ مِنْ غَيْرِ أَهْلِهِنَّ مِمَّنْ أَرَادَ الْحَجَّ وَالْعُمْرَةَ . . )

அந்த எல்லைகள் அவர்களுக்கும் (அதாவது அந்தந்த தேசத்தினருக்கும்) ஹஜ், உம்ரா நோக்கத்தில் அவ்வழியைக் கடந்து செல்லும் அவர்களல்லாத பிறருக்கும் உரியன என்று எல்லைகளைப் பொதுவாகக் கூறியுள்ளார்கள். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூல் : முஸ்லிம்)

ஹஜ், உம்ராச் செய்வதற்காக மக்காவிற்கு விமானத்தில் வருபவர் அதில் ஏறும் முன்னரே குளிப்பு போன்ற தேவைகளை நிறைவேற்றி ஆயத்தமாகிக் கொள்ளவேண்டும். எல்லையை நெருங்கும் போது இஹ்ராமுடைய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். (ஹஜ்ஜுக்கு முன்) உம்ராச் செய்ய போதிய அவகாசம் இருந்தால் உம்ராவிற்காக தல்பியாச் சொல்லிக் கொள்ள வேண்டும். ஹஜ்ஜுக்கு முன் உம்ராச் செய்ய அவகாசம் மிகக் குறைவாக இருந்தால் ஹஜ்ஜிற்காக தல்பியாச் சொல்லிக் கொள்ள வேண்டும்.

விமானத்தில் ஏறுவதற்கு முன்னரோ அல்லது எல்லையை நெருங்குவதற்கு முன்னரோ இஹ்ராமுடைய ஆடைகளான மேலாடை மற்றும் கீழாடையை அணிந்து கொள்வதில் தவறில்லை. எனினும் எல்லையைக் கடக்கும் போது அல்லது அதனை நெருங்கிய பின்னர்தான் (ஹஜ், உம்ரா) வழிபாட்டை ஆரம்பிப்பதாக எண்ணி, தல்பியாக் கூறவேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் எல்லையில்தான் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்தார்கள். நபி (ஸல்) அவர்களை மார்க்கத்தின் மற்ற காரியங்களில் பின்பற்றுவது கடமையாக இருப்பது போன்று இதிலும் பின்பற்றுவது அவசியமாகும்.

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللهِ أُسْوَةٌ حَسَنَةٌ

நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கிறது என அல்லாஹ் கூறுகிறான்
(அல்குர்ஆன் 33:21)

( خُذُوْا عَنِّيْ مَنَاسِكَكُمْ )

என்னிடமிருந்து உங்களுடைய ஹஜ்ஜின் கிரியைகளை எடுத்துக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவின்; போது கூறினார்கள். (நூல் : பைஹகீ, முஸ்லிம்)

ஹஜ், உம்ராச் செய்யும் எண்ணம் இல்லாமல் மக்காவுக்கு வருகை தரும் வியாபாரி, எரிபொருள் மற்றும் தபால் வினியோகம் செய்பவர் போன்றோர் (ஹஜ், உம்ராச் செய்ய) விரும்பினாலே தவிர அவர்கள் இஹ்ராம் அணிய வேண்டிய தில்லை. ஏனெனில் எல்லைகளைப் பற்றி வந்துள்ள மேற்கண்ட நபிமொழியில் :

( . . فَهُنَّ لَهُنَّ وَلِمَنْ أَتَى عَلَيْهِنَّ مِنْ غَيْرِ أَهْلِهِنَّ مِمَّنْ أَرَادَ الْحَجَّ وَالْعُمْرَةَ . . )

-இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கவேண்டிய- அந்த எல்லைகள் அவர்களுக்கும் (அதாவது அந்தந்த தேசத்தினருக்கும்) ஹஜ், உம்ராச் செய்யும் நோக்கத்தில் அவ்வழியைக் கடந்து செல்லும் அவர்களல்லாத பிற பகுதியினருக்கும் உரியன என்று வந்துள்ளது. இதன் மூலம் ஹஜ், உம்ராவின் நோக்கமின்றி எல்லைகளைக் கடப்பவர் இஹ்ராம் அணியவேண்டியதில்லை என்பதை அறியலாம். - இது அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்த கிருபையும் அவர்கள் மீது காட்டிய கருணையுமாகும். இதற்கான அனைத்துப்புகழும் நன்றியும் அவனுக்கே உரியன.

மக்காவை வெற்றி கொண்ட ஆண்டு மக்காவிற்கு வருகை தந்த நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்திருக்கவில்லை. மாறாக தலையில் கவசத் தொப்பி அணிந்திருந்த நிலையில் தான் மக்காவிற்குள் நுழைந்தார்கள் என்பது இக்கூற்றை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் அவர்கள் அப்போது ஹஜ், உம்ராவின் எண்ணத்தில் வருகை தரவில்லை. மாறாக மக்காவை வெற்றி கொண்டு, அங்குள்ள இணை(வைப்புச் சாதனங்களான சிலைக)ளை அப்புறப்படுத்தும் நோக்கத்தில்தான் வருகை தந்தார்கள்.

எல்லையின் உட்பகுதிகளான ஜித்தா, உம்மு சுலம், பஹ்ரா, அஷ்ஷராயிஃ, பத்ர், மஸ்தூரா போன்ற ஊர்களில் வசிப்பவர் கள் மேற்கூறப்பட்டுள்ள ஐந்து எல்லைகளில் எதற்கும் செல்ல வேண்டியதில்லை. மாறாக அவர்கள் வசிக்கும் இடமே அவர் களின் எல்லையாகும். அங்கிருந்தே ஹஜ், உம்ராவின் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்து கொள்ளலாம்.
(எல்லைக்குள் வசிக்கும்) ஒருவருக்கு எல்லைக்கு வெளியே மற்றொரு வீடு

இருந்தால் அவர் எல்லையிலிருந்தோ, அல்லது அதைவிட மக்காவிற்கு மிக அருகில் இருக்கும் தனது வீட்டிலிருந்தோ இவ்விரண்டில் தான் விரும்பிய இடத்திலிருந்து இஹ்ராம் அணிந்து கொள்ள அனுமதியுள்ளது.
எல்லைகளைப் பற்றி குறிப்பிடும் ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள்

(فَمَنْ كَانَ دُونَهُنَّ فَمِنْ أَهْلِهِ حَتَّى إِنَّ أَهْلَ مَكَّةَ يُهِلُّونَ مِنْهَا)

-இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கவேண்டிய- அந்த எல்லை களுக்கு உட்பகுதியில் இருப்பவர்கள் தன் வீட்டிலிருந்தே இஹ்ராம் அணிந்து கொள்ள வேண்டும். எதுவரையெனில், மக்கா வாசிகள் மக்காவிலிருந்தே இஹ்ராம் அணிந்து கொள்வார்கள் எனக் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : இப்னுஅப்பாஸ்-ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

ஹரம் எல்லையினுள் இருப்பவர் உம்ராச் செய்ய நாடினால் அவர் ஹரமுடைய எல்லையை விட்டும் வெளியேறி (ஹில்லுடைய பகுதிக்கு)ச் சென்று அங்கிருந்து உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் ஆயிஷா (ரலி) அவர்கள் உம்ராச் செய்ய வேண்டுமென கூறியபோது, அவர்களை ஹரமுடைய எல்லையை விட்டும் வெளியே அழைத்துச் சென்று அங்கிருந்து இஹ்ராமிற்காக நிய்யத் வைத்து, அழைத்து வருமாறு அவர்களின் சகோதரர் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.
(அறிவிப்பவர்: அப்துர் ரஹ்மான் -ரலி, நூல் : இப்னுமாஜா)

உம்ராச் செய்பவர் ஹரமுடைய எல்லையினுள் இஹ்ராம் அணியக்கூடாது, மாறாக உம்ராவிற்காக ஹரமுடைய எல்லையை விட்டும் வெளியில்தான் இஹ்ராம் அணிய வேண்டும் என்பதை இச்செய்தி அறிவிக்கிறது.

எல்லையைப் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கும் மேற்கண்ட நபிமொழியின் (பொதுவான) சட்டத்தை இந்த நபிமொழி குறிப்பான சட்டமாக்கி விட்டது. அதாவது, அதில் மக்காவாசிகள் மக்காவிலிருந்தே இஹ்ராம் அணிய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியது ஹஜ்ஜுக்குரியதுதானே தவிர உம்ராவிற்குரியது அல்ல (என்பதை -ஆயிஷா

(ரலி) அவர்களின் சம்பவத்தின் வாயிலாக அறியலாம்).

ஹரமின் எல்லையிலிருந்தே உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்து கொள்ள அனுமதியிருந்திருந்தால் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களை ஹரமை விட்டும் வெளியேறிச் செல்லக் கட்டளையிடாமல், அவர்கள் தங்கியிருந்த (ஹரம்) பகுதியிலிருந்தே இஹ்ராம் அணிய அனுமதித்திருப்பார்கள். இது மிகத் தெளிவான செய்தியாகும். இதுவே மார்க்க அறிஞர்கள் பெரும்பாலானோரின் கூற்றாகும். இம்முடிவின் மூலம்தான் இரு நபிமொழிகளையும் ஒருங் கிணைத்துச் செயல்பட முடியும். எனவே இதுவே முஃமினுக்குப் பேணுதலான முடிவாகும்.
-அல்லாஹ் நேர்வழிகாட்டப் போதுமானவன் -

ஹஜ்ஜுக்கு முன்பு உம்ராச் செய்துவிட்டவர்களில் சிலர், ஹஜ்ஜுக்குப் பிறகு தன்யீம் அல்லது ஜிஃரானா போன்ற இடங்களிலிருந்து (இஹ்ராம் அணிந்து) அதிகமான உம்ராக்களைச் செய்கின்றனர். இதற்கு மார்க்கத்தில் எந்த ஆதாரமும் கிடையாது. மாறாக அவ்வாறு செய்யாமல் இருப்பதே சிறந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

நபி (ஸல்) அவர்களோ, நபித் தோழர்களோ ஹஜ்ஜை நிறைவேற்றியதற்குப் பிறகு உம்ராச் செய்யவில்லை. ஆயிஷா (ரலி) அவர்கள் தன்யீமிலிருந்து உம்ராச் செய்ததற்குக் காரணம் அவர்கள் மக்காவில் நுழையும் போது மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதால் மக்களுடன் சேர்ந்து உம்ராச் செய்யமுடிய வில்லை. அதனால் அவர்கள் எல்லையிலிருந்து உம்ராவிற்காக அணிந்த இஹ்ராமிற்கு பகரமாக ஒரு உம்ராச் செய்ய வேண்டுமென வேண்டியபோது நபி (ஸல்) அவர்கள் அதற்கு அனுமதித்தார்கள். எனவே அவர்கள் இரண்டு உம்ராக்களை நிறைவேற்றியவரானார்கள். ஒன்று ஹஜ்ஜுடன் இணைந்த உம்ரா. மற்றொன்று தனியாகச் செய்த உம்ரா.

ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட நிலையைப் போன்று எவருக்கேனும் ஏற்பட்டால் இந்த ஆதாரங்களின் அடிப்படையிலும் அது முஸ்லிம்களுக்கு

பொதுச் சலுகை என்ற அடிப்படையிலும் ஹஜ்ஜுக்குப் பிறகு (ஒரு) உம்ராச் செய்வதில் தவறில்லை.

ஹஜ் செய்பவர் மக்காவில் நுழையும் போது செய்த உம்ராவைத் தவிர ஹஜ்ஜுக்குப் பிறகு மற்றொரு உம்ராவில் ஈடுபடுவது பொதுமக்களுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்பதில் சந்தேகமில்லை. மேலும் அது அதிக நெரிசலுக்கும் விபத்துகளுக்கும் காரணமாக அமைகிறது. அதற்கெல்லாம் மேலாக, இது நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கும் நடைமுறைக்கும் மாற்றமாக அமைந்துள்ளது.
- அல்லாஹ் நேர்வழி காட்டப் போதுமானவன்-

## 5. ஹஜ்ஜுடைய காலங்கள் அல்லாத நாட்களில் எல்லையை அடைபவருக்குரிய சட்டம்

அறிந்து கொள்ளுங்கள்! -இஹ்ராமிற்காக நிய்யத் வைக்கும்- எல்லையை அடைபவருக்கு இரண்டு நிலைகள் உள்ளன.

முதலாம் நிலை : ஒருவர் ஹஜ்ஜுடைய மாதங்களல்லாத ஷஃபான், ரமலான் போன்ற மாதங்களில் எல்லையை அடைவது.

இவர் உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்து, அதனை மனதால் நினைத்து லப்பைக்க உம்ரதன் என்றோ, அல்லாஹும்ம லப்பைக்க உம்ரதன் என்றோ நாவால் மொழிவார். பிறகு நபி (ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் தல்பியாவைக் கூறுவார்.

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْك، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْك، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْك، لاَ شَرِيْكَ لَكَ

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்! லப்பைக்க லா ஷரீக்க லக்க லப்பைக்! இன்னல் ஹம்த வன்னிஃமத்த லக்க வல் முல்க்! லாஷரீக்க லக்!

(கருத்து: யாஅல்லாஹ் உன் அழைப்பை ஏற்று வந்துள்ளேன்! உனக்கு இணை யாருமில்லை. நிச்சயமாக அனைத்துப் புகழும், அனைத்து அருட்கொடைகளும் ஆட்சி அதிகாரமும் உனக்கே உரியன! உனக்கு இணை யாருமில்லை!)

இந்த தல்பியாவையும் அல்லாஹ்வை நினைவு கூறும் திக்ர்களையும் கஃபாவை வந்தடையும் வரை அதிகமாகக் கூறிக் கொண்டிருக்கவேண்டும். கஃபாவை வந்தடைந்தவுடன் தல்பியாவை நிறுத்தி விட்டு, கஃபாவை ஏழு முறை வலம் வந்து -தவாஃப்- செய்யவேண்டும். பிறகு மகா(ம் இப்ராஹீ)முக்குப் பின் பகுதியில் இரண்டு ரகஅத்கள் தொழுவார். பிறகு ஸஃபாவை நோக்கிச் சென்று ஸஃபா, மர்வாவிற்கு மத்தியில் ஏழு சுற்றுக்கள் சுற்றி -ஸயீ- செய்ய வேண்டும். பிறகு தலை முடியை மழித்துக் கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ வேண்டும். இத்துடன் உம்ராவின் கிரியைகள் நிறைவடைந்துவிடும். இதற்குப் பிறகு இஹ்ராமின் காரணத்தால் தடுக்கப்பட்ட காரியங்கள் அனைத்தும் ஹலால் ஆகிவிடும்.

இரண்டாம் நிலை : ஒருவர் ஷவ்வால், துல்கஃதா மற்றும் துல்ஹஜ்ஜின் முந்தய 10 நாட்கள் ஆகிய ஹஜ்ஜுடைய மாதங்களில் எல்லையை அடைவது.

இவர் ஹஜ்ஜை மட்டும் நிறைவேற்றும் இஃப்ராதையோ, ஹஜ்ஜையும் உம்ராவையும் பிரித்து நிறைவேற்றும் தமத்துஃவுக்குரிய உம்ராவையோ, அல்லது இரண்டையும் இணைத்து நிறைவேற்றும் கிரானாகவோ ஆக இம்மூன்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவி;ன் போது துல்கஃதா மாதத்தில் எல்லையை அடைந்தபோது இம்மூன்று வழிபாடுகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள தோழர்களுக்கு அனுமதியளித்தார்கள்.

எனினும் ஹதி எனும் பலிப்பிராணியை தன்னுடன் கொண்டு வராதவர்கள் உம்ராவிற்காக நிய்யத் வைத்து இஹ்ராம் அணிந்து கொள்வதே சுன்னத்தாகும். அதன் பிறகு அவர் -ஹஜ்ஜுடைய காலங்கள் அல்லாத பிற காலத்தில் எல்லையை அடைந்தவர் விஷயத்தில் நாம் மேற்கூறிய முறையில் (உம்ரா) கிரியைகளை நிறை வேற்ற வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மக்காவை நெருங்கியபோது (ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்திருந்த) தமது தோழர்களுக்கு, அவர்களின் இஹ்ராமை உம்ராவிற்காக மாற்றிக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். அதனை மக்கா வந்தடைந்த பின்னரும் வலியுறுத்தினார்கள். நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க நபித்தோழர்களும் தவாஃப் மற்றும் ஸயீ செய்து முடியைக் குறைத்து இஹ்ராமைக் களைந்தார்கள்.

தன்னுடன் பலிப்பிராணியை கொண்டுவந்தவர்கள் துல்ஹஜ் 10-ம் நாளில் இஹ்ராமை களையும்வரை இஹ்ராமுடனேயே இருக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டி ருந்தார்கள். அதனால் அவர்களைத் தவிர மற்ற அனைவரும் உம்ராவிற்குப் பின் இஹ்ராமைக் களைந்து விட்டனர். பலிப் பிராணியை தன்னுடன் கொண்டுவருபவர் ஹஜ், உம்ரா இரண்டிற்காகவும் சேர்த்து (கிரானாக) நிய்யத் வைத்து இஹ்ராம் அணிவது சுன்னத்தாகும். ஏனெனில் பலிப் பிராணியை தன்னுடன் கொண்டுவந்த நபி (ஸல்) அவர்கள் இவ்வாறே செய்தார்கள்.

பலிப்பிராணியுடன் உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்திருந்த தமது தோழர்களுக்கு உம்ராவுடன் ஹஜ்ஜையும் இணைத்து (கிரானாக) தல்பியாச் சொல்லுமாறும் அவ்விரண்டையும் 10-ம் நாளில் நிறைவு செய்யும் வரை இஹ்ராமைக் களையக் கூடாது என்றும் கட்டளையிட்டார்கள்.

பலிப்பிராணியை தன்னுடன் கொண்டுவந்தவர் ஹஜ்ஜுக்காக மட்டும் (இஃப்ராதாக) இஹ்ராம் அணிந்திருந்தாலும் -கிரான் ஹஜ் செய்பவர் போன்று- 10-ம் நாள் வரை இஹ்ராமுடனேயே இருக்க வேண்டும்.

பலிப்பிராணியை தன்னுடன் கொண்டுவராதவர் ஹஜ்ஜை மட்டும் நிறைவேற்றும் இஃப்ராதாகவோ, அல்லது ஹஜ், உம்ரா இரண்டையும் இணைத்து நிறைவேற்றும் கிரானாகவோ இஹ்ராம் அணிந்திருந்தால் (10-ம் நாள் வரை) அவர் இஹ்ராமுடனேயே இருக்கத் தேவையில்லை. மாறாக அவர் தனது இஹ்ராமை உம்ராவிற்குரியதாக மாற்றிக் கொண்டு தவாஃப் மற்றும் ஸயீ செய்து முடியைக் குறைத்து இஹ்ராமைக் களைந்துவிடுவதே சுன்னத்தாகும் என்பதை இதன் மூலம் அறியலாம். நபி (ஸல்) அவர்கள் பலிப் பிராணியைத் தன்னுடன் கொண்டுவராத தமது தோழர்களுக்கு இவ்வாறே கட்டளையிட்டார்கள். எனினும் தாமதமாக (மக்காவிற்கு) வருகை தருபவர் இவ்வாறு (உம்ராச்) செய்வதினால் ஹஜ் செய்ய முடியாது போய்விடும் என்று பயப்படுவாரானால் அவர் தனது இஹ்ராமுடனேயே இருந்து ஹஜ்ஜை நிறைவேற்றுவதால் குற்றமில்லை.
-அல்லாஹ் மிக அறிந்தவன்-

இஹ்ராம் அணிபவர் நோய் அல்லது எதிரியின் பயம் போன்றவற்றால் தனது (ஹஜ், உம்ரா) வழிபாட்டை நிறைவேற்றமுடியாமல் போகலாம் என்று பயப்படுவாரானால் அவர் இஹ்ராம் அணியும் போது, (ஹஜ், உம்ராவை நிறைவேற்ற முடியாதவாறு) ஏதாவது ஒரு தடை என்னைத் தடுத்து விட்டால் நீ என்னைத் தடுத்த இடமே நான் இஹ்ராமைக் களையுமிடம் எனக் கூறுவது விரும்பத்தக்க செயலாகும்.

ளுபாஆ பின்த் சுபைர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நோயாளியாக இருக்கும் நான் ஹஜ் செய்ய விரும்புகிறேன்! (இந்நிலையில் நான் எவ்வாறு நடந்து கொள்வது?) என்று கேட்டபோது, நீ என்னைத் தடுக்குமிடமே நான் இஹ்ராமைக் களையுமிடம்! என்ற நிபந்தையுடன் நீ ஹஜ் செய்! என்று பதிலளித்தார்கள்.
(நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

இந்த நிபந்தனையின் பயன் யாதெனில், இஹ்ராம் அணிந்தவரை அவரது வழிபாட்டை முழுமையாக நிறை வேற்றுவதை விட்டும் நோயோ அல்லது எதிரியோ தடுத்துவிட்டால் அவ்விடத்திலேயே இஹ்ராமைக் களைந்து விடலாம். மேலும் அதற்காக எந்தக் குற்றப் பரிகாரமும் செய்யத் தேவையில்லை.

## 6. சிறு குழந்தைகளின் ஹஜ், அவர்களின் கடமையான ஹஜ்ஜுக்கு நிகராகுமா?

சிறுவர், சிறுமியர்களின் ஹஜ் மார்க்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.
ஒரு பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் ஒரு குழந்தையை உயர்த்திக் காண்பித்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இக்குழந்தையும் ஹஜ் செய்யலாமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஆம்! அதன் நன்மை உனக்குக் கிடைக்கும் என்றார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூல் : முஸ்லிம்)

நான் ஏழு வயதுடையவனாக இருக்கும் போது நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்ய வைக்கப்பட்டுள்ளேன் என அஸ்ஸாயிப் பின் யஜீத் (ரலி) கூறுகிறார்கள். (நூல் : புகாரீ)

எனினும் இவ்விருவருடைய ஹஜ்ஜும் இஸ்லாத்தின் கடமையான ஹஜ்ஜிற்கு நிகரானதாகாது.

இதுபோன்றே அடிமைகள் மற்றும் அடிமைப் பெண்களின் ஹஜ்ஜும்

மார்க்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அவர்களின் ஹஜ் இஸ்லாத்தின் கடமையான ஹஜ்ஜுக்கு நிகராகாது.

( أَيُّمَا صَبِيٍّ حَجَّ ثُمَّ بَلَغَ الْحِنْثَ فَعَلَيْهِ أَنْ يَحُجَّ حَجَّةً أُخْرَى، وَأَيُّمَا عَبْدٍ حَجَّ ثُمَّ أُعْتِقَ فَعَلَيْهِ حَجَّةٌ أُخْرَى )

ஏதேனும் ஒரு குழந்தை ஹஜ் செய்து, அதன் பிறகு அவர் பருவ வயதை அடைந்தால் (ஹஜ் செய்வதற்கு சக்தியும் வசதியும் பெற்றிருந்தால்) மற்றொரு முறை ஹஜ் செய்வது அவர்மீது கடமையாகும். யாரேனும் ஒரு அடிமை ஹஜ் செய்து, அதன் பிறகு அவர் உரிமை விடப்பட்டால் (ஹஜ் செய்வதற்கு சக்தியும் வசதியும் பெற்றிருந்தால்) மற்றொரு முறை ஹஜ் செய்வது அவர்மீது கடமையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூற்கள் : இப்னு அபீஷைபா, பைஹகீ)

விபரமறியாத சிறுவராக இருந்தால் அவரின் பொறுப்பாளர் அச்சிறுவரின் தைக்கப்பட்ட ஆடையை களைந்து (இஹ்ராம் உடையை அணிவித்து) இஹ்ராம் அணிந்ததாக எண்ணி, அச்சிறுவருக்காக தல்பியாக் கூறிக் கொள்ளவேண்டும். இதன் மூலம் அச்சிறுவர் இஹ்ராம் அணிந்தவராகிவிடுவார். எனவே இஹ்ராம் அணிந்த பெரியவருக்குத் தடுக்கப்பட்ட அனைத்தும் அச்சிறுவருக்கும் தடுக்கப்பட்டதாகிவிடும்.

இதுபோல் விபரமறியாத சிறுமியாக இருந்தால் அவருடைய பொறுப்பாளர் அவருக்குப் பகரமாக இஹ்ராம் அணிவதாக எண்ணிக் கொண்டு, தல்பியாக் கூறவேண்டும். இதன் மூலம் அச்சிறுமி இஹ்ராம் அணிந்தவளாகிவிடுவாள். இதன் பிறகு இஹ்ராம் அணிந்த பெண்களுக்குத் தடுக்கப்பட்ட அனைத்தும் அச்சிறுமிக்கும் தடுக்கப்பட்டதாகிவிடும்.

தவாஃபின் போது (சிறுவர், சிறுமி ஆகிய) இருவரின் உடல் களும் உடைகளும் தூய்மையாக இருப்பது அவசியம். தவாஃப் என்பது தொழுகையைப் போன்றதாகும். எனவே அது நிறைவேற தூய்மையாக இருப்பது நிபந்தனையாகும்.

சிறுவரும் சிறுமியும் விபரமறியும் பருவமுடையவர்களாக இருந்தால் அவர்களுடைய பொறுப்பாளர்களின் அனுமதியுடன் இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும். இஹ்ராம் அணியும் போது குளித்தல், நறுமணம் பூசுதல் போன்ற பெரியவர்கள் செய்யும் அனைத்தையும் அவ்விருவரும் செய்துகொள்வார்கள். எனினும் அவ்விருவரின் அனைத்துச் செயல்களையும் முறையாக நிறைவேற்ற வைப்பது அவர்களுடைய பொறுப்பாளர்களின் கடமையாகும். பொறுப்பாளராக அவர்களின் தந்தையோ, தாயோ அல்லது இவர்கள் தவிர உள்ள பிறரோ இருந்து கொள்ளலாம்.

சிறுவர்களால் நிறைவேற்ற முடியாத கல்லெறிதல் போன்ற செயல்களை அவர்களுக்குப் பகராமாக அவர்களின் பொறுப்பாளர்கள் நிறைவேற்ற வேண்டும். இவை தவிர, அரஃபா, மினா, முஸ்தலிஃபா ஆகிய இடங்களில் தங்குவது, தவாஃப், ஸயீ செய்வது போன்றவைகளை (சிறுவர், சிறுமிகளான) அவர்களே நிறைவேற்றுவது கடமையாகும்.

தவாஃப், ஸயீ செய்ய அவர்களால் இயலாவிட்டால் அவர்களை சுமந்து கொண்டு தவாஃப், ஸயீ செய்ய வைக்க வேண்டும். சிறுவர்களை சுமந்து செல்பவர் தான் செய்யும் தவாஃபையும் ஸயீயையும் தனக்காகவும் அவர்களுக்காகவும் ஆக்கிக் கொள்ளாமலிருப்பது சிறந்ததாகும். மாறாக அவ்விருவருக்குமுரிய தவாஃப், ஸயீ என நினைத்து அதனை நிறைவேற்றவேண்டும். பிறகு தனக்காக ஒரு தவாஃபும் ஒரு ஸயீயும் செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதே வணக்கங்களில் பேணிக்கையான முறையும், சந்தேகமானதை விட்டுவிட்டு சந்தேகமற்றதை எடுத்துக் கொள்! என்ற நபிமொழியின் அடிப்படையில் செயல்படுவதுமாகும்.
(அறிவிப்பவர்: ஹஸன் -ரலி, நூல் : திர்மிதி)

ஆயினும் சிறுவர்களை சுமப்பவர்கள் தனக்காகவும் தான் சுமந்து செல்பவருக்காவும் சேர்த்து தவாஃபும் ஸயீயும் செய்கிறேன் என நினைத்துக் கொண்டால் அது அவ்விருவருக்கும் உரியதாகிவிடும் என்பதே (அறிஞர்களின்) இரு கூற்றுக்களில் சரியான கூற்றாகும். ஏனெனில் நபி

(ஸல்) அவர்களிடம் ஒரு பெண்மணி குழந்தையின் ஹஜ்ஜைப் பற்றிக் கேட்டபோது, அதற்கென தனியாக தவாஃப் செய்ய வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிடவில்லை. அவ்வாறு செய்வது கடமையாக இருந்திருந்தால் நிச்சயமாக அதனை அப்பெண்மணிக்கு நபி (ஸல்) அவர்கள் விளக்கியிருப்பார்கள்.
-நேர்வழிகாட்ட அல்லாஹ் போதுமானவன்-

தவாஃபை ஆரம்பிப்பதற்கு முன்னர் -பெரியவர்களைப் போன்று- சிறுதொடக்கு, அசுத்தம் ஆகியவைகளைவிட்டும் தூய்மையாகிக் கொள்ளுமாறு விபரமறிந்த சிறுவர், சிறுமியர் களுக்குக் கட்டளையிடவேண்டும்.

சிறுவர், சிறுமியரை -ஹஜ், உம்ரா செய்யவைப்பது, அதற்காக- இஹ்ராம் அணிவிப்பது பொறுப்பாளர் மீது கடமையல்ல. மாறாக அது -நஃபிலான- உபரியான செயலாகும். அதனை செய்ய வைத்தால் அதற்குரிய கூலி பொறுப்பாளருக்குக் கிடைக்கும். அவ்வாறு செய்ய வைக்கவில்லையெனில் அதனால் குற்றமேதுமில்லை.
-அல்லாஹ் மிக அறிந்தவன்-

## 7. இஹ்ராமிற்காக நிய்யத் வைத்துள்ளவருக்கு தடுக்கப்பட்டவைகளும் அனுமதிக்கப்பட்டவைகளும்

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இஹ்ராமிற்காக நிய்யத் வைத்தபின் முடி, நகம் எடுப்பதும், நறுமணம் பூசுவதும் கூடாது.
■தைக்கப்பட்ட எந்த ஆடைகளையும் ஆண்கள் அணிவது கூடாது.

முழுமையாக வெட்டித் தைக்கப்பட்ட சட்டை போன்றவைகளும் சிலபகுதிகள் மட்டும் தைக்கப்பட்ட பனியன், பேண்ட், ஷு, சாக்ஸ் போன்றவைகளும் இத்தடையில் அடங்கும். (இஹ்ராமிற்காக) கீழாடை கிடைக்காதவர் பேண்ட் அணிந்து கொள்ள அனுமதியுள்ளது. அதுபோல் செருப்புக் கிடைக்காதவர் ஷு (காலுறை) அணிந்து கொள்ள அனுமதியுள்ளது. (அதனை செருப்பைப் போன்று மாற்றுவதற்காக) அதன் மேற்பகுதியை வெட்டி விடத் தேவையில்லை.

( مَنْ لَمْ يَجِدْ إِزَارًا فَلْيَلْبَسْ سَرَاوِيلَ وَمَنْ لَمْ يَجِدْ نَعْلَيْنِ فَلْيَلْبَسْ خُفَّيْنِ )

-இஹ்ராமிற்காக- கீழாடை கிடைக்காதவர் பேண்ட் அணிந்து கொள்ளட்டும்! செருப்புக் கிடைக்காதவர் காலுறை அணிந்து கொள்ளட்டும்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்-ரலி, நூல்: புகாரீ, முஸ்லிம்)

செருப்புக் கிடைக்காத நிலையில் ஷு (காலுறை) அணிந்தால் அதன் மேற்பகுதியைத் துண்டித்துக் கொள்ளவேண்டும் எனக் கட்டளையிடும் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் உள்ளது. எனினும் இச்சட்டம் பிறகு மாற்றப்பட்டு விட்டது. இஹ்ராம் அணிபவர் அணியவேண்டிய ஆடைகளைப் பற்றி மதினாவில் வினவப்பட்டபோது நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறினார்கள். அதன் பிறகு செருப்பு இல்லாதவர்கள் காலுறை அணிந்து கொள்ளலாம் என அரஃபாவில் உரை நிகழ்த்தும் போது அனுமதித்தார்கள். அதனை துண்டித்துக் கொள்ளுமாறு அவ்வுரையில் கட்டளையிடவில்லை.

மதினாவில் நபி (ஸல்) அவர்களின் பதிலை செவிமடுக் காதவர்களும் இந்தப் பிரசங்கத்தில் கலந்து கொண்டிருந்தனர். -ஒரு சட்டம் சொல்லும்போது- தேவைப்படும் நேரத்தில் விளக்கமளிக்காமல் அதனைப் பிறகு கூறுவதற்கு அனுமதி இல்லை என்பதே ஹதீஸ் மற்றும் சட்டக்கலையில் கடைபிடிக்கப்படும் விதியாகும். எனவே இதன் மூலம் (காலுறையை) வெட்டி விடுவதற்கான கட்டளை மாற்றப்பட்டு விட்டது என்பதே உறுதியாகிறது. அதனை கண்டிப்பாகத் துண்டித்தாக வேண்டும் என்றிருந்தால் நிச்சயமாக

நபி (ஸல்) அவர்கள் அதனைத் தெளிவுபடுத்தி இருப்பார்கள்.
-அல்லாஹ் மிக அறிந்தவன்-

இஹ்ராமிற்காக நிய்யத் வைத்திருப்பவர் கரண்டைக்குக் கீழுள்ள கட்ஷு போன்றவற்றை அணிவதற்கு அனுமதி உள்ளது. ஏனெனில் அதுவும் செருப்பின் வகையைச் சார்ந்தவையே!

கீழாடையை முடிந்து கொள்வதற்கும் கயிறு போன்றவை களால் அவற்றைக் கட்டிக் கொள்வதற்கும் அனுமதி உள்ளது. ஏனெனில் இவ்வாறு செய்யக் கூடாது என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை.

இஹ்ராம் அணிந்துள்ளவர் குளித்துக் கொள்வதற்கும், தலையை கழுவிக் கொள்வதற்கும், தேவையேற்பட்டால் இலேசாக, மிருதுவாகச் சொரிந்து கொள்வதற்கும் அனுமதியுள்ளது. இதனால் தலையிலிருந்து (முடி) ஏதேனும் விழுந்துவிட்டாலும் குற்றமில்லை.

இஹ்ராமான நிலையிலிருக்கும் பெண்கள் முகத்திற்கென தைக்கப்பட்ட ஆடைகளான புர்கா, நிகாப் போன்றவை களையோ, கைக்கெனத் தைக்கப்பட்ட கையுறை போன்றதையோ அணிவது கூடாது.

(இரு கண்களும் தெரியும் விதமாக அணியும் ஆடைக்கு புர்கா என்றும் ஒரு கண் மட்டும் தெரியும் விதமாக உள்ள ஆடைக்கு நிகாப் என்றும் பெயர்)

( . . وَلَا تَنْتَقِبِ الْمَرْأَةُ الْمُحْرِمَةُ وَلَا تَلْبَس الْقُفَّازَيْنِ . . )

இஹ்ராம் அணிந்துள்ள பெண்கள் நிகாப் அணியக் கூடாது.
கையுறைகளையும் அணியக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: இப்னுஉமர்-ரலி, நூல்: புகாரீ)

கையுறை என்பது : கம்பளி அல்லது பஞ்சு போன்றவை களால் -முன்னங்-கைகளின் அளவிற்குத் தைக்கப்பட்ட அல்லது நெய்யப்பட்ட ஆடையாகும்.

இவற்றைத் தவிர உள்ள சட்டை, பேண்ட், ஷூ, சாக்ஸ் போன்ற தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொள்ள பெண்களுக்கு அனுமதியுள்ளது.

அதுபோல் தேவை ஏற்படுமானால் முந்தானையை முகத்தில் தொங்கவிட அனுமதியுள்ளது. ஆனால் அதனை முகத்தில் கட்டிக் கொள்ளக் கூடாது. அவ்வாறு தொங்கவிடும் போது முகத்தில் முந்தானை பட்டாலும் குற்றமில்லை.

( كَانَ الرُّكْبَانُ يَمُرُّونَ بِنَا وَنَحْنُ مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مُحْرِمَاتٌ فَإِذَا حَاذَوْا بِنَا سَدَلَتْ إِحْدَانَا جِلْبَابَهَا مِنْ رَأْسِهَا عَلَى وَجْهِهَا فَإِذَا جَاوَزُونَا كَشَفْنَاهُ )

நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இஹ்ராம் அணிந்தவர்களாக இருந்த போது எங்களை வாகனக் கூட்டத்தினர் கடந்து செல்பவர்களாக இருந்தனர். அவர்கள் எங்களை நெருங்கும் போது எங்கள் தலையிலிருந்த முந்தானைகளை முகத்தில் தொங்கவிட்டுக் கொள்வோம். அவர்கள் எங்களைக் கடந்த பிறகு அதனை நீக்கிக் கொள்வோம் என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(நூற்கள் : இப்னுமாஜா, அபூதாவூத், உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கும் இதுபோன்ற செய்தி தாரகுத்னீ எனும் நூலிலும் இடம் பெற்றுள்ளது.)

அதுபோல் ஆடை மற்றும் அது போன்றவைகளைக் கொண்டு கைகளை மூடிக் கொள்வதிலும் தவறில்லை.

அந்நிய ஆண்களுக்கு முன்னிலையில் முகத்தையும் முன்கைகளையும் மறைத்துக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் நிச்சயமாக அவைகள் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளாகும். அல்லாஹு தஆலா கூறுகிறான் :

وَلاَ يُبْدِيْنَ زِيْنَتَهُنَّ إِلاَّ لِبُعُوْلَتِهِنَّ

மேலும் அவர்கள் தம் அலங்காரத்தை தம் கணவர்கள் . . . . ஆகியவர்களைத் தவிர வெளிப்படுத்தவேண்டாம். (குர்ஆன் 24:31)

நிச்சயமாக முகமும் முன்கைகளும் அலங்காரப் பகுதிகள் என்பதிலும் அதிலும் முகம் மிகக் கவர்ச்சியுடையது என்பதிலும் சந்தேகமில்லை. அல்லாஹுத் தஆலா கூறுகிறான்:

وَإِذَا سَأَلْتُمُوْهُنَّ مَتَاعًا فَسْئَلُوْهُنَّ مِنْ وَرَاءِ حِجَابٍ ذَلِكُمْ أَطْهَرُ لِقُلُوْبِكُمْ وَقُلُوْبِهِنَّ

மேலும் நீங்கள் (நபியின் மனைவியர்களான) அவர்களிடம் யாதொரு பொருளையும் கேட்(க நேரிட்)டால் நீங்கள் திரைக்கு அப்பால் இருந்து கொண்டே அவர்களிடம் கேளுங்கள்! அ(வ்வாறு செய்வ)து உங்கள் உள்ளங்களுக்கும் அவர்கள் உள்ளங்களுக்கும் பரிசுத்தமானதாகும்.
(அல்குர்ஆன் 33:53)

முகத்தில் ஆடை படாமல் தடுக்க முந்தானைக்குக் கீழ் தொப்பி அணியும் பழக்கம் பல பெண்களிடம் காணப் படுகிறது. நாம் அறிந்தவரை இதற்கு மார்க்கத்தில் எந்த ஆதாரமுமில்லை. இது மார்க்கச் சட்டமாக இருந்திருந்தால் நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் சமுதாயத்தினருக்கு தெளிவு படுத்தியிருப்பார்கள். அதனை கூறாமல் விட்டிருக்கமாட்டார்கள்.

அணிந்துள்ள இஹ்ராம் ஆடையில் அழுக்கு அல்லது அதுபோன்ற ஏதாவது (அசுத்தங்கள்) பட்டுவிட்டால் அதனை கழுவிக் கொள்ளவோ, அல்லது அதுபோன்ற (வேறு இஹ்ராம்) ஆடைகளை மாற்றிக் கொள்ளவோ ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனுமதியுள்ளது.

இஹ்ராம் அணிந்தவர் குங்குமமோ அல்லது வர்ஸ் எனும் நறுமணமிக்க தாவரச் சாயமோ பூசப்பட்ட எந்த ஆடை யையும் அணிவதற்கு அனுமதி கிடையாது. நபி (ஸல்) அவர்கள் இதனைத் தடுத்துள்ளார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு உமர் -ரலி, நூல் : புகாரீ)

இஹ்ராம் அணிந்துள்ளவர் இச்சையான செயல்கள், பாவங்கள், வீண்

தர்க்கங்கள் ஆகியவைகளை விட்டும் விலகிக்கொள்வது கடமையாகும்.
அல்லாஹ் கூறுகிறான்:

اَلْحَجُّ أَشْهُرٌ مَعْلُوْمَاتٌ فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ فَلاَ رَفَثَ وَلاَ فُسُوْقَ وَلاَ جِدَالَ فِي الْحَجِّ

ஹஜ்ஜுக்குரிய காலம் (ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ் மாதத்தின் பத்தாம்நாள் அதிகாலை வரையுள்ள) அறியப்பட்ட மாதங்களாகும். ஆகவே, அவற்றில் எவரொருவர் (இஹ்ராம் கட்டுவதன் மூலம்) ஹஜ்ஜைத் (தன் மீது) கடமையாக்கிக் கொண்டால் தாம்பத்திய உறவு கொள்வதும், கெட்டபேச்சுக்கள் பேசுவதும், வீண் தர்க்கம் செய்வதும் ஹஜ்ஜில் கூடாது.
(அல்குர்ஆன் 2:197)

(مَنْ حَجَّ لِلَّهِ فَلَمْ يرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ)

இச்சையான செயல்களிலும் பாவமான காரியங்களிலும் ஈடுபடாமல் ஹஜ் செய்பவர் -ஹஜ்ஜை நிறைவேற்றித் திரும்பும் போது- அவருடைய தாய் அவரை அன்று பெற்றெடுத்ததைப் போன்று (பாவமற்று) திரும்புகிறார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: அபூஹுரைரா -ரலி, நூல் : புகாரீ)

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள "ரஃபஸ்" எனும் வார்த்தை உடலுறவுக்கும் வெறுக்கத்தக்க சொல், செயல் அனைத்திற்கும் பயன்படுத்தப்படும்.
"ஃபுஸுக்" என்பது : அல்லாஹ்வுக்கு மாறுசெய்யும் -பாவமான- செயல்களைக் குறிக்கும்.
"ஜிதால்" என்பது : அசத்தியமானவைகளிலும் பயனற்றவை களிலும் தர்க்கம் செய்வதைக் குறிக்கும்.

சத்தியத்தை நிலைநாட்டுவதற்காகவும் அசத்தியத்தை ஒழிப்பதற்காகவும் அழகிய முறையில் தர்க்கம் செய்வதில் தவறில்லை. மாறாக அவ்வாறு செய்ய வேண்டுமென மார்க்கம் கட்டளையிடுகிறது. அல்லாஹ் தஆலா கூறுகிறான் :

اُدْعُ إِلَى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ أَحْسَنُ

(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக் கொண்டு

அவர்களுடன் நீர் விவாதம்செய்வீராக! (குர்ஆன் 16:125)

இஹ்ராம் அணிந்துள்ள ஆண்கள் தொப்பி, துண்டு, தலைப்பாகை போன்ற தலையை மூடும் பொருட்களைக் கொண்டு தலையை மறைப்பது கூடாது. அதுபோல் முகத்தை மறைப்பதும் கூடாது. அரஃபா தினத்தன்று வாகனத்திலிருந்து விழுந்து இறந்துவிட்ட நபித்தோழரைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும்போது,

( اغْسِلُوهُ بِمَاءٍ وَسِدْرٍ وَكَفِّنُوهُ فِي ثَوْبَيْهِ وَلَا تُخَمِّرُوا رَأْسَهُ وَلَا وَجْهَهُ فَإِنَّهُ يُبْعَثُ يَوْمَ الْقِيَامَةِ مُلَبِّيًا )

இவரை இலந்தை இலை கலந்த தண்ணீரால் குளிப்பாட்டுங்கள்! அவருடையை இரண்டு ஆடைகளிலேயே அவருக்கு கஃபனிடுங்கள்! அவருடைய முகத்தையும் தலையையும் மூடாதீர்கள்! ஏனெனில் நிச்சயமாக அவர் மறுமை நாளில் தல்பியாக் கூறியவராக எழுப்பப்படுவார் என்றார்கள். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம், இது முஸ்லிமில் இடம் பெற்ற வாசகமாகும்)

நிழலுக்காக குடையைப் பயன்படுத்துவதிலோ, வாகனத்தின் முகடு, கூடாரம், மரம் போன்றவைகளின் மூலம் நிழல் பெறுவதிலோ தவறில்லை. நபி (ஸல்) அவர்கள் ஜமரத்துல் அகபாவிற்குக் கல்லெறியும் போது அவர்களுக்கு நிழலுக்காகத் துணி பிடிக்கப்பட்ட செய்தியும் நபி (ஸல்) அவர்களுக்காக நமிரா எனும் இடத்தில் கூடாரம் அடிக்கப்பட்டு, அரஃபா தினத்தன்று சூரியன் உச்சி சாயும் வரை அதில் தங்கி இருந்தார்கள் என்ற செய்தியும் ஹதீஸ்களில் இடம் பெற்றுள்ளன.

நிலத்திலுள்ள வேட்டைப் பிராணிகளை வேட்டையாடுவது, வேட்டையாட உதவுவது, பிராணிகளை அதன் இடத்தை விட்டும் விரட்டுவது, திருமண ஒப்பந்தம் செய்வது, உடலுறவு கொள்வது, திருமணத்திற்காக பெண் நிச்சயிப்பது, இச்சையுடன் பெண்களைத் தொடுவது ஆகிய அனைத்துச் செயல்களும் இஹ்ராம் அணிந்துள்ள ஆண், பெண் அனைவரின் மீதும் தடுக்கப்பட்டுள்ளது.

( لَا يَنْكِحُ الْمُحْرِمُ وَلَا يُنْكِحُ وَلَا يَخْطُبُ )

இஹ்ராம் அணிந்துள்ளவர் திருமணம் செய்யக் கூடாது. (பிறருக்கு) திருமணம் செய்துவைக்கவும் கூடாது. திருமணத்தை நிச்சயிக்கவும் கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: உஸ்மான் -ரலி, நூல் : முஸ்லிம்)

இஹ்ராம் அணிந்துள்ளவர்கள் மறதியாகவோ. அறியாமலோ தைக்கப்பட்ட ஆடையை அணிந்து விட்டாலோ, தலையை மறைத்து விட்டாலோ அல்லது நறுமணங்களைப் பூசி விட்டாலோ அவர் மீது எந்தப் பரிகாரமும் கிடையாது. எனினும் (மறந்தவருக்கு) நினைவு வந்தவுடன், (அறியாதவர்) அறிந்தவுடன் அதனை நீக்கிவிட வேண்டும்.

அதுபோல் மறதியாகவோ அறியாமலோ -தலை-முடியை மழித்து விட்டால் அல்லது முடியில் ஏதேனும் (சிறுபகுதியை) எடுத்துவிட்டால் அல்லது நகத்தை வெட்டிவிட்டால் -சரியான கூற்றின்படி- அவர் மீது எந்தப் பரிகாரமும் கிடையாது.

முஸ்லிம்கள் -அவர்கள் ஆணாகவோ, பெண்ணாகவோ, இஹ்ராமுடனோ, இஹ்ராமின்றியோ இருந்தாலும் சரியே- ஹரமுடைய எல்லைக்குள் உள்ள பிராணிகளை வேட்டையாடுவது, அதனை வேட்டையாட ஆயுதங்கள் வழங்குவது அல்லது காட்டிக் கொடுப்பது போன்ற வகையில் உதவுவது, அதனை அதன் இடத்திலிருந்து விரட்டுவது, ஹரமின் மரங்களை வெட்டுவது, அதன் பச்சைத் தாவரங்களைப் பிடுங்குவது, கீழே கிடக்கும் பொருளை (அதனை உரியவரிடம் ஒப்படைக்க) அறிவிப்புச் செய்பவரைத் தவிர பிறர் எடுப்பது ஆகிய அனைத்தும் அவர்கள் மீது ஹராமாகும்.

( فَإِنَّ هَذَا الْبَلَدَ- يعني : مكة -حَرَامٌ بِحُرْمَةِ اللَّهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ لَا يُعْضَدُ شَوْكُهُ وَلَا يُنَفَّرُ صَيْدُهُ وَلَا يَلْتَقِطُ لُقَطَتَهُ إِلَّا مَنْ عَرَّفَهَا وَلَا يُخْتَلَى خَلَاهَا )

நிச்சயமாக இந்த ஊர் -மக்கா- மறுமை நாள்வரை அல்லாஹ்வின் கண்ணியத்தால் - புனிதமாக்கப்பட்டுள்ளது. எனவே அதன் மரங்களை வெட்டக் கூடாது! அதன் பிராணி களை விரட்டக் கூடாது! அதில் கீழே

கிடக்கும் பொருட்களை (உரியவரிடம் ஒப்படைக்க) அறிவிப்புச் செய்பவரைத் தவிர வேறு எவரும் அதனை எடுக்கக் கூடாது. அதன் பச்சைத் தாவரங்களைப் பிடுங்கக் கூடாது! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: இப்னுஅப்பாஸ் -ரலி, நூற்கள்; :புகாரீ, முஸ்லிம்)

மினாவும் முஸ்தலிஃபாவும் ஹரமின் எல்லைப் பகுதிக்குள் உள்ளன. ஆனால் அரஃபா ஹரமுக்கு வெளியே (ஹில் பகுதியில்) உள்ளது.

## 8. மக்காவில் நுழையும்போது செய்யவேண்டியவை களும் மஸ்ஜிதுல் ஹராமில் நுழைந்த பின் செய்யும் தவாஃப் பற்றிய விளக்கங்களும்

இஹ்ராமின் நிய்யத் வைத்தவராக, மக்காவை வந்தடைபவர் நகருக்குள் நுழையும் முன் குளித்துக் கொள்வது விரும்பத்தக்க செயலாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்துள்ளார்கள்.

மஸ்ஜிதுல் ஹராமை வந்தடைந்து விட்டால் வலது காலை முன்வைத்து கீழ்காணும் துஆவைக் கூறுவது சுன்னத்தாகும்.

بِسْمِ اللّٰهِ، وَالصَّلاَةُ وَالسَّلاَمُ عَلَى رَسُوْلِ اللّٰهِ، أَعُوْذُ بِاللهِ الْعَظِيْمِ، وَبِوَجْهِهِ الْكَرِيْمِ، وَسُلْطَانِهِ الْقَدِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ، أَللَّهُمَّ افْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ

(பொருள் : அல்லாஹ்வின் பெயர் கூறி நுழைகின்றேன். அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக! மகத்தான அல்லாஹ்வின் மூலமும், அவனுடைய கருணைமிக்க முகத்தின் மூலமும், அவனது பழமைமிகு அதிகாரத்தின் மூலமும் விரட்டியடிக்கப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் பாதுகாவல் தேடுகிறேன். யாஅல்லாஹ்! உனது அருள் வாயில்களை நீ எனக்குத் திறந்திடுவாயாக!)

(அறிவிப்பவர்கள் : ஃபாத்திமா -ரலி, அம்ர் பின் ஆஸ் -ரலி, நூற்கள் : இப்னுமாஜா, அபூதாவூத்)

இதனை (மஸ்ஜிதுல் ஹராம் உட்பட) எந்தப் பள்ளிவாயிலில் நுழைந்தாலும் கூறுவது சுன்னத்தாகும். மஸ்ஜிதுல் ஹராமில் நுழையும் போது மட்டும் கூறவேண்டிய பிரத்தியேக திக்ர் எதுவும் -நான் அறிந்தவரை- ஹதீஸில் இடம்பெறவில்லை.

உம்ராச் செய்பவர், -அவர் தமத்துஃ(விற்கான உம்ராச்) செய்பவரானாலும் சரியே- கஃபாவை வந்தடைந்துவிட்டால் தவாஃபை ஆரம்பிப்பதற்கு முன்னர் தல்பியாக் கூறுவதை நிறுத்திவிடவேண்டும். பின்னர் அவர் ஹஜருல் அஸ்வதை நோக்கிச் சென்று, அதனை முன்னோக்கி நின்று, வலது கையால் தொடுவார். வாய்ப்பிருந்தால் அதனை முத்தமிடுவார். அதனை முத்தமிட வேண்டும் என்பதற்காக மக்களை நெருக்கித் துன்புறுத்தக் கூடாது. அதனைத் தொடும்போது பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர் என்றோ அல்லாஹு அக்பர் என்றோ கூறுவார்.

ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவது சிரமமாக இருந்தால் அதனை கையாலோ, கைத்தடியாலோ, அல்லது அது போன்றவைகளைக் கொண்டோ தொட்டு, அதனை முத்த மிட்;டுக் கொள்வார்.

இவ்வாறு தொடுவதும் சிரமமாக இருந்தால் அல்லாஹு அக்பர் எனக் கூறியவாறு அதனை நோக்கி -வலது கையால்- சைகை செய்து கொள்ளவேண்டும். சைகை செய்ததை முத்தமிடக் கூடாது.

தவாஃப் செய்பவர் சிறிய, பெரிய தொடக்குகளை விட்டும் தூய்மையாக இருப்பது தவாஃப் நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகளில் ஒன்றாகும். ஏனெனில் தவாஃப் தொழுகை யைப் போன்றது. எனினும் தவாஃபில் (அவசியமான) பேச்சுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கஃபா இடதுபுறம் இருக்குமாறு (நின்று கொண்டு) தவாஃபை ஆரம்பிக்கவேண்டும். தவாஃபை ஆரம்பிக்கும்போது,
اَللَّهُمَّ إِيْمَانًا بِكَ، وَتَصْدِيْقًا بِكِتَابِكَ، وَوَفَاءً بِعَهْدِكَ، وَاتِّبَاعًا لِسُنَّةَ نَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
(யாஅல்லாஹ்! உன்னை விசுவாசித்தவனாக, உன்னுடைய வேதத்தை உண்மைப்படுத்தியவனாக, உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றியவனாக, உன்னுடைய நபி முஹம்மது (ஸல்) அவர்களின் வழியைப் பின்பற்றியவனாக இதனை ஆரம்பிக்கின்றேன்) என்ற துஆவைக் கூறுவது சிறந்ததாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறகு -கஃபாவை- ஏழு சுற்றுக்கள் சுற்றவேண்டும். உம்ரா, தமத்துஃ, இஃப்ராத் அல்லது ஹஜ்ஜையும் உம்ராவையும் இணைத்துச் செய்யும் கிரான் ஆகியவைகளில் எதையேனும் நிறைவேற்ற மக்காவிற்கு வருபவர் முதலாவதாக செய்யும் தவாஃபின் முதல் மூன்று சுற்றுக்கள் முழுவதிலும் “ரமல்” செய்ய வேண்டும். ரமல் என்பது : நெருக்கமாக அடி எடுத்து வைத்து விரைவாக நடப்பதாகும். மீதமுள்ள நான்கு சுற்றுக் களை நடந்தவாறு சுற்றவேண்டும். ஒவ்வொரு சுற்றையும் ஹஜருல் அஸ்வதிலிருந்து தொடங்கி அங்கேயே முடிக்க வேண்டும். இந்தத் தவாஃபில் மட்டும் அனைத்துச் சுற்றுக் களிலும் இழ்திபாச் செய்வது விரும்பத்தக்க செயலாகும். இழ்திபா என்பது : மேலாடையின் நடுப்பகுதியை வலது புஜத்திற்குக் கீழே (அக்குள் பகுதியில்) இட்டு அதன் இரு ஓரங்களையும் இடது தோளின்மீது போட்டுக் கொள்வதாகும்.

சுற்றுக்களின் எண்ணிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் உறுதியானதை அதாவது, குறைந்த எண்ணிக்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சுற்றியது மூன்றா? நான்கா? என்ற சந்தேகம் ஏற்பட்டால் மூன்று என்றே முடிவெடுக்க வேண்டும். ஸயீ(ல் சந்தேகம் வந்தா)லும் இவ்வாறே செய்துகொள்ள வேண்டும்.

தவாஃபை முடித்ததும் தவாஃபுடைய இரண்டு ரகஅத்கள் தொழுவதற்கு முன்னர் தனது மேலாடையை -தவாஃபிற்கு முன்பு அணிந்திருந்தது போல்- இரு புஜங்களையும் போர்த்தி, அதன் இரு பகுதிகளையும் நெஞ்சில் தொங்குமாறு போட்டுக் கொள்ளவேண்டும்.

பெண்கள் அலங்காரத்துடனும் நறுமணத்துடனும் மறைக்க வேண்டிய பகுதிகளை முறையாக மறைக்காமலும் தவாஃப் செய்வது தடுக்கப்பட்டுள்ள, கண்டிப்பாகத் தவிர்ந்து கொள்ள வேண்டிய செயல்களாகும். எனவே தவாஃபின் போதும் அதல்லாத நிலைகளிலும் ஆண்களுடன் பெண்கள் கலக்கும் நிலை ஏற்படும் போது அலங்காரம் செய்து கொள்ளாமல் இருப்பதும் (உடலை முறையாக) மறைத்துக் கொள்வதும் கடமையாகும்.

ஏனெனில் நிச்சயமாக அவர்கள் மறைந்திருக்க வேண்டியவர்கள், அவர்களால் (ஆண்களுக்கு மனக்) குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக பெண்களின் முகங்களே அவர்களின் அழகின் வெளிப்பாடாகும். எனவே அதனை மஹ்ரமானவர்களை (கணவன் மற்றும் அவளைத் திருமணம் செய்யத் தடுக்கப்பட்டவர்களை)த் தவிர பிறருக்கு வெளிக்காட்ட அனுமதியில்லை. அல்லாஹு கூறுகிறான் :

وَلاَ يُبْدِيْنَ زِيْنَتَهُنَّ إِلاَّ لِبُعُوْلَتِهِنَّ)

மேலும் அவர்கள் தம் அலங்காரத்தை தம் கணவர்கள் . . . ஆகியவர்களைத் தவிர வெளிப்படுத்தவேண்டாம். (குர்ஆன் 24:31)

ஹஜருல் அஸ்வதை முத்தமிடும்போது அன்னிய ஆண்கள் தங்களைப் பார்க்க வாய்ப்புள்ளது என்ற நிலையிருந்தால் அவர்கள் தங்கள் முகத்தைத் திறந்து கொள்ள அனுமதி இல்லை. ஹஜருல் அஸ்வதைத் தொடவோ, முத்தமிடவோ எளிதாக வாய்ப்புக் கிடைக்காதபோது, ஆண்களின் நெரிசலுக்கிடையில் (கல்லை முத்தமிடச்) செல்வதற்கும் அனுமதியில்லை. மாறாக ஆண்களை விட்டும் விலகியே தவாஃப் செய்யவேண்டும். இவ்வாறு செய்வது ஆண்களின் நெரிசலுக்கிடையில் கஃபாவுக்கு அருகில் தவாஃப் செய்வதை விட அவர்களுக்குச் சிறந்ததும் அதிக நன்மையைப் பெற்றுத் தரும்

செயலுமாகும்.

ஸயீயிலும் -முதலாவதாகச் செய்யும்- தவாஃபைத் தவிர பிற தவாஃப்களிலும் ரமலோ, இழ்திபாவோ செய்யத் தேவையில்லை. அதுபோல் பெண்கள் எந்த தவாஃபிலும் ஸயீயிலும் ரமலோ, இழ்திபாவோ செய்யக் கூடாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்கு வருகை தந்தபோது செய்த தவாஃபைத் தவிர மற்ற எதிலும் ரமலோ, இழ்திபாவோ செய்யவில்லை.

தவாஃப் செய்யும் போது தொடக்குகள், அசுத்தங்கள் ஆகியவைகளை விட்டும் தூய்மையாக இருக்கவேண்டும். மேலும் அல்லாஹ்வை அஞ்சியவர்களாக, அவனுக்குப் பணிந்தவர்களாக தவாஃப் செய்யவேண்டும். தவாஃபில் அதிகமாக திக்ர், துஆக்களில் ஈடுபடுவது விரும்பத்தக்க செயலாகும். அல்குர்ஆனில் ஏதேனும் சில வசனங்களை ஓதினால் அதுவும் சிறந்ததே!

இந்த தவாஃபிலோ, இது தவிர உள்ள பிற தவாஃப்களிலோ அல்லது ஸயீயிலோ குறிப்பிட்ட எந்த துஆவும் குறிப்பிட்ட எந்த திக்ரும் ஓதுவது கடமையல்ல. சிலர் தவாஃப் மற்றும் ஸயீயில் ஒவ்வொரு சுற்றிற்கும் குறிப்பிட்ட திக்ர், குறிப்பிட்ட துஆக்களை புதிதாக ஏற்படுத்தியிருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மாறாக தன்னால் இயன்ற திக்ர், துஆக்களைக் கூறிக் கொள்வதே போதுமானதாகும்.

ருக்னுல் யமானியைக் கடக்கும் போது பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர் என்று கூறியவர்களாக, அதனை வலது கையால் தொடவேண்டும். அதனை முத்தமிடக் கூடாது. அதனைத் தொடுவது சிரமமாக இருந்தால் அதனைத் தொடாமலேயே தவாஃபைத் தொடரலாம். அதனைக் கடக்கும் போது சைகை செய்வதோ, தக்பீர் கூறுவதோ கூடாது. நாமறிந்தவரை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்ததாக ஹதீஸ் வரவில்லை.

ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதிற்குமிடையில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَاحَسَنَةًوَفِي الآخِرَةِ) حَسَنَةً ْوَقِنَاعَذَابَ النَّار

(ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிர(த்)தி ஹஸனதன் வகினா அதாபன்னார்) என்று கூறுவது விரும்பத்தக்க செயலாகும்.

(பொருள் : எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இம்மையில் நற் பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! மறுமையிலும் நற்பாக்கி யங்களைத் தந்தருள்வாயாக! மேலும் நரக வேதனையை விட்டும் எங்களைக் காத்தருள்வாயாக!) (அல்குர்ஆன் : 2:201)

தவாஃபின் போது ஹஜருல் அஸ்வதைக் கடக்கும் போதெல்லாம் அல்லாஹு அக்பர் என்று கூறி அதனைத் தொட்டு, முத்தமிடுவது ஸுன்னத்தாகும். தொட்டு முத்தமிட வாய்ப்பு இல்லையெனில் அதனைக் கடக்கும் போதெல்லாம் தக்பீர் கூறியவர்களாக -வலது கையால்- சைகை செய்து கொள்ளவேண்டும்.

தவாஃப் செய்யும் போது மகாம் இப்ராஹீமுக்குப் பின்புறமோ, ஜம்ஜம் கிணற்றிற்குப் பின்புறமோ செல்வதில் தவறில்லை. அதிலும் குறிப்பாக நெரிசலான நேரத்தி;ல் அவ்வாறு செய்வதில் தவறே கிடையாது. மஸ்ஜிதுல் ஹராம் -பள்ளி- முழுவதும் தவாஃப் செய்யுமிடம்தான். எனவே பள்ளியின் மாடியில் தவாஃப் செய்தால் அதுவும் நிறைவேறிவிடும். எனினும் வாய்ப்பிருக்கும் போது கஃபாவுக்கு அருகில் தவாஃப் செய்வதே சிறந்தது.

தவாஃபை நிறைவேற்றிய பிறகு மகாம் இப்ராஹீமுக்கு பின்னால் தவாஃபுக்குரிய இரண்டு ரகஅத்களை தொழுவார். கூட்ட நெரிசல் போன்ற காரணத்தால் அங்கு தொழ வாய்ப்பில்லை எனில் பள்ளியின் எந்த இடத்திலும் அதனைத் தொழுது கொள்ளலாம். அத்தொழுகையில் முதல் ரகஅத்தில் ஃபாத்திஹா சூராவிற்குப் பிறகு குல் யாஅய்யுஹல் காஃபிரூன் சூராவையும் இரண்டாவது ரகஅத்தில் குல் ஹுவல்லாஹு அஹது சூராவையும் ஓதுவது சுன்னத்தும் மிகச் சிறந்தது மாகும். இவ்விரண்டும்

அல்லாத வேறு ச10ராக்களை ஓதினாலும் தவறில்லை. இதன் பிறகு வாய்ப்பிருந்தால் ஹஜருல் அஸ்வதை நோக்கிச் சென்று வலது கரத்தால் தொடுவது நபிவழியாகும்.

பிறகு அவர் ஸஃபாவை நோக்கி அதன் வாயிலில் வெளியேறிச் சென்று மலையின் மீது ஏறுவார். அல்லது அதனருகில் நிற்பார். வாய்ப்பிருந்தால் அதன் மீது ஏறுவதே சிறந்தது. (ஸயீயின்) முதல் சுற்றை ஆரம்பிக்கும் போது
إِنَّ الصَّفَا) وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ)
(நிச்சயமாக ஸஃபா மற்றும் மர்வா -எனும் இரு மலைகள்- அல்லாஹ்வின் மார்க்க அடையாளங்களில் உள்ளவையாகும்) என்ற (அல்குர்ஆன் 2:158 -ம்) வசனத்தை ஓதுவார். பிறகு மலையின் மீது நின்று கொண்டு, கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்வை பெருமைப்படுத்தி, புகழ்ந்தவர்களாக,

لاَ إِلهَ إلاَّ اللهُ، وَاللهُ أَكْبَرُ، لاَ إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر، لاَ إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ، أَنْجَزَ وَعْدَهُ، وَنَصَرَ عَبْدَهُ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ
(லாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷாPக்க லஹ், லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹ், அன்ஜஸ வஃதஹ், வனஸர அப்தஹ், வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்.)
என்று கூறுவது விரும்பத்தக்க செயலாகும். பிறகு அவர் இரு கைகளையும் உயர்த்தி விரும்பிய துஆக்களைக் கேட்பார். இந்த திக்ர் மற்றும் துஆக்களை மூன்று முறை கூறுவார். பிறகு அங்கிருந்து இறங்கி மர்வாவை நோக்கிச் செல்வார். முதல் (பச்சை விளக்கு) அடையாளத்தை அடைந்ததிலிருந்து இரண்டாவது (பச்சை விளக்கு) அடையாளத்தை அடையும் வரை ஆண்கள் வேகமாக நடக்க வேண்டும். அவ்விரு அடையாளங்களுக்கு மத்தியில் பெண்கள் வேகமாக நடக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் -தங்கள்- அலங்காரங்களை மறைக்கவேண்டியவர்கள். எனவே அவர்கள் ஸயீயின் அனைத்துச் சுற்றுக்களிலும் நடந்தவாறே செல்ல வேண்டும்.

அதனைக் கடந்து சென்று மர்வா மலையில் ஏற வேண்டும் அல்லது அதனருகில் நிற்க வேண்டும். வாய்ப்பிருந்தால் அதன் மீது ஏறுவதே சிறந்தது. பிறகு ஸஃபாவில் சொன்னதை, செய்ததை (திக்ர், துஆக்களை)ப் போன்று மர்வாவிலும் செய்ய வேண்டும். ஆனால் (ஸஃபாவில் கூறிய)

إِنَّ الصَّفَا) وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ)

என்ற (அல்குர்ஆன் 2:158-ம்) வசனத்தை மர்வாவில் கூறவேண்டியதில்லை. அவ்வசனத்தை முதல் சுற்றுக்காக ஸஃபாவில் ஏறும்போது மட்டுமே கூறுவார். இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் செய்துள்ளார்கள்.

பிறகு அங்கிருந்து இறங்கி நடந்து செல்லவேண்டிய இடத்தில் நடந்தும், வேகமாகக் கடக்க வேண்டிய இடத்தை வேகமாகக் கடந்தும் ஸஃபா மலையை அடையவேண்டும். இவ்வாறு ஏழு முறை செல்லவேண்டும். (ஸஃபாவிலிருந்து மர்வா) செல்வது ஒரு சுற்றும், அங்கிருந்து (ஸஃபாவுக்குத்) திரும்புவது மற்றொரு சுற்றுமாகும். நபி (ஸல்) அவர்கள் மேற்கூறப் பட்டவாறே செய்துள்ளார்கள். மேலும் உங்களுடைய ஹஜ் வாழிபாட்டை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்! என்றும் கூறியுள்ளார்கள்.

ஸயீயில் முடிந்தளவு அதிகமாக திக்ர், துஆக்களில் ஈடுபடுவதும் சிறிய, பெரிய தொடக்குகளிலிருந்து தூய்மை யாக இருப்பதும் விரும்பத்தக்க செயலாகும். ஒருவர் உளுவின்றி ஸயீ செய்தால் அதுவும் நிறைவேறிவிடும். அதுபோல், தவாஃப் செய்தபின் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் வந்துவிட்டால் (அந்நிலையிலேயே) அவர் ஸயீ செய்தால் அதுவும் நிறைவேறிவிடும். ஏனெனில் ஸயீயின் போது தூய்மையாக இருப்பது -நாம் மேற்கூறிய வாறு- விரும்பத்தக்க செயல்தானே தவிர அதனை நிறைவேற்றுவதற்கு தூய்மையாக இருப்பது நிபந்தனையல்ல.

ஸயீயை நிறைவேற்றிய பின் ஆண்கள் தலை(முடி)யை மழித்துக் கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ வேண்டும். எனினும் மழிப்பதே

சிறந்தது. ஹஜ்ஜில் மழிப்பதற்காக (உம்ராவில்) குறைத்துக் கொண்டால் அதுவும் சிறந்ததே!

ஹஜ்ஜுக்குரிய நாட்களுக்கு மிக நெருக்கத்தில் மக்காவிற்கு வருவோர் ஹஜ்ஜில் (முடியை) மழித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக (உம்ராவில்) குறைத்துக் கொள்வதே சிறந்ததாகும். துல்ஹஜ் 4-ம் நாள் தோழர்களுடன் (மக்கா) வருகை தந்த நபி (ஸல்) அவர்கள், பலிப்பிராணிகளை தங்களுடன் கொண்டுவராதவர்களுக்கு (உம்ராவிற்குப் பிறகு) இஹ்ராமைக் களைந்து விடுமாறும் (முடியை) குறைத்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்டார்கள். மழித்துக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கட்டளையிடவில்லை.

தலையின் அனைத்துப் பகுதியிலும் உள்ள முடிகளைக் குறைப்பது அவசியமாகும். அதன் சில பகுதிகளை மட்டும் குறைப்பது போதுமானதாகாது. அதுபோல் சிலபகுதிகளை மட்டும் மழிப்பதும் போதுமானதாகாது.

பெண்களுக்கு (முடியை) குறைப்பது மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது கொண்டைப் பின்னல்களின் இறுதிப் பகுதியில் விரல் நுனியளவோ, அல்லது அதைவிடக் குறைவாகவோ முடிகளை வெட்டிக் கொள்ள வேண்டும். பெண்கள், இதைவிட அதிகமாக வெட்டிக் கொள்வது கூடாது.

இஹ்ராம் அணிந்தவர் மேற்கூறப்பட்டச் செயல்களைச் செய்துவிட்டால் உம்ராவை நிறைவேற்றியவராகிவிடுகிறார்.
- அல்ஹம்து லில்லாஹ்-

அதன் பிறகு இஹ்ராமின் காரணத்தால் தடுக்கப்பட்ட அனைத்தும் அவருக்கு அனுமதியாகிவிடும். எனினும் ஹரம் எல்லையின் வெளிப்பகுதியிலிருந்து தன்னுடன் பலிப்பிராணி யைக் கொண்டுவந்தவர் ஹஜ், உம்ரா இரண்டையும் நிறை வேற்றும் (10-ம் நாள்)வரை இஹ்ராமுடனே இருக்க

வேண்டும்.

(இஃப்ராத்) ஹஜ்ஜுக்காக மட்டும் இஹ்ராம் அணிந்தவரும், ஹஜ் மற்றும் உம்ரா இரண்டையும் (கிரானாக) நிறைவேற்ற இஹ்ராம் அணிந்தவரும் அவைகளை உம்ராவாக மாற்றிக் கொண்டு, தமத்துஃ ஹஜ் செய்பவரைப் போன்று நிறைவேற்று வது சுன்னத்தாகும். ஆனால் தன்னுடன் பலிப்பிராணியைக் கொண்டுவந்தவர் இவ்வாறு -ஹஜ்ஜின் வகையை- மாற்றக் கூடாது. ஏனெனில் இஹ்ராமைக் களையுமாறு தம்முடைய தோழர்களுக்குக் கட்டளையிட்ட நபி (ஸல்) அவர்கள்,

( . . لَأَحْلَلْتُ هَدْيًا سُقْتُ أَنِّي لَوْلَا . . )

நிச்சயமாக நான் என்னுடன் பலிப்பிராணியைக் கொண்டு வந்திருக்காவிட்டால் நிச்சயமாக நானும் இஹ்ராமைக் களைந்திருப்பேன் என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர் : அனஸ் -ரலி, நூல் : அஹமத்)

உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்துவிட்ட பெண்ணுக்கு மாதவிடாயோ, பிரசவ இரத்தமோ வந்துவிட்டால் தூய்மை யாகும் வரை தவாஃபோ, ஸயீயோ செய்யக் கூடாது. தூய்மையான பிறகு தவாஃப் மற்றும் ஸயீ செய்து, முடியை வெட்டிவிட்டால் உம்ரா நிறைவேறிவிடும்.

அப்பெண் துல்ஹஜ் 8-ம் நாளுக்கு முன்னால் தூய்மையாக வில்லையானால் அவள் தங்கியிருக்கும் இடத்திலிருந்தே ஹஜ்ஜுக்காக இஹ்ராமின் நிய்யத் வைத்துக் கொண்டு, மக்களுடன் மினாவுக்கு புறப்பட்டுவிட வேண்டும். இவ்வாறு செய்வதினால் அவள் ஹஜ், உம்ரா இரண்டையும் இணைத்து (கிரானாக) நிறைவேற்றியவளாகிவிடுவாள்.

மேலும் அவள், அரஃபா மற்றும் மஷ்அருல் ஹராமில் தங்குவது, ஜமராக்களுக்குக் கல்லெறிவது, முஸ்தலிஃபா மற்றும் மினாவில் இரவு தங்குவது, பிராணியை பலியிடுவது, முடியைக் குறைப்பது ஆகிய ஹஜ் செய்பவர் செய்யும் அனைத்துக் காரியங்களையும் நிறைவேற்றவேண்டும்.

தூய்மையான பிறகு கஃபாவை ஒரு முறை தவாஃப் செய்ய வேண்டும். பிறகு ஸஃபா, மர்வாவுக்கிடையே ஒரு முறை ஸயீ செய்யவேண்டும். இதுவே ஹஜ், உம்ரா இரண்டிற்கும் போதுமானதாகிவிடும். உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்த ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மாதவிடாய் வந்துவிட்ட போது,

( تَطْهُرِي حَتَّى بِالْبَيْتِ تَطُوفِي لَا أَنْ غَيْرَ الْحَاجُّ يَفْعَلُ مَا فَافْعَلِي . . )

. . நீ தூய்மையாகும் வரை- கஃபாவை தவாஃப் செய்வதைத் தவிர ஹஜ் செய்பவர் செய்யும் அனைத்தையும் செய்து கொள்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தத்துடனுள்ள பெண்கள் 10-ம் நாள் கல்லெறிந்து, முடியை வெட்டிவிட்டால் இஹ்ராமின் காரணத்தால் தடுக்கப்பட்டிருந்தவைகளில் நறுமணம் போன்றவை அனைத்தும் அனுமதியாகிவிடும். எனினும் தூய்மையான பெண்கள் ஹஜ்ஜுக் காரியங்களை முழுமையாக நிறைவேற்றியது போன்று இவர்களும் நிறைவேற்றும் வரை இல்லறத்தில் ஈடுபடக் கூடாது. தூய்மையான பிறகு தவாஃபையும் ஸயீயையும் செய்துவிட்டால் இல்லறமும் அனுமதியாகிவிடும்.

### 9. துல்ஹஜ் 8-ம் நாள் ஹஜ்ஜுக்குரிய இஹ்ராமிற்காக நிய்யத் வைத்து மினாவுக்குப் புறப்படுவது பற்றிய சட்டம்

மக்காவில் தங்கியிருப்பவர்களும் மக்கா வாசிகளில் ஹஜ் செய்பவர்களும் துல்ஹஜ் 8-ம் நாளன்று அவர்கள் தங்கியிருக்கும் இடத்திலிருந்தே ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்து கொள்வது விரும்பத்தக்கச் செயலாகும். ஏனெனில் -மக்காவில்- அப்தஹ் எனும் இடத்தில் தங்கியிருந்த நபித் தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க 8-ம் நாளில் அங்கிருந்தே ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்து கொண்டனர்.

ஹரமுக்கோ, கஃபாவின் முகட்டிலிருக்கும் தங்கப் பீலிக்கோ சென்று அங்கிருந்து இஹ்ராம் அணிந்து கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிடவில்லை. அதுபோன்று மினாவுக்குப் புறப்படும் போது விடைபெறும் தவாஃப் -என்ற பெயரில் ஒரு தவாஃப்- செய்யவும் கட்டளையிடவில்லை. இவ்வாறு செய்வது மார்க்கச் சட்டமாக இருந்திருந்தால் அதனை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருப்பார்கள். நபி (ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் பின்பற்றுவதில் மட்டுமே நமக்கு நன்மையுள்ளது.

எல்லையில் இஹ்ராம் அணியும்போது குளித்து, தூய்மையாகி, நறுமணம் பூசிக் கொண்டது போன்று ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணியும் போதும் செய்து கொள்வது விரும்பத்தக்கச் செயலாகும்.

8-ம் நாளன்று ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்த பிறகு சூரியன் உச்சி சாய்வதற்கு முன்போ, உச்சி சாய்ந்த பின்போ மினாவுக்குச் செல்வது சுன்னத்தாகும்.

(இஹ்ராம் அணிந்ததிலிருந்து 10-ம் நாள்) ஜமரத்துல் அகபாவுக்குக் கல்லெறியும் வரை அதிகமாக தல்பியாக் கூறிக் கொண்டிருக்க வேண்டும்.

ளுஹர், அஸர், மஃரிப், இஷா மற்றும் ஃபஜ்ர் ஆகிய தொழுகைகளை மினாவில் தொழவேண்டும். (இரு தொழுகை களை ஒரே நேரத்தில் சேர்த்து) ஜம்ஆகத் தொழாமல் தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் தொழுவதும், அதனை கஸ்ராக (நான்கு ரகஅத் தொழுகைகளை இரண்டு ரகஅத்களாக)த் தொழுவதும் சுன்னத்தாகும். ஃபஜ்ரையும் மஃரிபையும் கஸ்ராகத் தொழ முடியாது.

(ஜம்வு, கஸர் சலுகையில்) பிறருக்கும் மக்கா வாசிகளுக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் கிடையாது. நபி (ஸல்) அவர்கள் மினா, அரஃபா, முஸ்தலிஃபா

ஆகிய அனைத்து இடங்களிலும் மக்கா வாசிகளுக்கும் பிறருக்கும் கஸராகவே தொழவைத்தார்கள். தொழுகையை பூர்த்தியாக்கி (4 ரகஅத்களாகத்) தொழுமாறு மக்கா வாசிகளுக்கு கட்டளையிடவில்லை. அவ்வாறு தொழுவது அவர்கள் மீது கடமையாக இருந்திருந்தால் நிச்சயமாக அதனை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருப்பார்கள்.

அரஃபா தினத்தன்று சூரிய உதயத்திற்குப்பின் மினாவிலிருந்து அரஃபாவை நோக்கிப் புறப்பட வேண்டும். வாய்ப்பிருந்தால் சூரியன் உச்சி சாயும் வரை நமிரா என்ற இடத்தில் தங்குவது சுன்னத்தாகும். நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்துள்ளார்கள்.

சூரியன் உச்சி சாய்ந்த பின்னர் ஆட்சித் தலைவரோ அல்லது அவருக்குப் பகரமாக நியமிக்கப்பட்டவரோ கால சூழ்நிலைகளுக்கேற்ற செய்திகளுடன் உரை நிகழ்த்துவது ஸுன்னத்தாகும். அதில் ஹஜ் செய்பவர் அன்றைய தினமும் அதற்குப் பின்னரும் செய்யவேண்டியவைகளை தெளிவுபடுத்த வேண்டும். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறும் அவனை ஓர்மைப் படுத்துமாறும் அனைத்து அமல்களையும் அவனுக்காகவே மனத்தூய்மையுடன் நிறைவேற்றுமாறும் அவர் களுக்குக் கட்டளையிடவேண்டும். மார்க்கம் தடுத்துள்ள காரியங்களைச் செய்வதை விட்டும் அவர்களை எச்சரிக்க வேண்டும். அல்லாஹ்வுடைய வேதத்தையும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறும் அவ்விரண்டைக் கொண்டே ஆட்சி நடத்து மாறும் அனைத்துக் காரியங்களுக்கும் அவ்விரண்டின் அடிப்படையிலேயே தீர்ப்புக் கூறுமாறும் இவ்வனைத்திலும் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுமாறும் வலியுறுத்தி போதிக்க வேண்டும்.
பிறகு நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க, ஒரு பாங்கு, இரு இகாமத்களுடன் ளுஹரையும் அஸரையும் இணைத்து ளுஹர் நேரத்தில் கஸராக (இரண்டிரண்டு ரகஅத்களாக)த் தொழ வேண்டும்.
(அறிவிப்பவர் : ஜாபிர் - ரலி, நூல் : முஸ்லிம்)

பிறகு அரஃபாவில் தங்கவேண்டும். பத்னு உரனா என்ற இடத்தைத் தவிர அரஃபாவின் மற்ற பகுதிகள் அனைத்தும் தங்குமிடமே! வாய்ப்பிருந்தால் கிப்லாவையும் ஜபலுர் ரஹ்மாவையும் முன்னோக்கியவாறு தங்குவது விரும்பத்தக்க செயலாகும். ஒரே நேரத்தில் இரண்டையும் முன்னோக்க வாய்ப்பில்லை என்றால் -ஜபலுர் ரஹ்மாவை முன்னோக்க வில்லை என்றாலும் சரியே!- கிப்லாவை மட்டுமாவது முன்னோக்கியவாறு தங்குவது சிறந்தது.

ஹஜ் செய்பவர் அரஃபாவில் தங்கியிருக்கும் நேரத்தில் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறவேண்டும், பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். அவனுக்கு முற்றிலும் அடிபணிய வேண்டும். இரு கைகளையும் உயர்த்திப் பிரார்த்திக்க வேண்டும். தல்பியாக் கூறினால் அல்லது அல்குர்ஆனில் ஏதேனும் சில பகுதிகளை ஓதினால் அதுவும் சிறந்ததே!

قَدِيْرٌ شَيْءٍ كُلِّ عَلَى وَهُوَ وَيُمِيْتُ يُحْيِيْ الْحَمْدُ، وَلَهُ الْمُلْكُ لَهُ لَهُ، شَرِيْكَ لاَ وَحْدَهُ، اللهُ إِلاَّ إِلهَ لاَ

என்ற திக்ரை அதிகமாகக் கூறுவது சுன்னத்தாகும்.

( لَا وَحْدَهُ اللَّهُ إِلَّا إِلَهَ لَا قَبْلِي مِنْ وَالنَّبِيُّونَ أَنَا قُلْتُ مَا وَخَيْرُ عَرَفَةَ يَوْمِ دُعَاءُ الدُّعَاءِ خَيْرُ
قَدِيرٌ شَيْءٍ كُلِّ عَلَى وَهُوَ الْحَمْدُ وَلَهُ الْمُلْكُ لَهُ لَهُ شَرِيكَ )

பிரார்த்தனைகளில் மிகச் சிறந்த பிரார்த்தனை அரஃபா தினத்தன்று கேட்கும் பிரார்த்தனைதான்! நானும் எனக்கு முன்சென்ற நபிமார்களும் கூறியவைகளில் மிகச் சிறந்த -திக்ர்- லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷாPக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைய்யின் கதீர் என்பதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அம்ர் பின் ஷுஐப் -ரலி, நூல் : திர்மிதி)

( . . أَكْبَرُ وَاللهُ اللهُ إِلَّا إِلَهَ وَلَا للهِ وَالْحَمْدُ اللهِ سُبْحَانَ : أَرْبَعٌ اللهِ إِلَى الْكَلَامِ أَحَبُّ )

ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகிய நான்கு வார்த்தைகளும் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானவைகளாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் :ஸமுரா பின் ஜுன்துப் -ரலி, நூல் : முஸ்லிம்)

எனவே இந்த திக்ரை மனஈடுபாட்டுடனும் இறையச்சத்துடனும் திரும்பத் திரும்ப அதிகமாகக் கூறிக் கொண்டிருப்பது சிறந்ததாகும்.

மார்க்கம் கற்றுத் தந்துள்ள திக்ர், துஆக்களை பொதுவாக அனைத்துக் காலங்களிலும் அதிகமாகக் கூறிக் கொண்டிருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்த இடத்தில், இந்த மகத்தான நாளில் மிக அதிகமாக திக்ர், துஆக்களில் ஈடுபட வேண்டும். மேலும் சிறந்த திக்ர், துஆக்களைத் தேர்ந்தெடுத்துப் பிரார்த்திக்க வேண்டும். அவைகளில் சில :

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ، سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ

அல்லாஹ்வைப் புகழ்வதுடன், அவனைத் தூய்மைப் படுத்து கிறேன். மகத்தான அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்.

{ لاَإِلَهَ إِلاَّ أَنْتَ سُبْحَانَكَ إِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ }

வணக்கத்திற்குரிய இறைவன் உன்னைத் தவிர யாருமில்லை, நீ மிகவும் தூய்மையானவன், நிச்சயமாக நான் அநியாயக் காரர்களில் ஒருவனாகி விட்டேன். (அல்குர்ஆன் 21:87)

لاَ إِلهَ إِلاَّ اللهُ، وَلاَ نَعْبُدُ إِلاَّ إِيَّاهُ، لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ، لاَ إِلهَ إِلاَّ اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. நாங்கள் அவனைத் தவிர வேறு எவரையும் வணங்க மாட்டோம். அனைத்து அருட்கொடைகளும் அனைத்துச் சிறப்புக்களும் அனைத்து அழகிய புகழ்களும் அவனுக்கே உரியன! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. மார்க்கத்தை அவனுக்காக மட்டுமே தூய்மையாக்கியவர்களாக -அவனை மட்டுமே வணங்குவோம்.- அதனை இறைநிராகரிப்பாளர்கள் வெறுத்த போதிலும் சரியே!

لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டும்) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

النَّار عَذَابَ وَقِنَا حَسَنَةً ٱلآخِرَةِ وَفِي حَسَنَةً الدُّنْيَا فِيْ آتِنَا رَبَّنَا

எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகில் நல்லதையும் மறுமையில் நல்லதையும் தருவாயாக! எங்களை நரக வேதனையிலிந்து காத்தருள்வாயாக!

وَأَصْلِحْ ، مَعَاشِيْ فِيْهَا الَّتِيْ دُنْيَايَ لِيْ وَأَصْلِحْ ، أَمْرِيْ عِصْمَةُ هُوَ الَّذِيْ دِيْنِي لِيْ أَصْلِحْ أَللَّهُمَّ
مِنْ لِّيْ رَاحَةً وَالْمَوْتَ ، خَيْرٍ كُلِّ فِيْ لِّيْ زِيَادَةً الْحَيَاةَ وَاجْعَلِ ، مَعَادِيْ فِيْهَا الَّتِيْ آخِرَتِي لِيْ
شَرٍّ كُلِّ .

யாஅல்லாஹ்! என்னுடைய மார்க்கத்தை எனக்கு சீர் படுத்துவாயாக! அதுதான் எனது -வாழ்வின்- அரண். எனது உலகை எனக்குச் சீர்படுத்துவாயாக! அதுதான் நான் வாழும் இடம். எனது மறுமையை சீர்படுத்துவாயாக! அதுதான் நான் திரும்பிச் செல்லுமிடம். எனது வாழ்க்கையை அனைத்து நல்லறங்களையும் அதிகமாகச் செய்ய வாய்ப்புடையதாக ஆக்குவாயாக! அனைத்து தீமைகளை விட்டும் விடுபட்டதாக எனது மரணத்தை ஆக்குவாயாக!

ٱلْأَعْدَاءِ وَشَمَاتَةِ الْقَضَاءِ وَسُوْءِ الشَّقَاءِ وَدَرَكِ الْبَلاَءِ جَهْدِ مِنْ بِاللهِ أَعُوْذُ

சோதனையின் சிரமத்தை விட்டும் விரும்பத்தகாதவை ஏற்படுவதை விட்டும் தீய முடிவுகளை விட்டும் விரோதிகளின் கேலி, கிண்டல்களுக்கு ஆளாவதை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

الْمَأْثَمِ وَمِنَ وَالْبُخْلِ الْجُبْنِ وَمِنَ وَالْكَسَلِ الْعَجْزِ وَمِنَ وَالْحَزَنِ الْهَمِّ مِنَ بِكَ أَعُوْذُ إِنِّيْ أَللَّهُمَّ
وَمِنْ وَالْجُذَامِ وَالْجُنُوْنِ الْبَرَصِ مِنَ اللَّهُمَّ بِكَ وَأَعُوْذُ الرِّجَالِ وَقَهْرِ الدَّيْنِ غَلَبَةِ وَمِنَ وَالْمَغْرَمِ
ٱلْأَسْقَامِ سَيِّئِ

யாஅல்லாஹ்! கவலை, சோகம், இயலாமை, சோம்பல், கோழைத்தனம்;, கஞ்சத்தனம், பாவமிழைத்தல், கடனாளியாதல், கடன் அதிகரித்தல், மனிதர்களின் அடக்குமுறைக்கு ஆளாகுதல் ஆகியவைகளை விட்டும், வெண்குஷ்டம், பைத்தியம், உடலுறுப்புக்கள் அழுகி விழும்நோய்

(கருங்குஷ்டம்), மற்றும் கெட்ட நோய்களை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

وَالْآخِرَةِ الدُّنْيَا فِي والْعَافِيَةَ الْعفْوَ أَسْأَلُكَ إِنِّيْ أَللَّهُمَّ

யாஅல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் பாவமன்னிப்பையும் நல்வாழ்வையும் கேட்கிறேன்.

وَمَالِيْ وَأَهْلِيْ وَدُنْيَايَ دِيْنِيْ فِيْ وَالْعَافِيَةَ الْعَفْوَ أَسْأَلُكَ إِنِّيْ هُمَّأَلَّا

யாஅல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் என்னுடைய மார்க்க விஷயத்திலும் உலக விஷயத்திலும் குடும்ப விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் -செய்த தவறுகளுக்காக- பாவமன்னிப்பையும் நல்வாழ்வையும் கேட்கிறேன்.

يَمِيْنِي وَعَنْ خَلْفِيْ وَمِنْ يَدَيَّ بَيْنِ مِنْ احْفَظْنِيْ اَللَّهُمَّ رَوْعَاتِي، وَآمِنْ عَوْرَاتِيْ اسْتُرْ اَللَّهُمَّ
تَحْتِيْ مِنْ أُغْتَالَ أَنْ بِعَظَمَتِكَ وَأَعُوذُ فَوْقِيْ وَمِنْ شِمَالِيْ وَعَنْ

யாஅல்லாஹ்! என்னுடைய குறைகளை மறைத்திடுவாயாக! என்னுடைய பயத்தை நீக்கி, அச்சமற்ற நிலையை ஏற்படுத்திடுவாயாக! எனக்கு முன்னும் பின்னும் வலப்புறமும் இடப்புறமும் மேற்புறமும் என்னை நீ பாதுகாப்பாயாக! கீழ் புறமிருந்து -பூமியினுள்- நான் இழுக்கப்படுவதை விட்டும் உன்னுடைய கண்ணியத்தின் பொருட்டால் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

مِنِّيْ بِهِ أَعْلَمُ أَنْتَ وَمَا أَمْرِيْ فِيْ وَإِسْرَافِيْ وَجَهْلِيْ خَطِيْئَتِيْ لِيْ اغْفِرْ أَللَّهُمَّ

யாஅல்லாஹ்! என்னுடைய குற்றங்களையும் என்னுடைய அறியாமையால் விளைந்தவைகளையும் என்னுடைய செயல் களில் நான் வரம்புமீறியதையும் எவைகளைப் பற்றி நீ என்னை விட நன்கறிந்துள்ளாயோ அவைகளையும் மன்னித்துவிடு;வாயாக!

عِنْدِيْ ذَلِكَ وَكُلُّ وَعَمْدِيْ وَخَطَئِيْ وَهَزْلِيْ جِدِّيْ لِيْ اغْفِرْ اَللَّهُمَّ

யாஅல்லாஹ்! நான் வேண்டுமென்றோ, விளையாட்டாகவோ, அறியாமலோ, அறிந்தோ செய்தவைகளை மன்னித்து விடுவாயாக! அவைகள் யாவும்

என்னிடம் நிகழ்ந்தவைகளே!

اَللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّيْ، أَنْتَ الْمُقَدِّمُ
وَأَنْتَ الْمُؤَخِّرُ وَأَنْتَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ.

யாஅல்லாஹ்! நான் முற்படுத்தியவைகளையும், நான் பிற்படுத்தியவைகளையும், நான் மறைவாகச் செய்தவைகளை யும், பகிரங்கமாகச் செய்தவைகளையும் எவைகளைப் பற்றி நீ என்னை விட நன்கறிந்துள்ளாயோ அவைகளையும் நீ மன்னித் தருள்வாயாக! நீயே முற்படுத்துபவன், நீயே பிற்படுத்துபவன், நீயே அனைத்து பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன்.

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الثَّبَاتَ فِي الْأَمْرِ وَالْعَزِيْمَةَ عَلَى الرُّشْدِ وَأَسْأَلُكَ شُكْرَ نِعْمَتِكَ وَحُسْنَ عِبَادَتِكَ
وَأَسْأَلُكَ قَلْبًا سَلِيْمًا وَلِسَانًا صَادِقًا وَأَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا تَعْلَمُ، وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا تَعْلَمُ،
وَأَسْتَغْفِرُكَ لِمَا تَعْلَمُ، إِنَّكَ عَلَّامُ الْغُيُوْبِ.

யாஅல்லாஹ்! அனைத்து -நல்ல- காரியங்களிலும் நிலைத்து நிற்பதையும் நேர்வழியில் உறுதியாக இருப்பதையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். உன்னுடைய அருட்கொடை களுக்கு நன்றி செலுத்துவதையும் அழகிய முறையில் உன்னை வழிபடுவதையும் உன்னிடம் கேட்கின்றேன். மேலும்-உனக்குக்- கட்டுப்படும் உள்ளத்தையும் உண்மை பேசும் நாவையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். மேலும் நீ அறிந்துள்ள நல்லவை களை உன்னிடம் நான் கேட்கின்றேன். நீ அறிந்துள்ள தீயவை களை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். -என் விஷயத்தில்- நீ அறிந்து வைத்திருப்பவைகளுக்காக நான் உன்னிடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். நிச்சயமாக நீயே மறைவானவைகளை நன்கறியக் கூடியவன்.

اَللَّهُمَّ رَبَّ النَّبِيِّ مُحَمَّدٍ عَلَيْهِ الصَّلَاةُ وَالسَّلَامُ اغْفِرْ لِيْ ذَنْبِيْ، وَأَذْهِبْ غَيْظَ قَلْبِيْ وَأَعِذْنِيْ مِنْ
مُضِلَّاتِ الْفِتَنِ مَا أَبْقَيْتَنِيْ.

யாஅல்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்களின் இரட்சகனே! என்னுடைய பாவத்தை நீ மன்னித்தருள்வாயாக! என்னுடைய உள்ளத்தின் ஆத்திரத்தைப்

போக்கிடுவாயாக! வழிகெடுக்கும் குழப்பங்களை விட்டும் என்னை நீ வாழ வைக்கும் வரை காத்தருள்வாயாக!

فَالِقَ شَيْءٍ، كُلِّ وَرَبَّ رَبَّنَا الْعَظِيْمِ، لْعَرْشِا وَرَبَّ الْأَرْضِ، وَرَبَّ السَّبْعِ، السَّمَوَاتِ رَبَّ أَللَّهُمَّ
بِنَاصِيَتِهِ، آخِذٌ أَنْتَ شَيْءٍ كُلِّ شَرِّ مِنَ بِكَ أَعُوْذُ وَالْقُرْآنِ، وَالْإِنْجِيْلِ التَّوْرَاةِ وَمُنْزِلَ وَالنَّوَى، الْحَبِّ
فَوْقَكَ فَلَيْسَ الظَّاهِرُ وَأَنْتَ شَيْءٌ، بَعْدَكَ فَلَيْسَ الْآخِرُ وَأَنْتَ ،شَيْءٌ قَبْلَكَ فَلَيْسَ الْأَوَّلُ أَنْتَ أَللَّهُمَّ
الْفَقْرِ مِنَ الدَّيْنَ،وَأَغْنِنِي عَنِّي اِقْضِ شَيْءٌ، دُوْنَكَ فَلَيْسَ الْبَاطِنُ وَأَنْتَ شَيْءٌ،

யாஅல்லாஹ்! ஏழு வானங்களின் இரட்சகனே! பூமியின் இரட்சகனே! மகத்தான அர்ஷின் இரட்சகனே! எங்கள் இரட்சகனே! அனைத்துப் பொருட்களின் இரட்சகனே! விதை யையும் வித்துவையும் பிள(ந்து முளை)க்கச் செய்பவனே! தவ்ராத், இன்ஜீல், குர்ஆன் ஆகிய வேதங்களை இறக்கியவனே! எந்தப் பொருட்களின் முன்னெற்றி உரோமம் உன் ஆதிக்கத் திலுள்ளதோ அவைகள் அனைத்தின் தீமைகளை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். யாஅல்லாஹ்! நீயே ஆரம்பமானவன்; உனக்கு முன்பு எதுவுமில்லை. நீயே இறுதி யானவன்; உனக்குப் பின்பு எதுவுமில்லை. நீயே மிகைப்பவன்; உனக்குமேல் எதுவுமில்லை. நீயே மறைவானவன்; உனக்கு மறைவானது எதுவுமில்லை. என்னுடைய கடனை நிறைவேற் றிடுவாயாக! மேலும் வறுமையை விட்டும் (பாதுகாத்து, பிறர்) தேவையற்றவனாக என்னை ஆக்குவாயாக!

بِكَ أَعُوْذُ إِنِّيْ أَللَّهُمَّ وَمَوْلَاهَا، وَلِيُّهَا أَنْتَ زَكَّاهَا، مَنْ خَيْرُ أَنْتَ وزَكِّهَا، تَقْوَاهَا، نَفْسِيْ أَعْطِ أَللَّهُمَّ
الْقَبْرِ عَذَابِ مِنْ بِكَ أَعُوْذُ وَ وَالْبُخْلِ وَالْهَرَمِ الْجُبْنِ مِنَ بِكَ وَأَعُوْذُ الْكَسَلِ،وَ الْعَجْزِ مِنَ.

யாஅல்லாஹ்! என் உள்ளத்தில் உனது அச்சத்தை ஏற்படுத் துவாயாக! அதனை தூய்மைப்படுத்துவாயாக! நீதான் அதனைத் தூய்மைப்படுத்துவோரில் மிகச் சிறந்தவன். நீயே அதன் பொறுப்பாளனும் அதன் பாதுகாவலனுமாவாய். யாஅல்லாஹ்! இயலாமை, சோம்பல், கோழைத்தனம், வயோதிகம், கஞ்சத்தனம் மற்றும் கப்ர் வேதனை ஆகியவைகளை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

أَنْ بِعِزَّتِكَ أَعُوْذُ خَاصَمْتُ، وَبِكَ أَنَبْتُ، وَإِلَيْكَ تَوَكَّلْتُ، وَعَلَيْكَ آمَنْتُ، وَبِكَ أَسْلَمْتُ، لَكَ أَللَّهُمَّ
يَمُوْتُوْنَ وَالْإِنْسُ يَمُوْتُ،وَالْجِنُّ لاَ الَّذِيْ الْحَيُّ تَنْأَ، أَنْتَ إِلاَّ إِلَهَ تُضِلَّنِيْ،لاَ

யாஅல்லாஹ்! நான் உனக்கே கட்டுப்பட்டுள்ளேன். உன்மீதே நம்பிக்கைக் கொண்டுள்ளேன். உன் மீதே உறுதி கொண்டுள்ளேன். உன்பக்கமே மீண்டுள்ளேன். உன் உதவியால்தான் (எதிரிகளிடம்) தர்க்கம் செய்கிறேன். என்னை நீ வழிதவறச் செய்வதை விட்டும் உன்னுடைய கண்ணியத்தின் பொருட்டால் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீயே மரணிக்காத நித்திய ஜீவன்;. மனித, ஜின் இனத்தினர் மரணித்துவிடுவர்.

دَعْوَةٍ وَمِنْ تَشْبَعُ، لاَ نَفْسٍ وَمِنْ لاَيَخْشَعُ، قَلْبٍ وَمِنْ لاَيَنْفَعُ، عِلْمٍ مِنْ بِكَ أَعُوْذُ إِنِّيْ أَللَّهُمَّ
لَهَا لاَيُسْتَجَابُ

யாஅல்லாஹ்! பயனளிக்காத கல்வியைவிட்டும் (உனக்குப்) பயப்படாத உள்ளத்தை விட்டும் நிறைவடையாத மனதை விட்டும் பதிலளிக்கப்படாத பிரார்த்தனையை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

وَالْأَدْوَاءِ وَالْأَهْوَاءِ وَالْأَعْمَالِ الْأَخْلاَقِ مُنْكَرَاتِ جَنِّبْنِيْ أَللَّهُمَّ

யாஅல்லாஹ்! தீய குணங்கள், தீய செயல்கள், தீய ஆசைகள், தீய நோய்கள் ஆகியவைகளிலிருந்து என்னை நீ காப்பாற்றுவாயாக!

نَفْسِيْ شَرِّ مِنْ وَأَعِذْنِيْ رُشْدِيْ، أَلْهِمْنِيْ أَللَّهُمَّ

யாஅல்லாஹ்! எனக்கு நீ நேர்வழியைக் காட்டுவாயாக! மேலும் என்னுடைய மனதின் தீங்கிலிருந்து என்னைப் பாதுகாப்பாயாக!

سِوَاكَ عَمَّنْ بِفَضْلِكَ حَرَامِكَ،وَأَغْنِنِيْ عَنْ بِحَلاَلِكَ اكْفِنِيْ اَللَّهُمَّ

யாஅல்லாஹ்! நீ தடுத்துள்ளவைகளை விட்டும் என்னைக் காப்பாற்றி, நீ அனுமதித்தவைகளின் மூலம் எனக்கு நிறைவை ஏற்படுத்துவாயாக! உன்னுடைய அருட்கொடைகளின் மூலம் என்னை பிறர் தேவையற்றவனாக

ஆக்கிடுவாயாக!

وَالْغِنَى وَالْعَفَافَ وَالتُّقَى الْهُدَى أَسْأَلُكَ إِنِّيْ اَللَّهُمَّ

யாஅல்லாஹ்! நேர்வழியையும் (உனது) அச்சத்தையும் பத்தினித் தனத்தையும் தன்னிறைவையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன்.

وَالسَّدَادَ الْهُدَى أَسْأَلُكَ يِ إِنِّ أَللَّهُمَّ

யாஅல்லாஹ்! நேர்வழியையும் அதில் உறுதியாக நிற்பதையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன்.

أَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ، عَاجِلِهِ وَآجِلِهِ مَا عَلِمْتُ مِنْهُ وَمَالَمْ أَعْلَمْ، وَأَعُوْذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّهِ، عَاجِلِهِ وَآجِلِهِ مَا عَلِمْتُ مِنْهُ وَمالَمْ أَعْلَمْ، وأَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ مِنْهُ عَبْدُكَ ، وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَ مِنْهُ ρوَنَبِيُّكَ مُحَمَّدٌ ρعَبْدُكَ وَنَبِيُّكَ مُحَمَّدٌ

யாஅல்லாஹ்! நான் அறிந்திருக்கின்ற மற்றும் அறியாத அனைத்து நன்மைகளையும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் (தருமாறு) உன்னிடம் கேட்கிறேன். மேலும் நான் அறிந்திருக்கின்ற மற்றும் அறியாத அனைத்துத் தீமைகளை விட்டும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யாஅல்லாஹ்! உன்னுடைய அடியாரும்; நபியுமாகிய முஹம்மது (ஸல்) அவர்கள் கேட்ட நல்லவைகள் அனைத்தையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். உன்னுடைய அடியாரும் நபியுமாகிய முஹம்மது (ஸல்) அவர்கள் பாதுகாவல் தேடிய தீமைகள் அனைத்தை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

إِلَيْهَا قَرَّبَ وَمَا النَّار، مِنَ بِكَ وَأَعُوْذُ عَمَلٍ، أَوْ قَوْلٍ إِلَيْهَامِنْ قَرَّبَ وَمَا الْجَنَّةَ، أَسْأَلُكَ إِنِّيْ لَّهُمَّأَا
خَيْرًا لِيْ قَضَيْتَهُ قَضَاءٍ كُلَّ تَجْعَلَ أَنْ وَأَسْأَلُكَ عَمَلٍ أَوْ قَوْلٍ مِنْ .

யாஅல்லாஹ்! சொர்க்கத்தையும் அதன் பக்கம் நெருக்கி வைக்கும் சொல் மற்றும் செயலையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். மேலும் நரகத்தை விட்டும் அதன் பக்கம் நெருக்கி வைக்கும் சொல் மற்றும் செயலை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மேலும் நீ எனக்கு நிர்ணயித்துள்ள அனைத்துத் தீர்ப்புக்களையும் எனக்கு நல்லதாக ஆக்கிவைக்குமாறு உன்னிடம் வேண்டுகிறேன்.

كُلِّ عَلَى وَهُوَ الْخَيْرُ بِيَدِهِ وَيُمِيْتُ، يُحْيِيْ الْحَمْدُ، وَلَهُ الْمُلْكُ لَهُ لَهُ، شَرِيْكَ لاَ وَحْدَهُ اللّٰهُ إِلاَّ لاَإِلَهَ
بِاللهِ إِلاَّ قُوَّةَ وَلاَ حَوْلَ ولاَ أَكْبَرُ، وَاللّٰهُ اللّٰهُ، إِلاَّ إِلَهَ وَلاَ ، لِلَّهِ لْحَمْدُوَا اللّٰهِ، سُبْحَانَ قَدِيْرٌ، شَيْءٍ
الْعَظِيْمِ الْعَلِيِّ

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. அனைத்து ஆட்சியும் அனைத்துப் புகழும் அவனுக்குரியதே! அவனே உயிர்ப்பிப்பவன், அவனே மரணிக்கச் செய்பவன், அவனுடைய கையில்தான் அனைத்து நல்லவைகளும் உள்ளன. அவனே அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். அல்லாஹ் மிகத் தூய்மையானவன், புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, அல்லாஹ் மிகப் பெரியவன். மகத்துவமிக்க, மிக உயர்ந்த வனான அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டும்) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

حَمِيْدٌ إِنَّكَ إِبْرَاهِيْمَ آلِ وَعَلَى يْمَإِبْرَاهِ عَلَى صَلَّيْتَ كَمَا مُحَمَّدٍ آلِ وَعَلَى مُحَمَّدٍ عَلَى صَلِّ اَللَّهُمَّ
إِنَّكَ إِبْرَاهِيْمَ آلِ وَعَلَى إِبْرَاهِيْمَ عَلَى بَارَكْتَ كَمَا مُحَمَّدٍ آلِ وَعَلَى مُحَمَّدٍ عَلَى بَارِكْ اَللَّهُمَّ مَجِيْدٌ،
مَجِيْدٌ حَمِيْدٌ

யாஅல்லாஹ்! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் அருள்புரிந்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் அருள்புரிவாயாக! நிச்சயமாக நீயே பெருமைக்கும் புகழுக்குமுரியவன். யாஅல்லாஹ்! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் பரகத் செய்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் பரகத் செய்வாயாக! நிச்சயமாக நீயே பெருமைக்கும் புகழுக்குமுரியவன்.

{ النَّار عَذَابَ وَقِنَا حَسَنَةً ٱلْآخِرَةِ وَفِي حَسَنَةً الدُّنْيَا فِيْ آتِنَا رَبَّنَا }

எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங் களையும் மறுமையில் நற்பாக்கியங்களையும் தருவாயாக! மேலும் எங்களை நரக வேதனையிலிருந்து காத்தருள்வாயாக!

ஹஜ் செய்பவர் இப்புனித இடத்தில் மேற்கண்ட திக்ர், துஆக்களையும் இவை போன்ற பொருள் கொண்ட திக்ர், துஆக்களையும் நபி (ஸல்) அவர்கள் மீது கூறவேண்டிய ஸலவாத்தையும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பதும் மனமுறுகி துஆச் செய்வதும் விரும்பத்தக்க செயலாகும். இம்மை, மறுமையின் நல்லவற்றை அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் பிரார்த்தனை செய்தால் அதனை மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறுவார்கள். எனவே நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியவர் களாக - ஒவ்வொன்றையும் மும்மூன்று முறை பிரார்த்திக்க - வேண்டும்.

இந்த இடத்தில் முஸ்லிம் தனது இரட்சகனுக்கு முன் கட்டுப்பட்டவனாக, அவனுக்கு அடிபணிந்தவனாக, அவனிடம் சரணடைந்தவனாக, அவன் முன் கீழ்படிந்தவனாக, அவனுடைய அருளையும் பாவமன்னிப்பையும் எதிர்பார்த் தவனாக, அவனுடைய தண்டனைக்கும் கோபத்திற்கும் பயந்தவனாக, தன்னை -சுயபரிசோதனை செய்து- விசாரித்த வனாக, மனத் தூய்மையுடன் பாவமன்னிப்புத் தேடியவனாக நடந்து கொள்ளவேண்டும்.

ஏனெனில் நிச்சயமாக அரஃபா தினம் என்பது பெருங் கூட்டத்தினர் ஒன்றிணையும் மகத்தான நாளாகும். இந்நாளில் அல்லாஹ் தன் அடியார்களுக்கு அருட்கொடைகளை வாரி வழங்குகிறான். மலக்குகளிடம் அவர்களைப் பற்றிக் கூறிப் பெருமைப்படுகிறான். இந்நாளில் அதிகமானோருக்கு நரகத்திலிருந்து விடுதலை அளிக்கின்றான். அரஃபாவுடைய நாளில், ஷைத்தான் விரட்டப்பட்டு, மிகச் சிறுமையடைந்து, கேவலப்படுவது போன்று மற்ற எந்த நாட்களிலும் கேவலப்படுவதில்லை. -பத்ர் களத்தில் அவன் அடைந்த இழிவைத் தவிர-. அரஃபா தினத்தன்று அல்லாஹ் தன் அடியாருக்கு வழங்கும் கொடையையும் கிருபையையும் அதிகமானோருக்கு நரகிலிருந்து விடுதலை அளிப்பதையும் பாவங்களுக்கு மன்னிப்பு வழங்குவதையும் அறிந்திருப்பதால் ஷைத்தான் இவ்வாறு கைசேதப்படுகிறான்.

( مَا مِنْ يَوْمٍ أَكْثَرَ مِنْ أَنْ يُعْتِقَ اللَّهُ فِيهِ عَبْدًا مِنَ النَّارِ مِنْ يَوْمِ عَرَفَةَ وَإِنَّهُ لَيَدْنُو ثُمَّ يُبَاهِي بِهِمُ الْمَلَائِكَةَ فَيَقُولُ مَا أَرَادَ هَؤُلَاءِ؟ )

அரஃபாவுடைய நாளில் அல்லாஹ் தன் அடியார்களை நரகத்திலிருந்து விடுவிப்பதைவிட மிக அதிகமாக வேறு எந்த நாளிலும் விடுவிப்பதில்லை. நிச்சயமாக அவன் -அந்நாளில்- அவர்களை நெருங்குகிறான். இவர்கள் எதனை எதிர் பார்க்கின்றார்கள்! என்று மலக்குகளிடம் கூறிப் பெருமைப் படுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூல் : முஸ்லிம்)

முஸ்லிம்கள் தங்களை அல்லாஹ்வுக்கு முன்னிலையில் சிறந்தவர்களாக காண்பிக்கவேண்டும். திக்ர் மற்றும் துஆக் களை அதிகமாகச் செய்யவேண்டும். அனைத்துப் பாவங்களுக்காகவும் தவறுகளுக்காகவும் மன்னிப்புத்தேடி, உறுதியாகத் தவ்பாச் செய்ய வேண்டும். இவை போன்ற நல்லறங்களால் முஸ்லிம்களின் எதிரியான ஷைத்தானை கவலைக்குள்ளாக்கி கேவலப்படுத்தவேண்டும்.

ஹஜ் செய்பவர், சூரியன் மறையும்வரை அரஃபாவில் தங்கி மன ஈடுபாட்டுடன் திக்ர், துஆக்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். சூரியன் மறைந்து விட்டால் அமைதியாகவும் கம்பீரமாகவும் அதிகமாகத் தல்பியாக் கூறியவர்களாகவும் முஸ்தலிஃபாவை நோக்கிச் செல்ல வேண்டும். விசாலமான இடத்தில் நபி (ஸல்) அவர்கள் விரைவாகச் சென்றுள்ளதால் அது போன்ற இடங்களைக் கடக்கும் போது விரைவாகச் செல்ல வேண்டும். சூரியன் மறைவதற்கு முன் (அரஃபாவிலிருந்து) புறப்படுவது கூடாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் சூரியன் மறையும் வரை அரஃபாவில் தங்கியுள்ளார்கள். மேலும் உங்களுடைய ஹஜ் வழிபாட்டை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்! என்றும் கூறியுள்ளார்கள். (நூல் : பைஹகீ)

முஸ்தலிஃபா வந்தடைந்தவுடன் ஒரு பாங்கு, இரு இகாமத் கூறி மஃரிபை மூன்று ரகஅத்களாகவும் இஷாவை இரண்டு ரகஅத்களாகவும் ஜம்ஆக -

இரண்டையும் ஒரே நேரத்தில்- தொழவேண்டும். இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள். மஃரிபுடைய நேரத்திலோ, அல்லது இஷாவுடைய நேரம் வந்த பிறகோ ஆக, எந்நேரத்தில் முஸ்தலிஃபாவை வந்தடைந்தாலும் இவ்வாறே தொழ வேண்டும்.

பொதுமக்களில் சிலர் முஸ்தலிஃபா வந்தடைந்தவுடன் தொழுவதற்கு முன்னர் ஜம்ராவிற்காக கல்லெடுக்கச் செல்வதும் அவ்வாறு செய்வதுதான் முறையானது என நம்பிக் கொண்டிருப்பதும் தவறாகும். இதற்கு எந்த ஆதாரமும் கிடையாது.

நபி (ஸல்) அவர்கள் முஸ்தலிஃபாவைக் கடந்து மினாவுக்குச் செல்லும் போதுதான் அவர்களுக்காகக் கற்களை எடுத்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். எந்த இடத்திலும் கற்களை எடுத்துக் கொள்ளலாம். முஸ்தலிஃபாவில்தான் கற்களை எடுக்க வேண்டும் என (மார்க்கத்தில்) குறிப்பாகக் கூறப்படவில்லை. மாறாக மினாவிலேயே கூட எடுத்துக் கொள்வதற்கு அனுமதியுள்ளது.

-நபி (ஸல்) அவர்களை பின்பற்றியவர்களாக- ஜம்ரத்துல் அகபாவிற்கு (10-ம் நாள்) எறியவேண்டிய ஏழு கற்களை -மட்டும்- அன்றைய தினம் எடுத்துக் கொள்வது சுன்னத்தாகும். பிறகுள்ள மூன்று நாட்களில் மூன்று ஜம்ராக்களுக்கும் எறியவேண்டிய கற்களை ஒவ்வொரு நாளும் 21 கற்கள் வீதம் மினாவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அக்கற்களைக் கழுவிக் கொள்வது மார்க்கத்தில் விரும்பத்தக்க செயலல்ல. மாறாக அவைகள் கழுவப்படாமல் எறியப் படவேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களோ, அவர்களின் தோழர்களோ அவைகளை கழுவியதற்கு எந்த ஆதாரமுமில்லை. எறியப்பட்ட கற்களைக் கொண்டு மீண்டும் எறியக் கூடாது.

ஹஜ் செய்பவர், அன்றிரவு முஸ்தலிஃபாவில் தங்க வேண்டும். பெண்கள்,

சிறுவர்கள் மற்றும் அவர்களைப் போன்ற பலவீனமானவர்கள் அன்றிரவின் இறுதிப் பகுதியில் மினாவுக்குச் செல்ல அனுமதியுள்ளது. ஆயிஷா (ரலி), உம்மு ஸலமா (ரலி) போன்றோர் அறிவிக்கும் ஹதீஸ்களில் இந்த அனுமதி இடம்பெற்றுள்ளது.

சலுகை வழங்கப்பட்டுள்ள இவர்களைத் தவிர ஹஜ் செய்பவர்கள் அனைவரும் ஃபஜ்ர் தொழும் வரை கண்டிப்பாக முஸ்தலிஃபாவில் தங்கியாக வேண்டும். பிறகு மஷ்அருல் ஹராமில் கிப்லாவை முன்னோக்கியவர்களாக தங்கி (வானம்) நன்கு வெளுக்கும் வரை அதிகமாக திக்ர், தக்பீர் மற்றும் துஆக்களில் ஈடுபட வேண்டும். அங்கு இரு கைகளையும் உயர்த்தி துஆச் செய்வது விரும்பத்தக்க செயலாகும். முஸ்தலிஃபாவின் எந்தப் பகுதியில் தங்கினாலும் அதனை நிறைவேற்றியதாகிவிடும்.
மஷ்அருக்கருகில் தங்குவதோ, அல்லது அதன் மீது ஏறுவதோ கடமையல்ல.
ஏனெனில் நபி (ஸல்) அவர்கள்
(مَوْقِفٌ كُلُّهَا وَجَمْعٌ هَاهُنَا وَوَقَفْتُ . . )
நான் இங்கு -மஷ்அரில்- தங்குகிறேன். மேலும் ஜம்உ அனைத்தும் தங்குமிடமே! என்றார்கள். (நூல் : முஸ்லிம்) ஜம்உ என்பது முஸ்தலிஃபாவின் மற்றொரு பெயராகும்.

(வானம்) நன்கு வெளுத்துவிட்டால் சூரியன் உதிப்பதற்கு முன்னர் மினாவுக்குப் புறப்பட வேண்டும். செல்லும் வழியில் அதிகமாக தல்பியாக் கூறவேண்டும். முஹஸ்ஸிர் என்ற பகுதியை மட்டும் சற்று விரைவாகக் கடப்பது விரும்பத்தக்க செயலாகும். மினாவில் ஜம்ரத்துல் அகபாவை வந்தடைந்து விட்டால் தல்பியாவை நிறுத்திவிட வேண்டும். பிறகு ஜம்ரத்துல் அகபாவை நெருங்கி ஏழு கற்களை ஒன்றன்பின் ஒன்றாக எறிய வேண்டும். ஒவ்வொரு கல்லை எறியும் போதும் தக்பீர் கூறியவாறு கையை உயர்த்தி எறிய வேண்டும்.
பத்னுல்வாதி எனும் பகுதியில் கஃபா இடது புறம் இருக்குமாறும் மினா வலதுபுறமிருக்குமாறும் நின்று கொண்டு எறிவது விரும்பத்தக்க செயலாகும். ஏனெனில் இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் செய்துள்ளார்கள்.

பிற பகுதிகளிலிருந்து எறிந்து அது கல்லெறியப்படுமிடத்தில் விழுந்து விட்டால் அது நிறைவேறிவிடும். எறியப்படும் இடத்தில் விழுந்த கற்கள் அதிலேயே தங்கிட வேண்டும் என்ற நிபந்தனையில்லை. மாறாக கல்லெறியப்படுமிடத்தில் விழுவதுதான் நிபந்தனையாகும். எனவே கல், அது எறியப்படும் இடத்தில் பட்டு பிறகு வெளியே விழுந்துவிட்டால் - அறிஞர்களின் தெளிவான கூற்றின்படி- அது நிறைவேறி விடும். இதனை இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் ஷரஹுல் முஹத்தப் எனும் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

ஜம்ராவில் எறியும் கற்கள் விரல்களால் சுண்டி எறியப்படும் அளவில் அதாவது; மொச்சையை விடச் சற்றுப் பெரியதாக இருக்கவேண்டும்.

கல்லெறிந்த பிறகு பிராணியை -ஹதியை- அறுக்கவேண்டும். அறுக்கும் போது
بِسْمِ اللهِ وَاللّٰهُ أَكْبَرُ، أَللَّهُمَّ هَذَا مِنْكَ وَلَكَ
என்றுகூறி கிப்லாவை முன்னோக்கி அறுப்பது விரும்பத்தக்கச் செயலாகும். ஒட்டகத்தை அதன் இடது கால் கட்டப்பட்டவாறு நிற்கவைத்து அறுப்பதும், மாட்டையும் ஆட்டையும் அதன் இடதுபுறம் (படுக்கவைத்து) அறுப்பதும் சுன்னத்தாகும். கிப்லா அல்லாத திசைகளை முன்னோக்கி அறுப்பவர் சுன்னத்தை விட்டவராவார். எனினும் அவ்வாறு அறுக்கப்பட்ட ஹதீ நிறைவேறிவிடும். ஏனெனில் கிப்லாவை முன்னோக்கி அறுப்பது சுன்னத்து தானே தவிர கடமையல்ல.

தான் அறுத்த பிராணியிலிருந்து தானும் சாப்பிட்டு, பிறருக்கு அன்பளிப்பும் தர்மமும் செய்வது விரும்பத்தக்கச் செயலாகும்.
فَكُلُوْا مِنْهَا وَأَطْعِمُوا الْبَائِسَ الْفَقِيْرَ) . .
ஆகவே அ(றுக்கப்பட்ட)வைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள்! கஷ்டப்படும் ஏழைக்கும் உண்ணக் கொடுங்கள்! என அல்லாஹு தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 22:28)

-அறிஞர்களின் சரியான கூற்றின்படி- பலிப் பிராணியை அறுப்பதற்குரிய நேரம் தஷ்ரீக்கின் மூன்றாம் நாள் (பிறை 13-ம் நாள்) சூரியன் மறையும் வரை நீடிக்கிறது. இதனடிப்படையில் அறுப்பதன் கால அளவு 10-ம் நாளும் அதற்கு பிறகு மூன்று நாட்களுமாகும்.

பலிப் பிராணியை அறுத்த பிறகு தலை (முடி)யை மழித்துக் கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ வேண்டும். எனினும் மழித்துக் கொள்வதே சிறந்ததாகும். ஏனெனில் மழித்துக் கொள்பவருக்கு அருளுக்காகவும் பாவமன்னிப்பிற்காகவும் மூன்றுமுறை துஆச் செய்த நபி (ஸல்) அவர்கள், குறைத்துக் கொள்பவர்களுக்காக ஒரு முறைதான் பிரார்த்தித்தார்கள். தலையின் சில பகுதிகளை மட்டும் குறைத்துக் கொள்வது போதுமானதாகாது. மாறாக அனைத்துப் பகுதிகளையும் மழிப்பது போன்று அனைத்துப் பகுதிகளையும் குறைப்பதும் அவசியமாகும். பெண் தனது அனைத்து ஜடைகளின் கடைசிப் பகுதியில் விரல் நுனியளவோ அல்லது அதைவிடக் குறைவாகவோ முடியை வெட்டிக் கொள்ளவேண்டும்.

(10-ம் நாள்) ஜம்ரத்துல் அகபாவிற்குக் கல்லெறிந்து (முடியை) மழித்தோ அல்லது குறைத்தோ விட்டால் இஹ்ராம் அணிந்தவருக்கு இஹ்ராமினால் தடுக்கப்பட்டவைகளில் பெண்களை (இல்லறத்தை)த் தவிர மற்ற அனைத்தும் அனுமதியாகிவிடும். இந்த அனுமதிக்கு (தஹல்லுலுல் அவ்வல்) முதலாவது அனுமதி என்று பெயர். இவ்வாறு இஹ்ராமைக் களைந்து ஹலாலான பிறகு நறுமணம் பூசிக் கொண்டு தவாஃபுல் இஃபாழா -ஹஜ்ஜுக்குரிய தவாஃப்- செய்வதற்காக மக்காவுக்குச் செல்வது சுன்னத்தாகும்.

நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிவதற்கு முன்பும் (துல்ஹஜ் 10-ம் நாள்) இஹ்ராமைக் களைந்து, கஃபாவைத் தவாஃப் செய்வதற்கு முன்பும் நான் அவர்களுக்கு நறுமணம் பூசிவிட்டேன் என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.
(நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

இந்த தவாஃபிற்கு இஃபாழா என்றும் ஜியாரா என்றும் பெயர். ஹஜ்ஜின் அடிப்படைக் கடமைகளில் இந்த தவாஃபும் ஒன்றாகும். இதனை செய்யாவிட்டால் ஹஜ் நிறைவேறாது. இந்த தவாஃபைப் பற்றியே இவ்வசனத்தில் கூறப்படுகிறது.

ثُمَّ لْيَقْضُوا تَفَثَهُمْ وَلْيُوفُوا نُذُورَهُمْ وَلْيَطَّوَّفُوا بِالْبَيْتِ الْعَتِيقِ

பின்னர் (தலைமுடி இறக்கி, நகம் தறித்து, குளித்து இஹ்ராமை களைவதன் மூலம்) தங்கள் அழுக்குகளை அவர்கள் நீக்கிக் கொள்ளவும்! தம் நேர்ச்சைகளையும் அவர்கள் நிறைவேற்றிக் கொள்ளவும்! (ஹஜ்ஜின் அடிப்படைக் கடமையான தவாஃபை நிறைவேற்ற) பூர்வீக ஆலயமான (கஃபா எனும்) வீட்டையும் அவர்கள் (தவாஃப் செய்ய) சுற்றி வரவும்! (அல்குர்ஆன் 22:29)

தவாஃபை நிறைவேற்றி, அதற்குரிய இரண்டு ரகஅத்களை மகாமு இப்ராஹீமுக்குப் பின்னால் தொழுத பிறகு, தமத்துஃ ஹஜ் செய்பவராக இருந்தால் ஸஃபா மர்வாவுக்கிடையில் ஸயீ செய்யவேண்டும். இது ஹஜ்ஜுக்குரிய ஸயீயாகும். இதற்கு முன்னர் செய்த ஸயீ உம்ராவிற்குரியதாகும்.

(தமத்துஃ செய்பவர்) ஹஜ்ஜுக்கும் உம்ராவிற்கும் ஒரு முறை மட்டும் ஸயீ செய்வது போதுமானதாகாது. (மாறாக இரண்டு ஸயீ செய்யவேண்டும்) என்பதே அறிஞர்களின் கூற்றுக்களில் சரியான கூற்றாகும். ஆயிஷா (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களுடன் சென்ற தனது ஹஜ் பயணத்தைப் பற்றிக் கூறும் போது :

. . எவருடன் பலிப்பிராணி உள்ளதோ அவர் தனது ஹஜ்ஜுடன் உம்ராவையும் இணைத்து (கிரானாக) தல்பியா கூறிக்கொள்ளட்டும்! பிறகு அவ்விரண்டிலிருந்தும் (10-ம் நாளன்று) ஹலாலாகும் வரை அவர் இஹ்ராமைக் களையக் கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனடிப்படையில் உம்ராவிற்காக இஹ்ராம் கட்டியவர்கள் கஃபாவை

தவாஃப் செய்து ஸஃபா, மர்வாவுக்கிடையில் ஸயீ செய்தார்கள். பிறகு இஹ்ராமைக் களைந்துவிட்டார்கள். அதன்பின் மினாவிலிருந்து திரும்பிய பிறகு ஹஜ்ஜுக்காக மற்றொரு முறை தவாஃப் சுற்றினார்கள். . . என்று கூறினார்கள். (நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்தவர்களின் ஹஜ் செய்முறைகளை கூறிவந்த ஆயிஷா (ரலி) அவர்கள், அதன்பின் மினாவிலிருந்து திரும்பிய பிறகு ஹஜ்ஜுக்காக மற்றொரு முறை தவாஃப் சுற்றினார்கள். . என்று கூறியுள்ளார்கள். இங்கு அவர்கள் தவாஃப் என்று கூறியது, ஸஃபா, மர்வாவுக்கிடையில் சுற்றியதையே கருத்தில் கொண்டு கூறியுள்ளார்கள் என்பதே இந்த ஹதீஸின் விரிவுரையின் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றாகும்.

மற்றொரு முறை தவாஃப் செய்தார்கள் என்ற வார்த்தையை தவாஃபுல் இஃபாழாவை கருத்தில் கொண்டே கூறியுள்ளார்கள் என்று கூறுவோரின் கூற்று சரியானதல்ல. ஏனெனில் தவாஃபுல் இஃபாழா என்பது (மூன்று வகை ஹஜ்ஜில் எதனைச் செய்தாலும்) அனைவரும் நிறைவேற்ற வேண்டிய அடிப்படைக் கடமையாகும். அதனை அவர்கள் அனைவரும் நிறைவேற்றி யுமிருந்தனர்.

எனவே ஆயிஷா (ரலி) அவர்கள் தனது இவ்வார்த்தையின் மூலம் தமத்துஃ செய்பவர்கள் மட்டும் பிரத்தியேகமாக நிறைவேற்றிய ஒன்றை கூற நினைத்துள்ளார்கள். அது: மினாவிலிருந்து திரும்பிய பிறகு ஹஜ்ஜை முழுமையாக்கு வதற்காக மற்றொரு முறை ஸஃபா, மர்வாவுக்கிடையில் ஸயீயிக்காகச் சுற்றினார்கள் என்பதே! -இறையருளால்- இதுவே மிகத் தெளிவானதும் அறிஞர்களில் பெரும்பாலானோரின் கூற்றுமாகும்.

இக்கருத்தே சரியானது என்பதை -அறிவிப்பாளர் வரிசையுடன்- பாடத் தலைப்பாக புகாரியில் இடம்பெற்றுள்ள இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கூற்றும் உறுதிப்படுத்துகிறது :

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் தமத்துஃ ஹஜ் பற்றி வினவப்பட்டது. அதற்கவர்கள், ஹஜ்ஜத்துல் விதாவில் முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் நபி (ஸல்) அவர்களின் மனைவியரும் இஹ்ராம் அணிந்திருந்தார்கள். நாங்களும் இஹ்ராம் அணிந்திருந்தோம். நாங்கள் மக்கா வந்தடைந்ததும் பலிப்பிராணியை -தன்னுடன் கொண்டுவந்து, அதனை ஹரமில் அறுப்பதற்கு அடையாளமாக அதன் கழுத்தில் எதையேனும்- தொங்கவிட்டவர்களைத் தவிர மற்றவர்கள் ஹஜ்ஜுக்காக அணிந்த இஹ்ராமை உம்ராவிற்காக மாற்றிக் கொள்ளுங்கள்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே நாங்கள் தவாஃப் செய்து, ஸஃபா மர்வாவை ஸயீ செய்து . . உம்ராவை நிறைவேற்றினோம். பிறகு இல்லறத்தில் ஈடுபட்டோம், (தைக்கப்பட்ட) ஆடைகளை அணிந்தோம்.

பலிப்பிராணியின் -கழுத்தில் அடையாளத்தைத்- தொங்க விட்டவர், அப்பிராணி அதன் இடத்தை அடையும் வரை -அது அறுக்கப்படும் வரை- அவர் இஹ்ராமைக் களையக் கூடாது என்றும் கூறினார்கள்.

பிறகு எட்டாம் நாள் இரவு ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்து கொள்ள கட்டளையிடப்பட்டோம். இவ்வாறு வழிபாடுகளை நிறைவேற்றிய பிறகு -மக்காவிற்கு- வருகை தந்து கஃபாவை தவாஃப் செய்தோம். ஸஃபா, மர்வாவிற்கிடையில் ஸயீ செய்தோம்.

இச்செய்தியின் வாயிலாக, தமத்துஃ செய்பவர் இரண்டு ஸயீ செய்யவேண்டும் என்பது மிகத் தெளிவாகிறது. - அல்லாஹ் மிக அறிந்தவன் -

நிச்சயமாக நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் ஸஃபா, மர்வாவிற்கிடையில் முதலாவதாக ஒருமுறை சுற்றியதைத் தவிர (பிறகு) சுற்றவில்லை என ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் முஸ்லிமில் இடம்பெற்றுள்ளது. இது தங்களுடன் பலிப்பிராணியைக் கொண்டுவந்த நபித் தோழர்களின் செயல்களைப் பற்றிய செய்தியாகும். ஏனெனில்

அவர்கள் ஹஜ், உம்ரா இரண்டிலிருந்தும் -10-ம் நாள்- இஹ்ராமைக் களையும் வரை நபி (ஸல்) அவர்களுடன் இஹ்ராமோடு இருந்தனர். நபி (ஸல்) அவர்களும் ஹஜ்ஜுக்காகவும் உம்ராவிற்காகவும் (கிரானாக) இஹ்ராம் அணிந்திருந்தார்கள். பலிப்பிராணியைக் கொண்டுவந்தவர்கள் ஹஜ்ஜுடன் உம்ராவிற்கும் (கிரானாக) தல்பியாக் கூறிக் கொள்ளுமாறும் அவர்கள் (10-ம் நாளன்று) இரண்டிலிருந்தும் ஒன்றாக இஹ்ராமைக் களையும் வரை -அதற்கு முன்னர்- இஹ்ராமைக் களையக் கூடாது என்றும் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.
ஹஜ்ஜையும் உம்ராவையும் ஒன்றாக இணைத்து (கிரானாக) ஹஜ் செய்பவர் ஒரு முறை மட்டும் ஸயீ செய்யவேண்டும் என்பதையே மேற்கூறப்பட்ட ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸும் பிற ஸஹீஹான ஹதீஸ்களும் அறிவிக்கின்றன.

இதுபோன்றே (இஃப்ராத் முறையில்) ஹஜ் மட்டும் செய்பவரும் 10-ம் நாள்வரை இஹ்ராமுடனே இருந்து, ஒரு முறை மட்டுமே ஸயீ செய்யவேண்டும். கிரான் ஹஜ் செய்பவரும் இஃப்ராத் செய்பவரும் மக்கா வருகை தந்தவுடன் செய்த தவாஃபுக்குப் பிறகு ஸயீ செய்திருந்தால் தவாஃபுல் இஃபாழாவுக்குப் பிறகுள்ள ஸயீக்கும் அதுவே போதுமானதாகிவிடும்.

இதுவே ஆயிஷா (ரலி) மற்றும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் இரு ஹதீஸ்களையும் மேற்கூறப் பட்டுள்ள ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸையும் ஒன்றிணைக்கும் முடிவாகும். இதன் மூலம் ஹதீஸ் களுக்கிடையில் தென்படும் முரண்பாடுகள் நீங்கி, அனைத்து ஹதீஸ்களின் அடிப்படையில் செயல்படவும் முடியும்.

இவ்வொருங்கிணைப்பை உறுதிப்படுத்தும் மற்றொரு விஷயம் யாதெனில் ஆயிஷா (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி) ஆகிய இருவர் அறிவிக்கும் ஹதீஸும் ஸஹீஹான ஹதீஸ்களாகும். இவ்விரண்டும் தமத்துஃ செய்பவர் இரண்டு ஸயீ செய்ய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஜாபிர் (ரலி)

அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் மேலோட்டமாக அதனை (ஸயீயை) மறுக்கிறது. சட்டக்கலையிலும் ஹதீஸ்கலையிலும் பின்பற்றப்படும் விதிகளில், செய்யவேண்டியதில்லை என்பதை விட செய்யவேண்டும் என்று வந்துள்ள கூற்றுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும்.

அல்லாஹ்வே சரியான கூற்றிற்கு வழிகாட்டுபவன். அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டும்) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

## 10. ஹஜ் செய்பவர் 10-ம் நாளின் செயல்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவது பற்றிய விளக்கம்

ஹஜ் செய்பவர் 10-ம் நாளில்; நான்கு செயல்களை ஒன்றன்பின் ஒன்றாக -வரிசையாகச்- செய்வது மிகச் சிறந்த தாகும். முதலாவதாக, ஜமரத்துல் அகபாவிற்கு கல்லெறிதல். பிறகு -பிராணிகளைப்- பலியிடுதல். பிறகு (முடியை) மழித்தல் அல்லது குறைத்தல். பிறகு கஃபாவை தவாஃப் செய்தல். இதன் பிறகு, தமத்துஃ ஹஜ் செய்பவர் ஸயீ செய்தல். அதுபோன்று கிரான் மற்றும் இஃப்ராத் ஹஜ் செய்பவர்கள், கஃபாவிற்கு வருகை தந்ததிற்காக செய்த தவாஃபுடன் ஸயீ செய்யவில்லை என்றால் அவர்களும் ஸயீ செய்தல்.

இச்செயல்களில் ஒன்றைவிட மற்றொன்றை முன், பின்னாக மாற்றிச் செய்தால் அதுவும் நிறைவேறியதாகவே ஆகும். 10-ம் நாள் செயல்களை முன், பின் மாற்றிச் செய்வதை நபி (ஸல்) அவர்கள் பொதுவாக அனுமதித்துள்ளதால் அதில் தவாஃபை விட ஸயீயை முற்படுத்துவதும் அடங்கும். ஏனெனில் அதுவும் 10-ம் நாளில் செய்யப்படும் வழிபாடுகளில் உள்ளவைதான். 10-ம் நாளின் செயல்களில் -ஒன்றைவிட மற்றொன்றை- முற்படுத்துவது பற்றியும் பிற்படுத்துவது பற்றியும் கேட்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் செய்து கொள்! அதனால் குற்றமில்லை! என்றே நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என்ற நபித்தோழர்pன் கூற்றில் -தவாஃபை விட

ஸயீயை முற்படுத்துவதும்- அடங்கிவிடும். மேலும் தவாஃபும் ஸயீயும் மறதியாலும் அறியாமையாலும் -முன்பின்- நிகழ வாய்ப்புள்ளதால் நிச்சயமாக இப்பொது அனுமதியில் அதுவும் இடம்பெற்றுவிடும். மேலும் இவ்வனுமதியில்தான் இலகுவும் வசதியும் உள்ளது.

தவாஃப் செய்வதற்கு முன்னால் ஸயீ செய்துவிட்ட ஒருவரைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அதனால் குற்றமில்லை! என்றார்கள் என உஸாமா பின் ஷாPக் (ரலி) அறிவிக்கும் ஸஹீஹான ஹதீஸ் அபூதாவுதில் இடம் பெற்றுள்ளது. -தவாஃபையும் ஸயீயையும் முன், பின் மாற்றிச் செய்வது 10-ம் நாளின்- பொது அனுமதியில் அடங்கிவிடும் என்பது இதன் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகி விட்டது. -அல்லாஹ்வே நேர்வழி காட்டுபவன்-

ஹஜ் செய்பவர் முழுமையாக -இஹ்ராமிலிருந்து- விடுபட மூன்று காரியங்களைச் செய்தாகவேண்டும். அவை : (10-ம் நாள்) ஜமரத்துல் அகபாவுக்குக் கல்லெறிய வேண்டும். (முடியை) மழிக்கவோ அல்லது குறைக்கவோ வேண்டும். தவாஃபுல் இஃபாழா செய்யவேண்டும். தமத்துஃ ஹஜ் செய்பவரும் கிரான் மற்றும் இஃப்ராத் ஹஜ் செய்பவர்களும் கஃபாவிற்கு வருகை தந்ததிற்காகச் செய்த தவாஃபுடன் ஸயீ செய்யவில்லை என்றால் அவர்கள் இத்தவாஃபுக்குப் பின் ஸயீயும் செய்யவேண்டும்.

இம்மூன்றையும் நிறைவேற்றிவிட்டால் இஹ்ராமினால் தடுக்கப் பட்டிருந்த இல்லறம், நறுமணம் போன்ற அனைத்தும் ஹலால் ஆகிவிடும்.

இதில் இரண்டை மட்டும் நிறைவேற்றியவருக்கு இஹ்ராமினால் தடுக்கப்பட்டவைகளில் பெண்களைத் தவிர மற்ற அனைத்தும் ஹலால் ஆகிவிடும். இந்நிலைக்கு தஹல்லுலுல் அவ்வல் -முதலாவது அனுமதி- என்று பெயர்.

ஹஜ் செய்பவர் ஜம்ஜம் தண்ணீரை வயிறு நிரம்பக் குடிப்பதும் அப்போது

பயனுள்ள பிரார்த்தனைகளை -முடிந்த அளவு- செய்து கொள்வதும் விரும்பத்தக்க செயலாகும். நபி (ஸல்) அவர்கள் ஜம்ஜம் தண்ணீரைப் பற்றி இவ்வாறு கூறினார்கள் :

( مَاءُ زَمْزَمَ لِمَا شُرِبَ لَهُ )

ஜம்ஜம் தண்ணீர் எதற்காகக் குடிக்கப்படுகிறதோ அது கிடைக்கும்.

(அறிவிப்பவர் : ஜாபிர்-ரலி, நூல் : இப்னுமாஜா)

( . . إِنَّهَا طَعَامُ طُعْمٍ . . ) ( وَشِفَاءُ سُقْمٍ )

நிச்சயமாக அது உண்ண உணவாகவும் நோய்க்கு நிவாரணமாகவும் உள்ளது.

(அறிவிப்பவர் : அபூதர் -ரலி, நூல் : முஸ்லிம் - அபூதாவூத்)

ஹஜ் செய்பவர், தவாஃபுல் இஃபாழாவையும், ஸயீ செய்ய வேண்டியவர்கள் ஸயீயையும் நிறைவேற்றிய பிறகு மினாவுக்குத் திரும்பி வந்து அங்கு மூன்று இரவுகள் தங்க வேண்டும். அந்த மூன்று நாட்களிலும் (சூரியன்) உச்சி சாய்ந்த பிறகு மூன்று ஜம்ராக்களுக்கும் கல்லெறியவேண்டும். அதனை (சிறியது, நடு, பெரியது என்று) வரிசையாக எறிவது கடமையாகும்.

ஆரம்பமாக, முதல் ஜம்ராவில் கல்லெறியவேண்டும். அது கைஃப் பள்ளியை அடுத்துள்ள ஜமராவாகும். அதில் ஒன்றன்பின் ஒன்றாக ஏழு கற்களை எறியவேண்டும். ஒவ்வொரு கல்லை எறியும் போதும் கையை உயர்த்தி எறிய வேண்டும். பிறகு சற்று முன்னேறிச் சென்று, ஜம்ரா தனக்கு இடதுபுறம் இருக்குமாறு நின்று கொண்டு, கிப்லாவை முன்னோக்கி, இரு கைகளையும் உயர்த்தி, மிகப் பணிவுடன் அதிகமாகப் பிரார்த்தனை செய்வது சுன்னத்தாகும்.

பிறகு முந்தய ஜம்ராவைப் போல் இரண்டாம் ஜம்ராவுக்குக் கல்லெறிய வேண்டும். பிறகு சற்று முன்னேறிச் சென்று, ஜம்ரா தனக்கு வலதுபுறம் இருக்குமாறு நின்று கொண்டு, கிப்லாவை முன்னோக்கி, இரு கைகளையும் உயர்த்தி, அதிகமாகப் பிரார்த்தனை செய்வது சுன்னத்தாகும். பிறகு மூன்றாம்

ஜம்ராவுக்குக் கல்லெறிய வேண்டும். அதில் (பிரார்த்தனைக்காக) நிற்கக் கூடாது.

பிறகு தஷ்ரீக்குடைய இரண்டாம் நாள் உச்சி சாய்ந்த பின்னர், முதலாம் நாள் எறிந்தது போன்று (மூன்று) ஜமராக் களுக்கும் கல்லெறியவேண்டும். அதில் -நபி (ஸல்) அவர் களைப் பின்பற்றியவராக- முதலாவது மற்றும் இரண்டாம் ஜமராக்களில் முதல் நாள் செய்தது போன்று -பிரார்த்தனை- செய்வது சுன்னத்தாகும்.

தஷ்ரீக்குடைய நாட்களில் முதலிரண்டு நாட்கள் கல்லெறிவது ஹஜ்ஜின் கடமை(யான செயல்)களில் உள்ளவைகளாகும். அது போன்றே 11-ம் இரவும், 12-ம் இரவும் மினாவில் தங்குவதும் கடமையாகும். தண்ணீர் புகட்டுபவர், கால்நடைகளைப் பராமரிப்பவர் போன்றவர்களுக்கு இரவில் மினாவில் தங்குவது கடமையல்ல.

மேற்கூறப்பட்ட (11, 12 ஆகிய) இரண்டு நாட்களிலும் கல்லெறிந்து விட்டவர் மினாவை விட்டும் விரைவாகப் புறப்பட விரும்பினால் அதற்கு அனுமதியுள்ளது, அவ்வாறு புறப்படுபவர் -12-ம் நாள்- சூரியன் மறைவதற்கு முன் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்.

எனினும் தாமதித்து, பதிமூன்றாம் நாள் இரவும் தங்கி, அன்றய தினமும் ஜம்ராக்களுக்கு கல்லெறிந்து விட்டுச் செல்வதே மிகச் சிறந்ததும் அதிக கூலியைப் பெற்றுத்தரும் செயலுமாகும்.

وَاذْكُرُوا اللهَ فِيْ أَيَّامٍ مَعْدُوْدَاتٍ فَمَنْ تَعَجَّلَ فِيْ يَوْمَيْنِ فَلاَ إِثْمَ عَلَيْهِ وَمَنْ تَأَخَّرَ فَلاَ إِثْمَ عَلَيْهِ لِمَنِ اتَّقَى

(மினாவில் தங்கியிருந்து) எண்ணிவிடப்பட்ட (மூன்று) நாட்களில் அல்லாஹ்வை நினைவு கூறுங்கள். ஆகவே எவரொருவர் இரண்டு நாட்களில் அவசரப்பட்டு(ப் புறப்பட்டு) விட்டால் அவர் மீது குற்றமில்லை. எவரொருவர் (மூன்றாம் நாள் வரை) பிற்பட்(டுப் புறப்பட்)டால் அவர் மீதும்

குற்றமில்லை. (இது) யார் (அல்லாஹ்வாகிய) அவனை பயந்து நடக்கின்றார்களோ அவர்களுக்கு (உள்ளதாகும்.) என அல்லாஹு தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 2:203)

நபி (ஸல்) அவர்கள், -12-ம் நாள் மினாவை விட்டும்- விரைவாகச் செல்ல மக்களுக்கு அனுமதி வழங்கினார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் விரைவாகப் புறப்படவில்லை. மாறாக 13-ம் நாள் சூரியன் உச்சி சாயும் வரை மினாவில் தங்கியிருந்து, அதன் பிறகு ஜம்ராக்களுக்குக் கல்லெறிந்தார் கள். பின்னர் ளுஹர் தொழுகைக்கு முன்னர் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

கல்லெறிய இயலாத சிறுவர்களுக்காக அவர்களின் பொறுப்பாளர்கள் (10-ம் நாள்) ஜமரத்துல் அகபாவிலும் (தஷ்ரீக்குடைய நாட்களில்) அனைத்து ஜம்ராக்களிலும் தனக்கு எறிந்ததற்குப் பிறகு அவர்களுக்காகக் கல்லெறிய வேண்டும். அதுபோல் கல்லெறிய இயலாத சிறுமிகளுக்காக அவர்களின் பொருப்பாளர்கள் அவர்களுக்குப் பகரமாகக் கல்லெறிய வேண்டும். ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :

( حَجَجْنَا مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ وَمَعَنَا النِّسَاءُ وَالصِّبْيَانُ فَلَبَّيْنَا عَنِ الصِّبْيَانِ وَرَمَيْنَا عَنْهُمْ )
நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்தோம். எங்களுடன் பெண்களும் சிறுவர்களும் இருந்தனர். சிறுவர் களுக்குப் பகரமாக நாங்கள் தல்பியாக் கூறினோம். மேலும் அவர்களுக்கு பகரமாக நாங்கள் கல்லுமெறிந்தோம். (நூல் : இப்னுமாஜா)

( فَاتَّقُوا اللهَ ما اسْتَطَعْتُمْ )
இயன்ற அளவிற்கு நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! (64:16) என்ற அல்லாஹ்வின் கட்டளைக் கிணங்க நோய், முதுமை, கர்ப்பம் போன்ற காரணங்களால் கல்லெறிய சக்தியற்றவர்கள் தங்களுக்குப் பகரமாக பிறரை நியமிக்க அனுமதியுள்ளது.

மக்கள் நெரிசலில் இவர்களால் ஜமராக்களுக்குக் கல்லெறிய முடியாது. (தாமதமாகச் சென்று எறியலாம் என்றால் அதற்குள்) கல்லெறியும் நேரம் முடிந்து போய்விடும். அதனை களாச் செய்யவும் முடியாது. எனவே இதனை நிறைவேற்ற மாத்திரம் பிறரை நியமிக்க அனுமதி உள்ளது. இது தவிர உள்ள ஹஜ்ஜின் பிற வழிபாடுகளில் (பகரமாகப் பிறரை) நியமிக்கக் கூடாது.
ஹஜ்ஜுக்காகவோ, உம்ராவுக்காகவோ இஹ்ராம் அணிந்துவிட்டால் - அவ்விரண்டும் நஃபிலானவை களாக இருந்தாலும் சரியே!- அதனை முழுமையாக நிறை வேற்றுவது கடமையாகும். அதனை நிறைவேற்றுவதற்காக தனக்குப் பகரமாக பிறரை நியமிக்கக் கூடாது.
(وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلهِ)
ஹஜ்ஜையும் உம்ராவையும் நீங்கள் அல்லாஹ்வுக்காக நிறைவு செய்யுங்கள்! என அல்லாஹு தஆலா கூறுகின்றான்.
(அல்குர்ஆன் 2:196)
தவாஃபின் நேரமும் ஸயீயின் நேரமும் (வரையறுக்கப்பட வில்லை என்பதால் அது) முடிந்துவிடாது. ஆனால் கல்லெறி யும் நேரம் (வரையறுக்கப்பட்டிருப்பதினால் அது) முடிந்துவிடும்.

அரஃபாவில் தங்குவதும், முஸ்தலிஃபா மற்றும் மினாவில் இரவில் தங்குவதும் (விரைவில்) கடந்துவிடும் -குறிப்பிட்ட- நேரங்கள்தான் என்பதில் சந்தேகமில்லை. எனினும் இயலாதவர்கள் சிரமப்பட்டாவது அந்த இடங்களை அதற்குரிய நேரத்தில் சென்றடைய முடியும். ஆனால் அவர்களால் கல்லெறிதலை அதற்குரிய நேரத்தில் நிறை வேற்றமுடியாது. மேலும் முன்சென்ற நல்லோர்களான நபித் தோழர்கள், கல்லெறிய இயலாதவர்களுக்காக பிறரைப் பகராமாக நியமித்துள்ளார்கள் என்றும் அதைத் தவிர உள்ள வழிபாடுகளில் பிறரைப் பகரமாக நியமிக்கவில்லை என்றும் செய்திகள் வந்துள்ளன.

வணக்க, வழிபாடுகள் அனைத்தும் (அல்லாஹ் மற்றும் அவனது தூதர் -ஸல்- அவர்களால்) முடிவு செய்யப் பட்டவைகளாகும். அதில் ஆதாரமின்றி எவரும் எந்த ஒன்றையும் ஏற்படுத்திட முடியாது.

பிறருக்காகக் கல்லெறிபவர் -ஒரு தடவை சென்று- மூன்று ஜம்ராக்களில் ஒவ்வொன்றிலும் முதலில் தனக்காகவும் பிறகு பிறருக்குப் பகரமாகவும் எறிய அனுமதியுள்ளது. மூன்று ஜம்ராக்களிலும் முதலில் தனக்காக எறிந்துவிட்டு, பிறகு மற்றொரு முறை திரும்பிச் சென்று பிறருக்காக எறிய வேண்டும் என்று கடமையில்லை. இதுவே அறிஞர்களின் இரு கூற்றுக்களில் சரியான கூற்றாகும். ஏனெனில் -இருமுறை செல்லவேண்டும் என்ற- கூற்றிற்கு எந்த ஆதாரமும் கிடையாது. மேலும் அவ்வாறு செய்வதில் கஷ்டமும் சிரமமும் ஏற்படும்.

وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّيْنِ) مِنْ حَرَجٍ)

. . இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு யாதொரு சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. . என அல்லாஹுᵃ தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 22:78)

( يَسِّرُوْا وَلاَ تُعَسِّرُوْا )

எளிதாக்குங்கள்! கஷ்டப்படுத்தாதீர்கள்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அனஸ்-ரலி, நூல்: புகாரீ)

மேலும் நபித்தோழர்கள் தங்களின் சிறுவர்களுக்கும் பலவீனர்களுக்கும் பகரமாகக் கல்லெறியும் போது இவ்வாறு (இருமுறை) சென்றதாக எந்தச் செய்தியும் வரவில்லை. அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் நிச்சயமாக அச்செய்தி பதிவு செய்யப்பட்டிருக்கும். ஏனெனில் இச்செய்திகளை பதிவு செய்வதற்காக பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

-அல்லாஹ்வே மிகஅறிந்தவன்-

## 11. தமத்துஃ மற்றும் கிரான் ஹஜ் செய்பவர் மீது பலிப்பிராணி கடமை

மக்காவாசி அல்லாதவர் தமத்துஃ அல்லது கிரான் முறையில் ஹஜ் செய்தால் ஒரு ஆட்டையோ, அல்லது ஏழு நபர்கள் இணைந்து ஒரு ஒட்டகத்தையோ, ஒரு மாட்டையோ அறுப்பது கடமையாகும். அது தூய்மையான முறையில்

ஈட்டப்பட்ட, ஹலாலான பொருளாதாரத்தில் இருப்பது கடமையாகும். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹுா தஆலா தூய்மையானவன். தூய்மையானதைத் தவிர ஏற்றுக் கொள்ளமாட்டான்.

பலிப்பிராணியையோ அல்லது பிற பொருளையோ ஆட்சியாளரிடமோ, பிற மக்களிடமோ யாசிப்பதை அனைத்து முஸ்லிம்களும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களுக்குப் பிராணியை பலியிடும் அளவிற்கு பொருளாதாரத்தைக் கொடுத்திருந்தால் அதனை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். பிறரிடம் கையேந்துவதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் யாசிப்போரின் இழிவு மற்றும் கேவலம் பற்றியும் யாசிக்காதவர்களைப் புகழ்ந்தும் அதிகமான ஹதீஸ்கள் வந்துள்ளன.

தமத்துஃ மற்றும் கிரான் ஹஜ் செய்பவர் -பலிப் பிராணி- ஹதீ கொடுக்க சக்திபெறவில்லையெனில் ஹஜ்ஜுடைய காலங்களில் மூன்று நாட்களும் வீடு திரும்பியபின் ஏழு நாட்களும் நோன்பு நோற்பது அவசியமாகும். ஹஜ்ஜுடைய காலங்களில் நோற்கவேண்டிய மூன்று நோன்புகளை துல்ஹஜ் பிறை 10-ம் நாளுக்கு முன்போ, அல்லது தஷ்ரீக்குடைய மூன்று நாட்களிலோ (ஆகிய இவ்விரண்டில்) அவர் விரும்பிய விதத்தில் நோற்றுக் கொள்ளலாம். فَمَنْ تَمَتَّعَ بِالْعُمْرَةِ إِلَى الْحَجِّ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ فَمَنْ لَمْ يَجِدْ فَصِيَامُ ثَلَاثَةِ أَيَّامٍ فِي الْحَجِّ وَسَبْعَةٍ إِذَا رَجَعْتُمْ تِلْكَ عَشَرَةٌ كَامِلَةٌ ذَلِكَ لِمَنْ لَمْ يَكُنْ أَهْلُهُ حَاضِرِي الْمَسْجِدِ الْحَرَامِ . . உம்ராவை முடித்துக் கொண்டு ஹஜ்ஜின்பால் செல்பவர் மீது ஹதீயிலிருந்து எவ்வளவு முடியுமோ அது அவர்மீது -கடமை- ஆகும். அதனைப் பெற்றுக் கொள்ளாதவர் ஹஜ்ஜில் மூன்று நாட்களும் நீங்கள் (இருப்பிடம்) திரும்பியபின் ஏழு நாட்களும் நோன்பு நோற்கவேண்டும். அவை பூரணமான பத்து (நாட்கள்) ஆகும். இது எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமில் (மக்காவில் குடி) இருக்கவில்லையோ அவருக்குரியதாகும். . . என அல்லாஹுா தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 2:196)

ஹதீ கொடுக்க சக்தி பெறாதவர்களைத் தவிர பிறருக்கு தஷ்ரீக்குடைய

நாட்களில் நோன்பு நோற்க அனுமதி வழங்கப் படவில்லை என ஆயிஷா (ரலி) அவர்களும் இப்னு உமர் (ரலி) அவர்களும் கூறியுள்ள செய்தி புகாரீயில் இடம் பெற்றுள்ளது. இது நபி (ஸல்) அவர்களுடன் தொடர்புடைய சட்டமாகவே கருதப்படும்.

அரஃபா தினத்தில் நோன்பின்றி இருப்பதற்காக இம்மூன்று நோன்புகளையும் அரஃபா தினத்திற்கு முன்பே நோற்றுவிடுவது சிறந்தது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அரஃபாவில் நோன்பின்றிதான் தங்கினார்கள். மேலும் அரஃபாவில் இருப்பவர்களை (அதாவது: ஹஜ் செய்பவர்களை) அரஃபா தினத்தன்று நோன்பு நோற்பதை விட்டும் தடுத்தார்கள். அன்றய தினம் நோன்பு நோற்காமல் இருப்பது உற்சாகமாக திக்ர், துஆக்களில் ஈடுபடவாய்ப்பாக அமையும்.

மேற்கூறப்பட்ட மூன்று நோன்புகளையும் தொடர்ந்தோ, விட்டு விட்டோ நோற்பதற்கு அனுமதியுள்ளது. அதுபோல் (ஊர் திரும்பியபின் நோற்கவேண்டிய) ஏழு நோன்புகளையும் தொடர்ந்து நோற்பது கடமையல்ல. மாறாக அதனையும் தொடர்ந்தோ அல்லது விட்டுவிட்டோ நோற்பதற்கு அனுமதி உள்ளது. அல்லாஹ்வோ, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ தொடர்ந்து நோற்பதை நிபந்தனையாகக் கூறவில்லை.

(وَسَبْعَةٍ إِذَا رَجَعْتُمْ)
நீங்கள் (இருப்பிடம்) திரும்பிய பின் ஏழு நாட்களும் . . . என்ற வசனத்திற்கிணங்க ஏழு நோன்புகளையும் -முன்னரே நோற்றுவிடாமல் அதனை- வீடு திரும்பும்வரை பிற்படுத்துவதே சிறந்ததாகும்.

ஹதீ கொடுக்க சக்தி பெறாதவர் தனக்காக ஹதீ கொடுக்குமாறு ஆட்சியாளரிடமோ, பிறரிடமோ யாசிப்பதைவிட நோன்பு நோற்பதே மிகச் சிறந்ததாகும். யாசகம் கேட்காமலும் அதனை மனதால் கூட விரும்பாமலும் இருக்கும் நிலையில் யாரேனும் ஹதீயையோ அல்லது பிற பொருளையோ அன்பளிப்பாக கொடுத்தால் அதனைப் பெற்றுக் கொள்வதில் தவறில்லை.

அவர் பிறருக்காக ஹஜ் செய்பவராக இருந்தாலும் சரியே! ஹஜ் செய்ய நியமித்தவர் தனது பொருளில்தான் ஹதீ கொடுக்கவேண்டும் என நிபந்தனையிடாவிட்டால் அவரும் -அன்பளிப்பைப் பெற்றுக் கொள்வதில்- தவறில்லை.

சிலர் அரசாங்கத்திடமோ அல்லது பிறரிடமோ பொய்யாகப் பிறரின் பெயரைக் கூறி ஹதீயைப் பெற யாசிப்பது ஹராமானது என்பதில் சந்தேகமில்லை. நிச்சயமாக இது பொய்யுரைத்து பொருள் திரட்டுவதாகும்.

-அல்லாஹ் நம்மையும் முஸ்லிம்கள் அனைவரையும் இச்செயலை விட்டுக் காப்பாற்றுவானாக!-

## 12. நன்மையை ஏவுதல்

நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதும் ஐவேளைத் தொழுகைகளை ஜமாஅத்துடன் பேணித் தொழுவதும் ஹஜ் செய்பவர் மீதும் பிறர் மீதுமுள்ள முக்கியக் கடமைகளில் உள்ளவைகளாகும். இதனை அல்லாஹ் தனது வேதத்தின் மூலமாகவும் தனது தூதரின் வாயிலாகவும் கட்டளை யிட்டுள்ளான்.

மக்காவிலும் பிற பகுதிகளிலும் வசிப்பவர்களில் பலர், பள்ளிவாயில்களுக்கு வராமல், வீடுகளிலேயே தொழுது கொள்வது மார்க்கத்திற்கு முரணான, தவறான செயலாகும். இச்செயலை விட்டும் மக்களைத் தடுப்பதும் பள்ளியில்

ஜமாஅத்துடன் தொழ ஏவுவதும் கடமையாகும்.

பார்வையற்ற இப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்களின் வீடு பள்ளியிலிருந்து தூரமாக இருந்ததால், வீட்டிலேயே தொழுது கொள்ள நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அதற்கு, நீர் தொழுகைக்கான -பாங்கு- அழைப்பை செவிமடுக்கின்றீரா? என்று கேட்க, அதற்கு அவர்கள், ஆம்! என்றார்கள். அவ்வாறானால் அதற்கு நீர் பதிலளித்து -பள்ளிக்கு- வரவேண்டும் என்றார்கள். -மற்றொரு அறிவிப்பில்- உமக்கு அனுமதி இருப்பதாக நான் கருதவில்லை என்று கூறியதாக வந்துள்ளது.
(அறிவிப்பவர்: அபூஹுரைரா-ரலி, நூற்கள்: முஸ்லிம், அபூதாவூத்)

நிச்சயமாக நான், தொழுகையை ஆரம்பிக்கக் கட்டளையிட்டு, மக்களுக்குத் தொழ வைக்க ஒருவரை நியமித்துவிட்டு, (பள்ளிக்கு) தொழவராத ஆண்களிடம் சென்று அவர்களை அவர்களின் வீடுகளுடனே தீயிட்டுக் கொளுத்த நினைக்கிறேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : முஸ்லிம்)

(مَنْ سَمِعَ النِّدَاءَ فَلَمْ يَأْتِهِ فَلَا صَلَاةَ لَهُ إِلَّا مِنْ عُذْرٍ)
பாங்கைக் செவிமடுத்தும் -பள்ளிக்கு- தொழவராதவர்களுக்கு தொழுகையில்லை (ஏற்றுக் கொள்ளப்படாது) மார்க்கம் அனுமதித்துள்ள காரணம் உடையவரைத் தவிர என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூல் : இப்னுமாஜா)

இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

مَنْ سَرَّهُ أَنْ يَلْقَى اللَّهَ غَدًا مُسْلِمًا فَلْيُحَافِظْ عَلَى هَؤُلَاءِ الصَّلَوَاتِ حَيْثُ يُنَادَى بِهِنَّ فَإِنَّ اللَّهَ شَرَعَ لِنَبِيِّكُمْ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ سُنَنَ الْهُدَى وَإِنَّهُنَّ مِنْ سُنَنِ الْهُدَى وَلَوْ أَنَّكُمْ صَلَّيْتُمْ فِي بُيُوتِكُمْ كَمَا يُصَلِّي هَذَا الْمُتَخَلِّفُ فِي بَيْتِهِ لَتَرَكْتُمْ سُنَّةَ نَبِيِّكُمْ وَلَوْ تَرَكْتُمْ سُنَّةَ نَبِيِّكُمْ لَضَلَلْتُمْ وَمَا مِنْ رَجُلٍ يَتَطَهَّرُ فَيُحْسِنُ الطُّهُورَ ثُمَّ يَعْمِدُ إِلَى مَسْجِدٍ مِنْ هَذِهِ الْمَسَاجِدِ إِلَّا كَتَبَ اللَّهُ لَهُ بِكُلِّ خَطْوَةٍ يَخْطُوهَا حَسَنَةً وَيَرْفَعُهُ بِهَا دَرَجَةً وَيَحُطُّ عَنْهُ بِهَا سَيِّئَةً وَلَقَدْ رَأَيْتُنَا وَمَا يَتَخَلَّفُ عَنْهَا إِلَّا

الصَّفِّ فِي يُقَامَ حَتَّى الرَّجُلَيْنِ بَيْنَ يُهَادَى بِهِ يُؤْتَى الرَّجُلُ كَانَ وَلَقَدْ اقِالنِّفَ مَعْلُومُ مُنَافِقٌ
நாளை அல்லாஹ்வை, முஸ்லிமாக சந்திக்க விரும்புபவர் இத்தொழுகைகளை அதற்காக அழைக்கப்படும் இடத்தில் (பள்ளியில்) பேணித் தொழுது கொள்ளட்டும்! நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய நபிக்கு நேரான வழிகளைக் காட்டியுள்ளான். நிச்சயமாக இத்தொழுகைகளும் அந்த நேரான வழிகளில் உள்ளவைகளாகும். (ஜமாஅத் தொழுகையை விட்டும்) பின்வாங்கிய இன்ன மனிதன் தன் வீட்டில் தொழுது கொள்வது போன்று நீங்கள் உங்கள் வீட்டில் தொழுவீர்களானால் நிச்சயமாக நீங்கள் உங்கள் நபியின் வழியை விட்டுவிட்டீர்கள். நீங்கள் உங்கள் நபியின் வழியை விட்டுவிட்டால் நிச்சயமாக நீங்கள் வழிகெட்டு விட்டீர்கள். ஒருவர் அழகிய முறையில் உளுச் செய்து தூய்மையாகி, இப்பள்ளிகளில் ஏதேனும் ஒரு பள்ளிக்குச் செல்வாரானால் அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான். ஒரு அந்தஸ்த்தை உயர்த்துகிறான். ஒரு பாவத்தை அழிக்கிறான். நம்மைக் கவனித்ததில், நயவஞ்சகத் தன்மை மிகவெளிப் படையாகத் தெரியும் முனாஃபிக்குகளைத் தவிர வேறு எவரும் (ஜமாஅத்தை விட்டும்) பின்வாங்குவதை நான் பார்த்ததில்லை. நிச்சயமாக -பலவீனமான ஒருவர்- இருவரின் துணையுடன் கைத்தாங்களாக அழைத்து வரப்பட்டு -தொழுகைக்காக- வரிசையில் நிற்கவைக்கப்படுவார். (நூல் : முஸ்லிம்)

ஹஜ் செய்பவரும் பிறரும் அல்லாஹ் ஹராமாக்கியவைகளை விட்டும் விலகிக் கொள்வதும் அவைகளைச் செய்துவிடாமல் மிக எச்சரிக்கையாக இருப்பதும் கடமையாகும். அவைகளில் சில :

விபச்சாரம், ஓரினச்சேர்க்கை, திருட்டு, வட்டியை உண்ணுதல், அனாதைகளின் பொருளை அபகரித்தல், கொடுக்கல் வாங்களில் ஏமாற்றுதல், அமாநித மோசடி, போதைப் பொருள் உட்கொள்ளுதல், புகை பிடித்தல், கரண்டைக்குக் கீழ் ஆடை அணிதல், பெருமை, பொறாமை, முகஸ்துதி, புறம், கோள், முஸ்லிம்களை கேலி செய்தல், இசைத் தட்டு, வீணை, ஆர்மினியம் போன்ற வீணான பொழுது போக்குச் சாதனங் களான

இசைக் கருவிகளைப் பயன்படுத்துதல், பாட்டுக் கேட்டல், கொட்டு போன்றவைகளைக் கொண்டு தாளமிடுதல், தாயம் மற்றும் சதுரங்கம் விளையாடுதல், சூதாடுதல், மனிதர்கள் மற்றும் உயிருள்ளவற்றின் உருவம் வரைதல் -புகைப்படமெடுத்தல்-, அதற்கு உடன்படுதல்.

இவை அனைத்தும் அல்லாஹ் தன் அடியார்கள் மீது அனைத்துக் காலங்களிலும் அனைத்து இடங்களிலும் ஹராமாக்கியுள்ள, மார்க்கத்திற்கு முரணான செயல்களாகும்.

எனவே ஹஜ் செய்பவர்களும் அல்லாஹ்வுடைய வீடுள்ள புனித மக்காவில் வசிப்பவர்களும் பிறரைவிட இவ்விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இப்புனித பூமியில் அல்லாஹ்வுக்கு மாறுசெய்வது பெருங்குற்றமும் கடும் தண்டனைக்குரிய செயலுமாகும்.

وَمَنْ يُرِدْ فِيْهِ بِإِلْحَادٍ بِظُلْمٍ نُذِقْهُ) مِنْ عَذَابٍ أَلِيْمٍ(

. . . . மேலும் அதில் (மஸ்ஜிதுல் ஹராமில் பாவம் செய்தலெனும்) அநியாயத்தைக் கொண்டு யார் (அசத்தியத்தின் பால்) சாய்வதை நாடுகிறாரோ அவருக்கு நோவினை தரும் வேதனையிலிருந்து நாம் சுவைக்கச் செய்வோம் என அல்லாஹுஂ தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 22:25)

ஹரமில் அநீதம் செய்ய நாடுபவனை அல்லாஹ் இவ்வாறு எச்சரித்துள்ளான் என்றால், அதனைச் செய்பவனுக்கு எப்படிப் பட்ட தண்டனை கிடைக்கும்!? நிச்சயமாக அது மிகப் பெரியதாகவும் மிகக் கடுமையானதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இதனை விட்டும் மற்ற அனைத்துப் பாவங்களை விட்டும் விலகிக் கொள்வது கடமையாகும்.

ஹஜ் செய்பவர் -நாம் மேற்குறிப்பிட்டுள்ள- பாவங்களை விட்டும் மேலும் அல்லாஹ் ஹராமாக்கியுள்ள மற்ற -அனைத்துச்- செயல்களை விட்டும் விலகிக் கொள்ளாதவரை அவருக்கு ஹஜ்ஜுடைய நன்மையோ,

பாவமன்னிப்போ கிடைக்காது.

( مَنْ حَجَّ لِلَّهِ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ)

இச்சையான செயலில் ஈடுபடாமல், பாவம் செய்யாமல் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்பவர், அவருடைய தாய் அன்று அவரைப் பெற்றெடுத்ததைப் போன்று (பாவமற்று) திரும்புகிறார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : புகாரீ)

மார்க்கம் தடுத்துள்ள இச்செயல்களை எல்லாம் விட மிகக் கொடிய, மிகப் பெரும்பாவங்கள் பல உள்ளன. அவைகளில்:

மரணித்துவிட்டவர்களிடம் பிரார்த்திப்பது, அவர்களிடம் அடைக்கலம் தேடுவது, அவர்களுக்காக நேர்ச்சை செய்வது, அவர்களுக்காகப் பலியிடுவது, அவர்களை அழைப்பவர் களுக்காக அவர்கள் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வார்கள் என்றும் அவர்களின் நோயை குணப்படுத்துவார்கள் என்றும் காணாமல் போனவற்றை மீட்டுத்தருவார்கள் என்றும் மேலும் இவை போன்றவைகளையும் நம்புவது. இது அல்லாஹ் ஹராமாக்கியுள்ள மிகப் பெரிய ஷிர்க் (அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்) ஆகும். இது ஜாஹிலிய்யா எனும் அறியாமைக் காலத்தில் வாழ்ந்த -சிலைவணங்கிகளான- இணைவைப்பாளர்களின் வழிமுறையாகும். இவ்வழிமுறை களை மறுப்பதற்காகவும் அதனை விட்டும் -மக்களைத்- தடுப்பதற்காகவுமே அல்லாஹ் பல தூதர்களை அனுப்பினான், பல வேதங்களை இறக்கினான்.

எனவே ஹஜ் செய்பவர்களும், மற்றவர்களும் இச்செயல்களை விட்டுத் தவிர்ந்திருப்பதும் மேற்கூறப்பட்டவைகளில் எதையேனும் இதற்கு முன் செய்திருந்தால் அதற்காக பாவ மன்னிப்புத் தேடிக் கொள்வதும் கடமையாகும். மேலும் பாவமன்னிப்புத் தேடிய பிறகு புதிதாக ஹஜ்ஜைத் துவங்குவதும் கடமையாகும். ஏனெனில் நிச்சயமாக பெரிய ஷிர்க் அனைத்து அமல்களையும் அழித்துவிடும்.

وَلَوْ أَشْرَكُوا لَحَبِطَ عَنْهُمْ مَا كَانُوا) يَعْمَلُونَ)

மேலும் அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணை வைத்தால் அவர்கள்

செய்துகொண்டிருந்த (நன்மையான)வைகள் (யாவும்) அவர்களை விட்டும் அழிந்துவிடும் என அல்லாஹ் கூறுகின்றான்.
(அல்குர்ஆன் 6:88)

அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்தல். உதாரணமாக, நபி (ஸல்) அவர்கள் மீதோ, கஃபா மற்றும் அமாநிதம் போன்றவைகளின் மீதோ சத்தியம் செய்தல் - பிறர் பார்க்க வேண்டும், பிறர் தன்னைப் புகழவேண்டும் என்பதற்காக நல்லறங்கள் புரிதல் - அல்லாஹ்வும் நாடினான், நீங்களும் நாடினீர்கள்! - அல்லாஹ்வும் நீங்களும் இல்லை என்றால்! - இது அல்லாஹ்வின் மூலமும் உங்கள் மூலமும் கிடைத்தது! - என்பன போன்ற வார்த்தைகளைப் பயன் படுத்துதல். இவை அனைத்தும் சிறிய இணைவைத்தலின் வகையைச் சார்ந்தவைகளாகும்.
மார்க்கத்திற்கு முரணான, ஷிர்க்கான இவ்வனைத்தையும் விட்டு தானும் தவிர்ந்து கொண்டு, பிறருக்கும் உபதேசம் செய்வது கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் :

( مَنْ حَلَفَ بِغَيْرِ اللَّهِ فَقَدْ كَفَرَ أَوْ أَشْرَكَ )
அல்லாஹ் அல்லாதவர் மீது சத்தியம் செய்பவர் நிச்சயமாக நிராகரித்து விட்டார் -அல்லது- இணைவைத்துவிட்டார்.
(அறிவிப்பவர் : இப்னுஉமர் -ரலி, திர்மிதி, அபூதாவூத், அஹ்மத்)

( مَنْ كَانَ حَالِفًا فَلْيَحْلِفْ بِاللَّهِ أَوْ لِيَصْمُتْ )
சத்தியம் செய்பவர் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யட்டும். அல்லது மௌனமாக இருக்கட்டும்.
(அறிவிப்பவர் : இப்னு உமர் -ரலி, நூல் : புகாரீ)
( مَنْ حَلَفَ بِالْأَمَانَةِ فَلَيْسَ مِنَّا )
அமாநிதத்தைக் கொண்டு சத்தியம் செய்பவன் நம்மைச் சார்ந்தவன் அல்ல.
(அறிவிப்பவர்: புரைதா-ரலி, நூல்: அபூதாவூத்)

( إِنَّ أَخْوَفَ مَا أَخَافُ عَلَيْكُمُ الشِّرْكُ الْأَصْغَرُ قَالُوا يَا رَسُولَ اللَّهِ وَمَا الشِّرْكُ الْأَصْغَرُ قَالَ

الرِّيَاءُ )

நிச்சயமாக உங்கள் விஷயத்தில் நான் மிக அதிகமாகப் பயப்படுவது சிறிய இணைவைத்தலைத்தான்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சிறிய இணைவைத்தல் என்றால் என்ன? என -நபித்தோழர்கள்- கேட்டார்கள். அதற்கு முகஸ்துதி (பிறர் பார்த்துப் போற்றுவதற்காக அமல் செய்தல்) என பதிலளித்தார்கள். (அறிவிப்பவர்: மஹ்மூத்-ரலி, நூல்: அஹமத்)

( لَا تَقُولُوا مَا شَاءَ اللَّهُ وَشَاءَ فُلَانٌ وَلَكِنْ قُولُوا مَا شَاءَ اللَّهُ ثُمَّ شَاءَ فُلَانٌ )

அல்லாஹ்வும் இவரும் நாடியது நடந்து விட்டது என்று கூறாதீர்கள்! மாறாக, அல்லாஹ் நாடியது நடந்தது. பிறகு இவர் நாடினார் என்று கூறுங்கள். (அறிவிப்பவர் : ஹுதைஃபா -ரலி, நூல் : அபூதாவூத்)

( أَنَّ رَجُلًا قَالَ يا رَسُولَ اللَّهِ مَا شَاءَ اللَّهُ وَشِئْتَ فَقَالَ جَعَلْتَنِي لِلَّهِ عَدْلًا بَلْ مَا شَاءَ اللَّهُ وَحْدَهُ )

அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வும் நீங்களும் நாடியது நடந்து விட்டது என ஒரு மனிதர் கூறினார். அதற்கு அவர்கள், என்னை நீர் அல்லாஹ்வுக்கு நிகராக்கிவிட்டீர்? மாறாக, அல்லாஹ் மாத்திரம் நாடியதே நடந்தது (என்று கூறுவீராக!) என்றார்கள்.
(அறிவிப்பவர்: இப்னுஅப்பாஸ் -ரலி, நூற்கள் : அஹமத், நஸாயீ)

இந்த ஹதீஸ்கள் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு ஏகத் துவத்தை பாதுகாத்துள்ளார்கள் என்பதையும் பெரிய, சிறிய இணைவைப்புகளை விட்டும் எவ்வாறு எச்சரித்துள்ளார்கள் என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன. மேலும் மக்களின் ஈமானைப் பாதுகாப்பதிலும் அல்லாஹ்வுடைய கோபத்திற்குக் காரணமானவைகளை விட்டும் அல்லாஹ்வின் தண்டனையை விட்டும் தனது சமுதாயம் ஈடேற்றம் பெற வேண்டுமென அவர்களுக்கிருந்த ஆவலையும் உணர்த்து கின்றன. அல்லாஹ் அவர்களுக்கு அதற்காக மிகச் சிறந்த நற்கூலி வழங்குவானாக! நிச்சயமாக அவர்கள் -மார்க்கத்தை- மிகத் தெளிவாக எடுத்துரைத்து விட்;டார்கள். -

மார்க்கத்திற்கு முரணானவைகளை- கடுமையாக எச்சரித்துவிட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க, அவனது அடியார்களுக்கு அழகிய முறையில் உபதேசித்து விட்டார்கள். அல்லாஹ்வின் அமைதியும் அருளும் அவர்கள் மீது மறுமை நாள்வரை தொடர்ந்து பொழியட்டுமாக!

ஹஜ் செய்ய வந்திருப்பவர்களிலும் மக்கா, மதீனாவில் வசிப் பவர்களிலும் உள்ள மார்க்க அறிஞர்கள் மக்களுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளைப் போதிப்பது கடமையாகும். அல்லாஹ் ஹராமாக்கியுள்ள அனைத்து வகை இணைவைத்தல்களையும் ஏனைய பாவங்களையும் விட்டு அவர்களை எச்சரிக்க வேண்டும். அதற்குரிய ஆதாரங்களை எடுத்துரைத்து அவைகளை மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லவேண்டும். இம்முயற்சியால் -அறியாமை- இருள்களிலிருந்து மக்களை வெளியேற்றி -நேர்வழி எனும்- ஒளியின்பால் கொண்டு செல்லமுடியும். மேலும் -மார்க்கத்தை- மிகத்தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்குமாறு அல்லாஹ் (அறிஞர்களாகிய) இவர்கள் மீது கடமையாக்கி யுள்ளதை இம்முயற்சியின் மூலம் நிறைவேற்றியவர்களாக முடியும்.

وَإِذْ أَخَذَ اللّٰهُ مِيْثَاقَ الَّذِيْنَ أُوْتُوا الْكِتَابَ) لَتُبَيِّنُنَّهُ لِلنَّاسِ وَلاَ تَكْتُمُوْنَهُ)
வேதம் கொடுக்கப்பட்டவர்களிடம் (உங்களுக்கு கொடுக்கப் பட்ட) வேதத்தை மறைத்துவிடாது மக்களுக்குத் தெளிவாக நீங்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக!) . . என அல்லாஹு தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 3:187)

வேதவாசிகளில் உள்ள அநியாயக்காரர்கள் மறுமையை விட இவ்வுலக பயன்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சத்தியத்தை மறைப்பதில் கடைபிடித்த முறையை இந்தச் சமுதாய அறிஞர்கள் கடைபிடிக்கக் கூடாது என்று எச்சரிப்பதே இந்த வசனத்தின் நோக்கமாகும்.

إِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَا (أَنْزَلْنَا مِنَ الْبَيِّنَاتِ وَالْهُدَى مِنْ بَعْدِ مَا بَيَّنَّاهُ لِلنَّاسِ فِي الْكِتَابِ أُولَئِكَ يَلْعَنُهُمُ اللهُ وَيَلْعَنُهُمُ اللاَّعِنُوْنَ – إِلاَّ الَّذِيْنَ تَابُوْا وَأَصْلَحُوْا وَبَيَّنُوْا فَأُولَئِكَ أَتُوْبُ عَلَيْهِمْ) وَأَنَا التَّوَّابُ الرَّحِيْمُ

தெளிவான அத்தாட்சிகளிலிருந்தும் நேர்வழியிலிருந்தும் நாம் இறக்கிவைத்துள்ளதை - அதனை நாம் மனிதர்களுக்காக வேதத்தில் விளக்கிய பின்னர், நிச்சயமாக மறைக்கின்றார்களே அத்தகையோர் - அவர்களை அல்லாஹ் சபிக்கின்றான். (மனித இனம், ஜின், மலக்குகள் ஆகியோரில்) சபிப்பவர்களும் சபிக்கின்றனர். (தாங்கள் மறைத்தவற்றிற்காக மன்னிப்புக் கோரி) தவ்பாச் செய்து (தங்களைச்) சீர்திருத்திக் கொண்டு (அவற்றை) தெளிவாகவும் எடுத்துரைக்கின்றனரே அத்தகையோரைத் தவிர, அப்போது அவர்கள் - அவர்களை நான் மன்னித்துவிடுகிறேன். இன்னும் நான் தான் அதிகமாக தவ்பாவை ஏற்(று மன்னிப்)பவன், மிக்க கிருபையுடையவன் என அல்லாஹு தஆலா கூறுகின்றான். (அல்குர்ஆன் 2:159-160)

மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதும், அவர்கள் படைக்கப்பட்ட நோக்கத்தின் பக்கம் மக்களுக்கு வழிகாட்டு வதும், நிச்சயமாக மிகச் சிறந்த வணக்கமும் மிக முக்கியக் கடமையுமாகும் என்பதை அல்குர்ஆனின் பல வசனங்களும் நபிமொழிகளும் உணர்த்துகின்றன. நிச்சயமாக இது நபிமார்களின் வழியும் மறுமை நாள்வரை அவர்களைப் பின்பற்றுவோரின் வழியுமாகும். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَنْ أَحْسَنُ قَوْلاً مِمَّنْ دَعَا إِلَى اللهِ) وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِيْ مِنَ (الْمُسْلِمِيْنَ

எவர் அல்லாஹ்வின் பால் (மனிதர்களை) அழைத்து(த் தாமும்) நற்கருமங்களையும் செய்து, நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்படிந்த) முஸ்லிம்களில் உள்ளேன் என்றும் கூறு கின்றாரோ, அவரை விட சொல்லால் மிக்க அழகானவர் யார்?
(அல்குர்ஆன் 41:33)

قُلْ هَذِهِ سَبِيْلِيْ أَدْعُ(وْا إِلَى اللهِ عَلَى بَصِيْرَةٍ أَنَا وَمَنِ اتَّبَعَنِيْ وَسُبْحَانَ اللهِ وَمَا أَنَا مِنَ

(لْمُشْرِكِيْنَا

(நபியே!) நீர் கூறுவீராக! இதுவே எனது (நேரான) வழியாகும். நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றியவர்களும் இருக் கின்றோம். அல்லாஹ் மிக்க பரிசுத்தமானவன். நான் (அவனுக்கு) இணைவைப்போரில் உள்ளவனுமல்லன். (அல்குர்ஆன் 12:108)

( مَنْ دَلَّ عَلَى خَيْرٍ فَلَهُ مِثْلُ أَجْرِ فَاعِلِهِ )

யாரேனும் நல்லவற்றின் பக்கம் வழிகாட்டினால் அதனை செய்பவரைப் போன்று -வழிகாட்டியவருக்கும் நன்மையுண்டு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர் : அபூ மஸ்வூத் - ரலி, நூல் : முஸ்லிம்)

فَوَاللَّهِ لَأَنْ يَهْدِيَ اللَّهُ بِكَ رَجُلًا وَاحِدًا خَيْرٌ لَكَ مِنْ أَنْ يَكُونَ لَكَ حُمْرُ النَّعَمِ

அல்லாஹ்வின்மீது சத்தியமாக, அல்லாஹ் உன் மூலம் ஒருவருக்கு நேர்வழி காட்டுவது உமக்கு சிவந்த ஒட்டகம் இருப்பதை விட உமக்குச் சிறந்ததாகும் என நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி)க்கு கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஃது-ரலி, நூற்கள்: புகாரீ, முஸ்லிம்)

இதுபற்றி மேலும் பல இறைவசனங்களும் நபிமொழிகளும் உள்ளன.

அல்லாஹ்வின் பால் மக்களை அழைக்கும் பணியிலும் மக்களுக்கு வெற்றிக்கான வழிகாட்டுவதிலும் அழிவை விட்டும் அவர்களைத் தடுப்பதிலும் ஈமானுள்ள, மார்க்க அறிஞர்கள் பன்மடங்காக உழைத்தாகவேண்டும். இன்று மனோஇச்சைகள் மிகைத்துவிட்டன. அழிவின் ஆரம்பமும் வழிகேட்டின் அடையாளங்களும் பரவிவிட்டன. நேர்வழியின்பால் அழைப் பவர்கள் மிகவும் குறைந்துவிட்டனர். வழிகேட்டின் பாலும் வரம்பு மீறுதலின் பாலும் அழைப்பவர்கள் அதிகரித்து விட்டனர். எனவே குறிப்பாக இக்காலத்தில் அழைப்பாளர்கள் மிகவும் கடுமையாக உழைத்தாகவேண்டும். அல்லாஹ்வே உதவியாளன். மகத்தான,

உயர்ந்தவனான அல்லாஹ்வைக் கொண்டே தவிர (தீமையை விட்டும்) விலகவோ, (நன்மையைச் செய்ய) சக்தி பெறவோ முடியாது.

## 13. அதிகமாக இறைவழிபாட்டில் ஈடுபடுதல்

ஹஜ் செய்ய வருகை தந்திருப்பவர்கள் மக்காவில் இருக்கும் காலம் முழுவதும் அல்லாஹ்வை திக்ர் செய்தல், வழிபடுதல், நல்லறங்கள் புரிதல் போன்றவற்றைக் கடைபிடிப்பது மிகவும் அவசியமாகும். மஸ்ஜிதுல் ஹராமில் தொழுதல், தவாஃப் செய்தல், நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துக் கூறுதல் போன்றவற்றை அதிகமாகச் செய்யவேண்டும். ஏனெனில் ஹரமில் செய்யப்படும் நல்லறங்களுக்கு பன்மடங்காக கூலிகள் கிடைக்கின்றன. -கூலிகள் அதிகமாகக் கிடைப்பது போன்று- அங்கே தீமைகள் செய்தால் அதற்கு பெருந் தண்டனைகளும் உள்ளன

ஹஜ் செய்ய வருகை தந்தவர் (அதனை நிறைவேற்றி) மக்காவை விட்டும் புறப்படும் போது தவாஃபுல் விதா -விடைபெறும் தவாஃப்- செய்வது கடமையாகும். ஏனெனில் -பயணத்தின்- இறுதி இடம் ஹரமாக இருக்கவேண்டும். மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் வந்துவிட்ட பெண்களுக்கு தவாஃபுல் விதா செய்வது கடமையில்லை.

( الْحَائِضِ الْمَرْأَةِ عَنِ خُفِّفَ أَنَّهُ إِلَّا بِالْبَيْتِ عَهْدِهِمْ آخِرُ يَكُونَ أَنْ النَّاسُ أُمِرَ )
ஹஜ் செய்பவரின் விடைபெறும் இடம் ஹரமாக இருக்க வேண்டும் என மக்கள் கட்டளையிடப்பட்டிருந்தார்கள். எனினும் மாதவிடாய் வந்துவிட்ட பெண்களுக்கு அது குறைக் கப்பட்டு -சலுகை வழங்கப்பட்டு- விட்டது என இப்னுஅப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். (நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

கஃபாவை (தவாஃப் செய்து) விடை பெற்று, பள்ளியை விட்டும் வெளியேறும் போது (எப்போதும் வெளியேறுவது போன்று) முன்னோக்கி நடந்தவாறுதான் வெளியேறவேண்டும். கஃபாவைப் பார்த்துக் கொண்டே பின்னோக்கி நடப்பது கூடாது. நபி (ஸல்) அவர்களோ, அவர்களின்

தோழர்களோ இவ்வாறு செய்ததாக எந்த ஆதாரமும் கிடையாது. எனவே இது மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பித்அத் ஆகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

( مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ )

யாரேனும் நாம் கட்டளையிடாத ஏதேனும் ஒரு செயலைச் செய்தால் அது - அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப் படாமல்- மறுக்கப்பட்டுவிடும்.

(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூல் : முஸ்லிம்)

( وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ . . )

(மார்க்கத்தில்) புதிதாக ஏற்படுத்தப்பட்டவைகளை விட்டும் உங்களை நான் எச்சரிக்கை செய்கிறேன். நிச்சயமாக மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்படும் அனைத்தும் பித்அத் - நூதனச்- செயலாகும். அனைத்து பித்அத்களும் வழிகேடாகும்.

(அறிவிப்பவர் : இர்பாழ் பின் ஸாரியா -ரலி, நூல் : அபூதாவூத்)

அல்லாஹ் நம் அனைவரையும் மார்க்கத்தில் உறுதியாக இருக்கச் செய்வானாக! மார்க்கத்திற்கு மாறு செய்வதை விட்டும் பாதுகாப்பானாக! நிச்சயமாக அவனே கொடையாளன், கருணையுடையோன்.

## 14. ஜியாரத்தின் சட்டங்களும் ஒழுக்கங்களும்

மஸ்ஜிதுன் நபவிக்குச் செல்வது சுன்னத்தாகும். அங்கு ஹஜ்ஜுக்கு முன்போ அல்லது பின்போ சென்று வரலாம்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் :

(صَلَاةٌ فِي مَسْجِدِي هَذَا خَيْرٌ مِنْ أَلْفِ صَلَاةٍ فِيمَا سِوَاهُ إِلَّا الْمَسْجِدَ الْحَرَامَ)

என்னுடைய இந்தப் பள்ளியில் ஒரு தொழுகையைத் தொழுவது மஸ்ஜிதுல் ஹராமைத் தவிர உள்ள பிற பள்ளிகளில் ஆயிரம் தொழுகைகள் தொழுவதைவிட நன்மையுடையதாகும்.

(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( الْحَرَامَ الْمَسْجِدَ إِلَّا سِوَاهُ فِيمَا صَلَاةٍ أَلْفِ مِنْ ضَلُ أَفْ هَذَا مَسْجِدِي فِي صَلَاةٌ )
என்னுடைய இந்தப் பள்ளியில் ஒரு தொழுகையைத் தொழுவது மஸ்ஜிதுல் ஹராமைத் தவிர உள்ள பிற பள்ளிகளில் ஆயிரம் தொழுகைகள் தொழுவதை விட சிறப்பு மிக்கதாகும். (அறிவிப்பவர்: இப்னுஉமர்-ரலி, நூல்: முஸ்லிம்)

( الْحَرَامَ الْمَسْجِدَ إِلَّا الْمَسَاجِدِ مِنَ سِوَاهُ فِيمَا صَلَاةٍ أَلْفِ مِنْ أَفْضَلُ هَذَا مَسْجِدِي فِي صَلَاةٌ
هَذَا فِي صَلَاةٍ مِائَةِ مِنْ أَفْضَلُ الْحَرَامِ الْمَسْجِدِ فِي وَصَلَاةٌ)
என்னுடைய இந்தப் பள்ளியில் ஒரு தொழுகையைத் தொழுவது மஸ்ஜிதுல் ஹராமைத் தவிர உள்ள பிற பள்ளிகளில் ஆயிரம் தொழுகைகள் தொழுவதை விட சிறப்பு மிக்கதாகும். மஸ்ஜிதுல் ஹராமில் ஒரு தொழுகையைத் தொழுவது என்னுடைய இந்தப் பள்ளியில் நூறு தொழுகையைத் தொழுவதை விடச் சிறப்பு மிக்கதாகும்.
(அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் சுபைர் -ரலி, நூற்கள் : அஹமத், இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான்)

( فِي وَصَلَاةٌ الْحَرَامَ الْمَسْجِدَ إِلَّا سِوَاهُ فِيمَا صَلَاةٍ أَلْفِ مِنْ أَفْضَلُ هذَا مَسْجِدِي فِي صَلَاةٌ
سِوَاهُ فِيمَا صَلَاةٍ أَلْفِ مِائَةِ مِنْ أَفْضَلُ الْحَرَامِ الْمَسْجِدِ )
என்னுடைய இந்தப் பள்ளியில் ஒரு தொழுகையைத் தொழுவது மஸ்ஜிதுல் ஹராமைத் தவிர உள்ள பிற பள்ளி களில் ஆயிரம் தொழுகைகள் தொழுவதை விடச் சிறப்பு மிக்கதாகும். மஸ்ஜிதுல் ஹராமில் ஒரு தொழுகையைத் தொழுவது அது தவிர உள்ள பள்ளிகளில் ஒரு இலட்சம் தொழுகைகள் தொழுவதை விடச் சிறப்பு மிக்கதாகும்.
(அறிவிப்பவர் : ஜாபிர் -ரலி, நூற்கள் : அஹமத், இப்னுமாஜா)
இது பற்றி மேலும் பல நபிமொழிகள் வந்துள்ளன.

ஜியாரத் செய்பவர் பள்ளியை வந்தடைந்ததும் வலது காலை முன்வைத்து பிற பள்ளிகளில் நுழையும் போது கூறும் பின்வரும் துஆவைக் கூறி நுழைவது சுன்னத்தாகும்.

وَسُلْطَانِهِ الْكَرِيْمِ وَبِوَجْهِهِ الْعَظِيْمِ بِاللهِ أَعُوْذُ اللهِ، رَسُوْلِ عَلَى وَالسَّلاَمُ الصَّلاَةُوَ اللهِ، بِسْمِ
رَحْمَتِكَ أَبْوَابَ لِيْ افْتَحْ أَللّهُمَّ الرَّجِيْمِ، الشَّيْطَانِ مِنَ الْقَدِيْمِ

மஸ்ஜிதுன் நபவியில் நுழையும் போது மட்டும் கூறவேண்டிய பிரத்தியேக திக்ர் -துஆ- எதுவும் கிடையாது.

பிறகு அவர் இரண்டு ரகஅத்கள் தொழுவது சுன்னத்தாகும். அதில் இம்மை, மறுமையின் நல்ல தேவைகளில் தான் விரும்புவதை அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார். அந்த இரண்டு ரகஅத்களையும் புனித ரவ்லாவில் தொழுவது சிறப்பு மிக்கதாகும்.
( الْجَنَّةِ رِيَاضِ مِنْ رَوْضَةٌ وَمِنْبَرِي بَيْتِي بَيْنَ امَ )
என்னுடைய வீட்டிற்கும் என்னுடைய மிம்பருக்கும் மத்தியில் உள்ளவை சொர்க்கத்துத் தோட்டங்களில் உள்ள ஒரு தோட்டமாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஜைது -ரலி, நூல் : புகாரீ)

தொழுத பிறகு அவர், நபி (ஸல்) அவர்களின் கப்ரையும் அவர்களின் தோழர்களான அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) அவர்களின் கப்ர்களையும் ஜியாரத் செய்வார். நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கு எதிரே ஒழுக்கத்துடன் நின்று, பணிவான சப்தத்துடன்

وَبَرَكَاتُهُ اللهِ وَرَحْمَةُ اللهِ لَرَسُوْ يَا عَلَيْكَ اَلسَّلاَمُ
(அஸ்ஸலாமு அலைக்க யா ரசூலல்லாஹ்! வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹ்!) என்று ஸலாம் கூறவேண்டும்.
( السَّلاَمَ عَلَيْهِ أَرُدَّ حَتَّى رُوحِي عَلَيَّ اللَّهُ رَدَّ إِلَّا عَلَيَّ يُسَلِّمُ أَحَدٍ مِنْ مَا )
என் மீது யாரேனும் ஸலாம் கூறினால் அவருடைய ஸலாத்திற்கு பதில் கூறுவதற்காக என்னுடைய ரூஹை அல்லாஹ் மீட்டுத் தருகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : அபூதாவூத்)

ஜியாரத் செய்பவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் மீது அல்லாஹ்வின் அமைதி உண்டாவதாக!, அல்லாஹ்வின் படைப்பினங்களில் சிறந்தவர்களே! உங்கள் மீது அல்லாஹ்வின் அமைதி உண்டாவதாக!, தூதர்களின் தலைவர் அவர்களே! இறையச்சமுடையவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களே! உங்கள்மீது அல்லாஹ் வின் அமைதி உண்டாவதாக! நிச்சயமாக நீங்கள் இறைத் தூதை எடுத்துரைத்துவிட்டீர்கள்! அமாநிதத்தை ஒப்படைத்து விட்டீர்கள்! சமுதாயத்திற்கு உபதேசம் செய்துவிட்டீர்கள்! அல்லாஹ்வுடைய பாதையில் இயன்றவரை போராடிவிட்டீர்கள் என்று நான் சாட்சி சொல்கிறேன் என்று கூறுவாரானால் தவறில்லை. ஏனெனில் இவையனைத்தும் நபி (ஸல்) அவர்களின் தன்மைகளில் உள்ளவைகளே!

பிறகு நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி அவர்களுக்காக துஆச் செய்யவேண்டும்.

يَاۤيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ (وَسَلِّمُوْا تَسْلِيْمًا)

ஆகவே முஃமின்களே! நீங்கள் அவர் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்! ஸலாமும் கூறுங்கள்! (33:56) என்ற அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க ஸலவாத்தையும் ஸலாமையும் இணைத்துக் கூறுவது மார்க்கச் சட்டங்களில் ஒன்றாகும்.

பிறகு அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் உமர் (ரலி) அவர்களுக் கும் ஸலாம் கூறி அவர்களுக்காக துஆச் செய்யவேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கும் இரு தோழர்களுக்கும் ஸலாம் சொன்னால் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக! அபூபக்ர் அவர்களே! உங்கள்மீது ஸலாம் உண்டாவதாக! என்னுடைய தந்தையே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக! என்ற வார்த்தையைவிட அதிகமாகப் பெரும்பாலும் கூறமாட்டார் கள். இதனைக்

கூறிவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

-கப்ருக்குச் சென்று ஸலாம் கூறும்- இந்த ஜியாரத் ஆண்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண் களுக்கு கப்ர் ஜியாரத் என எதுவும் கிடையாது. நபி (ஸல்) அவர்கள், கப்ர் ஜியாரத் செய்யும் பெண்களையும் அதனை வணங்குமிடமாக்குபவர்களையும், அதில் விளக்கேற்றுபவர் களையும் சபித்துள்ளார்கள்.
(அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் -ரலி, நூல் : திர்மிதி)

நபி (ஸல்) அவர்களின் பள்ளியில் தொழவேண்டும் என்ற நோக்கத்தில் மதீனாவுக்குச் செல்வது, அங்கு அல்லாஹ்விடம் துஆச் செய்வது மற்றும் அனைத்துப் பள்ளிகளிலும் அனுமதிக்கப்பட்டவைகளைச் செய்வது யாவும் -மேற்கண்ட ஹதீஸ்களின் அடிப்படையில்- ஆண், பெண் அனைவருக்கும் பொதுவான அனுமதியாகும்.
• ஜியாரத் செய்ய வந்திருப்பவர் ஐவேளைத் தொழுகைகளையும் மஸ்ஜிதுன் நபவியில் தொழுவதும், அதிக நன்மைகளைப் பெறும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதிகமாக திக்ர், துஆ மற்றும் நஃபிலான வணக்கங்களில் ஈடுபடுவதும் சுன்னத்தாகும்.

• புனித ரவ்லாவில் நஃபிலான தொழுகைகளை அதிகமாகத் தொழுவது விரும்பத்தக்க செயலாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அதனைப் புகழ்ந்து
( مَا بَيْنَ بَيْتِي وَمِنْبَرِي رَوْضَةٌ مِنْ رِيَاضِ الْجَنَّةِ )
என்னுடைய வீட்டிற்கும் என்னுடைய மிம்பருக்கும் மத்தியில் உள்ளவை சொர்க்கத்துத் தோட்டங்களில் உள்ள ஒரு தோட்டமாகும் எனக் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஜைது -ரலி, நூல் : புகாரீ)

ஜியாரத் செய்ய வந்திருப்பவர்களும் பிறரும் ஃபர்ளான தொழுகைகளில் ரவ்லாவை விட்டும் முன்னே சென்று முடிந்தவரை முதல் வரிசையில் தொழ

முயலவேண்டும். அது கிப்லா திசையில் விரிவாக்கப்பட்ட பகுதியாக இருந்தாலும் சரியே! முதல் வரிசையைப் பற்றி ஆர்வமும் ஆசையுமூட்டி பல ஸஹீஹான ஹதீஸ்கள் வந்துள்ளன.

( لَوْ يَعْلَمُ النَّاسُ مَا فِي النِّدَاءِ وَالصَّفِّ الْأَوَّلِ ثُمَّ لَمْ يَجِدُوا إِلَّا أَنْ يَسْتَهِمُوا عَلَيْهِ لَاسْتَهَمُوا . . )
பாங்கிலும் முதல் வரிசையிலும் உள்ளதை (நன்மைகளை) மக்கள் அறிந்து கொண்டால், அதனை குலுக்கல் முறையில் தான் பெறமுடியும் என்றிருந்தால் குலுக்கலிடுவார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா-ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( تَقَدَّمُوا فَأْتَمُّوا بِي وَلْيَأْتَمَّ بِكُمْ مَنْ بَعْدَكُمْ لَا يَزَالُ قَوْمٌ يَتَأَخَّرُونَ حَتَّى يُؤَخِّرَهُمُ اللَّهُ . . )
முன்னே வாருங்கள்! என்னைப் பின்பற்றி (உங்கள் தொழுகையை) நிறைவேற்றுங்கள்! உங்களுக்குப் பின் உள்ளவர்கள் உங்களைப் பின்பற்றி (அவர்களின் தொழுகையை) நிறைவேற்றிக் கொள்ளட்டும்! ஒரு கூட்டம் தொடர்ந்து (தொழுகைக்குத்) தாமதமாக வருவார்களானால் அல்லாஹ் அவர்களை பின்தங்கியவர்களாக்கி விடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஸயீத் அல்குத்ரீ -ரலி, நூல் : முஸ்லிம்)

(لَا يَزَالُ قَوْمٌ يَتَأَخَّرُونَ عَنِ الصَّفِّ الْأَوَّلِ حَتَّى يُؤَخِّرَهُمُ اللَّهُ فِي النَّارِ)
ஒரு சமுதாயம் முதல் வரிசையை விட்டும்; தொடர்ந்து தாமதமாக வருவார்களானால் அல்லாஹ் அவர்களை நரகில் பின் தங்கியவர்களாக்கி விடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா - ரலி, நூல்: அபூதாவூத்)

( أَلَا تَصُفُّونَ كَمَا تَصُفُّ الْمَلَائِكَةُ عِنْدَ رَبِّهَا فَقُلْنَا يَا رَسُولَ اللَّهِ وَكَيْفَ تَصُفُّ الْمَلَائِكَةُ عِنْدَ رَبِّهَا قَالَ يُتِمُّونَ الصُّفُوفَ الْأُوَلَ وَيَتَرَاصُّونَ فِي الصَّفِّ . . )
மலக்குகள் தங்கள் இரட்சகனிடத்தில் வரிசையாக (அணிவகுத்து) நிற்பது போன்று நீங்களும் வரிசையாக நிற்க மாட்டீர்களா? என நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் கூறியபோது, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மலக்குகள்

தங்கள் இரட்சகனிடத்தில் எவ்வாறு வரிசையாக நிற்பார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் முந்தய வரிசைகளைப் பூர்த்தியாக்குவார்கள், வரிசைகளில் ஒருவரோடு ஒருவர் இணைந்து நிற்பார்கள் என்று கூறினார்கள்.
(அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா -ரலி, நூல் : முஸ்லிம்)
இந்தக் கருத்தில் அதிகமான ஹதீஸ்கள் வந்துள்ளன. இவைகள் நபி (ஸல்) அவர்களின் -காலத்தில் இருந்த- பள்ளிக்கும், அது விரிவாக்கப்படுவதற்கு முன்னரும் விரிவாக்கப்பட்ட பின்னரும் உள்ள பிற பகுதிகளுக்கும் உரிய பொதுவான செய்திகளாகும்.

மேலும் வரிசையின் வலது புறத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு ஆர்வமூட்டிய ஹதீஸ்களும் வந்துள்ளன.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த பள்ளியின் அமைப்பில் வரிசையின் வலதுபுறம் ரவ்லாவுக்கு வெளியே இருப்பது அனைவரும் அறிந்ததே! இதன் மூலம் ரவ்லாவுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட முந்தய வரிசை களுக்கும் வலது புறத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதும் ரவ்லாவில் தொழ முயற்சிப்பதைவிட இவ்விரண்டிலும் நின்று தொழ முயற்சிக்கவேண்டும் என்பதும் தெளிவாகிறது. இது தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்களை ஆய்வு செய்தால் இதுவே மிகத் தெளிவான முடிவாகும்.
- அல்லாஹ்வே நேர்வழிகாட்டுபவன்-

• நபி (ஸல்) அவர்களின் அறையைத் தொடுவதோ, முத்தமிடுவதோ, அதனை வலம் வருவதோ கூடாது. நிச்சயமாக முன்சென்ற நல்லோர்(நபித் தோழர்)களில் எவரும் இவ்வாறு செய்ததாக ஆதாரமில்லை. இது மார்க்கத்தில் தடுக்கப்படவேண்டிய பித்அத் -நூதனச்- செயலாகும்.

தன் தேவையை நிறைவேற்றவோ, கஷ்டத்தை நீக்கவோ, நோயைக் குணமாக்கவோ, அல்லது இது போன்ற எதனையும் நபி (ஸல்) அவர்களி(ன் கப்ரி)டம் கேட்டுப் பிரார்த்திப்பதற்கு எவருக்கும் அனுமதியில்லை. இவை

அனைத்தையும் அல்லாஹ் வைத் தவிர வேறு எவரிடத்திலும் கேட்கக் கூடாது. மரணித்தவர் களிடம் இவைகளைக் கேட்பது அல்லாஹ்வுக்கு இணைவைத்து அல்லாஹ் அல்லாதோரை வணங்கும் செயலாகும்.

மார்க்கம் இரண்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
1-அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவரும் வணங்கப்படக் கூடாது.
2-அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த வழியைத் தவிர பிற முறைகளில் அவன் வணங்கப்படக் கூடாது.
இதுவே, நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை, நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்று சாட்சி கூறுவதன் பொருளாகும்.

• நபி (ஸல்) அவர்களி(ன் கப்ரி)டம் எவரும் -ஷஃபாஅத்தை- பரிந்துரையை (நேரடியாகக்) கேட்கக் கூடாது. பரிந்துரை என்பது அல்லாஹ்வுக்குச் சொந்தமானதாகும். எனவே அதனை அவனைத் தவிர பிறரிடம் கேட்பது கூடாது.

قُلْ لِلهِ) الشَّفَاعَةُ) جَمِيْعًا
பரிந்துரைகள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகும் என்று நபியே நீர் கூறுவீராக! என்று அல்லாஹுஹு தஆலா கூறுகிறான்.
(அல்குர்ஆன் 39:44)

யாஅல்லாஹ்! என் விஷயத்தில் உனது நபி (செய்யும்) பரிந்துரையை ஏற்றுக் கொள்வாயாக! யாஅல்லாஹ்! என் விஷயத்தில் உன்னுடைய மலக்குகளும் முஃமின்களான உனது அடியார்களும் செய்யும் பரிந்துரையை ஏற்றுக் கொள்வாயாக! யாஅல்லாஹ்! எனக்கு முன்சென்றுவிட்ட (நான் இழந்துவிட்ட சிறு குழந்தைகளான) என்னுடைய சந்ததியினர் என் விஷயத்தில் செய்யும் பரிந்துரையை ஏற்றுக் கொள்வாயாக! என்பன போன்ற துஆக்களைக் கேட்கலாம்.

பரிந்துரை மற்றும் அதல்லாத வேறு எந்த ஒன்றையும் மரணித்து விட்டவர்களிடம் கேட்கக் கூடாது. அவர்கள் நபிமார்களாகவோ அல்லது நபியல்லாத பிறராகவோ யாராக இருந்தாலும் சரியே! இவ்வாறு கேட்பதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை, மேலும் மரணித்துவிட்டவர்களை விட்டும் - மார்க்கம் விதிவிலக்காகக் கூறியுள்ளதைத் தவிர- மற்ற அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

( إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ )

மனிதன் மரணித்து விட்டால் மூன்றைத் தவிர அவனுடைய அனைத்து அமல்களும் துண்டித்துவிடுகின்றன. அவை : நிலையான தர்மம், பயனளித்துக் கொண்டிருக்கும் கல்வி, அவருக்காக துஆச் செய்யும் ஸாலிஹான சந்ததி என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்தபோதும் மறுமையில் அவர்களை சந்திக்கும் போதும் மட்டும்தான் அவர்களிடம் பரிந்துரைக்காக வேண்டிக் கொள்ள அனுமதியுள்ளது. அப்போதுதான் அவர்களால் அதனைச் செய்ய முடியும். (மறுமையில்) பரிந்துரைக்க வேண்டுவோருக்காக அல்லாஹ் விடம் முன்சென்று பிரார்த்திக்க முடியும். இவ்வுலகில் -அவர்கள் உயிருடன் இருந்த போது செய்த பரிந்துரைகள்- அனைவரும் அறிந்ததே! அது அவர்களுக்கு மட்டும் பிரத்தியேகமானதல்ல. மாறாக அது அவர்களுக்கும் அவர்கள் அல்லாத பிறருக்கும் பொதுவானதாகும். எனவே ஒரு முஸ்லிம் தன் சகோதரரை நோக்கி எனக்காக அல்லாஹ் விடத்தில் பிரார்த்தனை செய்யுங்கள்! என்ற பொருளில் எனக்காக இந்த காரியத்தில் என்னுடைய இரட்சகனிடம் பரிந்துரை செய்யுங்கள்! என்று கூறுவதற்கு அனுமதியுள்ளது. கோரப்படும் தேவைகள் ஹலாலானவைகளாக இருந்தால் அவர் தன் சகோதரருக்காக அதை அல்லாஹ்விடம் பரிந்துரைத்துப் பிரார்த்திக்க அனுமதியுள்ளது.

ஆனால் மறுமை நாளில் அல்லாஹ்வின் அனுமதியின்றி எவரும் -
எவருக்காகவும்- பரிந்துரைக்க முடியாது.
مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهُ إِلاَّ) بِإِذْنِه)
. . அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்? . .
என அல்லாஹுு தஆலா கேட்கின்றான்.
(அல்குர்ஆன் 2:255)

மரணத்திற்குப் பிறகுள்ள நிலை என்பது : மரணத்திற்கு முன்னுள்ள மனிதனின் நிலையுடனோ, அல்லது அவன் அழிக்கப்பட்டு மீண்டும் எழுப்பப்படும் (மறுமை) நிலையுடனோ ஒப்பிட முடியாத தனிப்பட்ட நிலையாகும்.

-மார்க்கம் விதிவிலக்காகக் கூறியுள்ளதைத் தவிர- மரணித்து விட்டவரின் அனைத்து அமல்களும் துண்டிக்கப்பட்டு விடுகின்றன. அவர் முன்செய்த தன் செயல்களுக்கு பொறுப்பாகிவிடுகிறார்.

மார்க்கம் விதிவிலக்காகக் கூறியவைகளில் மரணித்தவர் களிடம் பரிந்துரைக்காக வேண்டுவது இடம்பெறவில்லை. எனவே அதனை அவ்விதிவிலக்குடன் இணைப்பது கூடாது.

நபி (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு பிறகு பர்ஸக் எனும் திரைவாழ்வில் நிச்சயமாக ஷுஹதாக்களின் வாழ்வை விட மிகச் சிறந்த வாழ்வில் உள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும் நிச்சயமாக அது மரணத்திற்கு முன்னுள்ள வாழ்வின் வகையைச் சார்ந்ததோ அல்லது மறுமை வாழ்வின் வகையைச் சார்ந்ததோ அல்ல. மாறாக அந்த வாழ்வின் தன்மையையும் எதார்த்த நிலையையும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது. இதனால்தான் முன்சென்ற நபிமொழியில்

( مَا مِنْ أَحَدٍ يُسَلِّمُ عَلَيَّ إِلَّا رَدَّ اللَّهُ عَلَيَّ رُوحِي حَتَّى أَرُدَّ عَلَيْهِ السَّلَامَ )
என் மீது யாரேனும் ஸலாம் கூறினால் அவருடைய ஸலாத்திற்கு பதில்

கூறுவதற்காக என்னுடைய ரூஹை அல்லாஹ் மீட்டுத் தருகிறான் என்று கூறப்பட்டுள்ளது.
(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : அபூதாவூத்)

நிச்சயமாக அவர்கள் மரணித்துவிட்டார்கள், அவர்களின் ரூஹ் அவர்களின் உடலை விட்டும் பிரிந்து விட்டது, எனினும் அது ஸலாம் கூறப்படும் போது (அதற்கு பதிலுரைப்பதற்காக) திரும்பக் கொடுக்கப்படுகிறது என்பதை இந்த ஹதீஸின் மூலம் அறிந்து கொள்ளலாம். நபி (ஸல்) அவர்களின் மரணத்தைப் பற்றி அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் பல ஆதாரங்கள் உள்ளன. இது அறிஞர்களின் ஒருமித்த கூற்றுமாகும். எனினும் ஸலாத்திற்கு பதிலுரைப்பதற்காக அவர்களுக்கு மீண்டும் ரூஹ் கொடுக்கப்படுவது திரைவாழ்விற்கு தடையாக இருக்காது.

وَلاَ تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ (اللهِ) أَمْوَاتًا بَلْ أَحْيَاءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ
அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்து) கொல்லப்பட்டோரை இறந்துவிட்டவர்களென நிச்சயமாக நீங்கள் எண்ணவேண்டாம். மாறாக அவர்கள் தங்கள் இரட்சகனிடத்தில் உயிருள்ளோராக இருக்கின்றார்கள். அவனால் அவர்கள் உணவளிக்கப் படுகின்றார்கள் (3:169) என்ற வசனம், ஷஹீதாக மரணித்தவர் களின் திரைவாழ்விற்கு தடையாக இல்லாதது போன்று (ஸலாத்திற்கு பதிலுரைப்பதற்காக மீண்டும் ரூஹ் கொடுக்கப் படுவது நபி (ஸல்) அவர்களின் திரைவாழ்விற்கும் தடையாக இருக்காது).

இவ்விஷயத்தை நாம் விரிவாக விளக்கியுள்ளதற்குப் பல காரணங்கள் உள்ளன. நாம் மேற்கூறிய விஷயத்தைப் -பிரித்துப் பார்க்க முடியாமல்- ஒன்றென நினைத்துவிடும் பலர், அல்லாஹ்வுக்கு -இணைவைக்கும்- ஷிர்க்கின் பக்கமும் அல்லாஹ்வை விட்டுவிட்டு கப்ரை வணங்குவதற்கும் சென்று விடுகின்றனர். மார்க்கத்திற்கு மாற்றமான அனைத்துக் காரியங்களை விட்டும் நம்மையும் முஸ்லிம்கள் அனைவர் களையும் அல்லாஹ் காப்பாற்றுவானாக!

ஜியாரத் செய்ய வருவோரில் சிலர் நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கருகில் சப்தத்தை உயர்த்துவதும் அங்கு அதிகநேரம் நிற்பதும் மார்க்கத்திற்கு மாற்றமான செயலாகும். நபி (ஸல்) அவர்களின் சப்தத்தை விட தம் சப்தத்தை உயர்த்துவதை விட்டும், சிலர் சிலரிடம் சப்தமாக பேசுவது போன்று அவர்களிடம் சப்தமாக பேசுவதைவிட்டும் மக்களை அல்லாஹ் தடுத்துள்ளான். மேலும் அவர்கள் முன் சப்தத்தை தாழ்த்திக் கொள்ளுமாறு தூண்டியுள்ளான்.

يَأَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا لاَ تَرْفَعُوْا أَصْوَاتَكُمْ فَوْقَ صَوْتِ النَّبِيِّ وَلاَ تَجْهَرُوْا لَهُ بِالْقَوْلِ كَجَهْرِ بَعْضِكُمْ لِبَعْضٍ أَنْ تَحْبَطَ أَعْمَالُكُمْ وَأَنْتُمْ لاَ تَشْعُرُوْنَ – إِنَّ الَّذِيْنَ يَغُضُّوْنَ أَصْوَاتَهُمْ عِنْدَ رَسُوْلِ اللهِ أُولَئِكَ الَّذِيْنَ امْتَحَنَ اللهُ قُلُوْبَهُمْ لِلتَّقْوَى لَهُمْ مَغْفِرَةٌ وَأَجْرٌ عَظِيْمٌ

விசுவாசிகளே நபியுடைய சப்தத்திற்கு மேல் உங்களுடைய சப்தத்தை உயர்த்தாதீர்கள். மேலும் உங்களில் சிலர் மற்ற சிலருடன் உரக்கப் பேசுவதைப் போல் அவரிடம் பேசுவதில் (சப்தத்தை உயர்த்தி) நீங்கள் உரக்கப் பேசாதீர்கள். (ஏனெனில் இதனால்) நீங்கள் உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் உங்களுடைய (நன்மையான) செயல்கள் அழிந்துவிடும். - நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் (பேசும் பொழுது) தங்களுடைய சப்தங்களைத் தாழ்த்திக் கொள்கிறாரே அத்தகையோர் - அவர்களுடைய இதயங்களை பயபக்திக்காக அல்லாஹ் பரிசுத்தமாக்கி வைத்தானே அத்தகையோராவார். அவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான கூலியும் உண்டு. (அல்குர்ஆன் 49:2-3)

நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கு அருகில் அதிக நேரம் நிற்பதும் (அங்கு நின்று கொண்டு) மீண்டும் மீண்டும் பலமுறை ஸலாம் கூறுவதும் கப்ருக்கு அருகில் கூட்டம் கூடுவதற்கும், அதிக நெரிசலுக்கும், சப்தம் உயர்வதற்கும் காரணமாகிறது. இது (மேற்கூறப்பட்ட) தெளிவான வசனங்களில் அல்லாஹ் முஸ்லிம்களுக்குக் கூறும் கட்டளைக்கு மாறுசெய்வதாகும். நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும் போதும் மரணித்த பின்னரும் மதிக்கப்பட வேண்டியவராவார்கள். அவர்களின் கப்ருக்கருகில் மார்க்க ஒழுக்கத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடுவது முஃமினுக்கு அழகல்ல.

இது போல் ஜியாரத் செய்பவர்களிலும் மற்றவர்களிலும் சிலர் நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கருகில் கப்ரை முன்னோக்கி நின்று கொண்டு இரு கைகளையும் உயர்த்தி பிரார்த்திக்க முயற்சிக்கின்றனர். இவை அனைத்தும் முன்சென்ற நல்லோர்களான நபித்தோழர்களின் செயலுக்கும் அவர்களின் அனைத்து நல்லறங்களிலும் அவர்களைப் பின்பற்றியவர்களின் செயலுக்கும் மாற்றமாகும். மாறாக இது மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட -பித்அத்- தாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

بِالنَّوَاجِذِ عَلَيْهَا وَعَضُّوا بِهَا تَمَسَّكُوا لْمَهْدِيِّينَا الرَّاشِدِينَ الْخُلَفَاءِ وَسُنَّةِ بِسُنَّتِي فَعَلَيْكُمْ . . )
( ضَلَالَةٌ بِدْعَةٍ وَكُلَّ بِدْعَةٌ مُحْدَثَةٍ كُلَّ فَإِنَّ الْأُمُور وَمُحْدَثَاتِ وَإِيَّاكُمْ

நீங்கள் என்னுடைய வழிமுறையையும், எனக்கு பின் தோன்றும் நேர்வழி பெற்ற, நுண்ணறிவுடைய கலீஃபாக்களின் வழிமுறையையும் பின்பற்றிக் கொள்ளுங்கள்! அதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! அவைகளை கடவாய்ப் பற்களால் மிக வலுவாகப் பிடித்துக் கொள்ளுங்கள். (மார்க்க) விஷயங்களில் புதிதாக ஏற்படுத்தப்படுபவைகளை விட்டும் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். நிச்சயமாக புதிதாக ஏற்படுத்தப்படுபவை அனைத்தும் பித்அத்களாகும். அனைத்து பித்அத்களும் வழிகேடாகும்.
(அறிவிப்பவர் : இர்பாழ்-ரலி, நூற்கள் : அபூதாவூத், அஹ்மத்)

( رَدٌّ فَهُوَ مِنْهُ لَيْسَ مَا هَذَا أَمْرنَا فِي أَحْدَثَ مَنْ )

நம்முடைய -மார்க்க- விஷயத்தில் அதில் இல்லாததை யாரேனும் புதிதாக உருவாக்கினால் அது -அல்லாஹ்விடத் தில் ஏற்றுக் கொள்ளப்படாமல்- மறுக்கப்பட்டுவிடும்.
(அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( رَدٌّ فَهُوَ أَمْرُنَا عَلَيْهِ لَيس عَمَلًا عَمِل مَنْ )

யாரேனும் -மார்க்க விஷயத்தில்- நாம் கட்டளையிடாத ஏதேனும் ஒரு செயலைச் செய்தால் அது -அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல்- மறுக்கப்பட்டு விடும். (அறிவிப்பவர் : ஆயிஷா -ரலி, நூல் : முஸ்லிம்)

(அலீ -ரலி, அவர்களின் பேரரான) ஜைனுல் ஆபிதீன் அலீ பின் ஹுஸைன் அவர்கள், நபி (ஸல்) அவர்களின் கப்ரருகில் துஆச் செய்தவராக ஒருவரைக் கண்டார்கள். உடனே அதனை விட்டும் அவரைத் தடுத்தார்கள். பிறகு, நான் என்னுடைய தந்தை (ஹுஸைன் -ரலி) அவர்களிடமிருந்தும் அவர் எனது பாட்டனார் (அலீ -ரலி) அவர்களிடமிருந்தும் அவர், நபி (ஸல்) அவர்களிடமிருந்தும் கேட்ட ஹதீஸை நான் உனக்கு கூறட்டுமா? என்னுடைய கப்ரை விழாவாக்கா தீர்கள்! உங்களுடைய வீடுகளை கப்ருகளாக்காதீர்கள்! என் மீது ஸலவாத்துக் கூறுங்கள்! நீங்கள் எங்கிருந்த போதிலும் உங்களுடைய ஸலாம் நிச்சயமாக என்னை வந்தடையும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவித்தார்கள்.

இதனை ஹாஃபிழ் முஹம்மது பின் அப்துல் வாஹித் மக்தஸீ அவர்கள் தனது அல்அஹாதீஸுல் முக்தாரா எனும் நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

ஜியாரத் செய்வோரில் சிலர் தொழுகையில் நிற்பது போன்று வலது கையை இடது கையின் மீது வைத்து அதனை நெஞ்சின் மேற்பகுதியிலோ அல்லது அதற்குக் கீழோ வைத்த வாறு நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறுகின்றனர். நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறும் போதோ அல்லது அவர்களல்லாத அரசர்கள், தலைவர்கள் போன்றோருக்கோ இதுபோன்ற அமைப்பில் ஸலாம் கூறுவதற்கு அனுமதி யில்லை. இது போன்ற பணிவும் அடக்கமும் வழிபாடும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கு முன்னிலையிலும் செய்யக் கூடாது. இவ்வாறே மார்க்க அறிஞர்கள் கருதுவதாக இமாம் ஹாஃபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது ஃபத்ஹுல் பாரீ எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். முன்சென்ற நல்லோர்(நபித்தோழர்)களின் நேர்வழியைப் பின்பற்றுவதை இலட்சியமாகக் கொண்ட ஒருவர் -நாம் கூறிய- இவ்விஷயத்தைப் பற்றி சிந்தித்தால் மிகத்தெளிவாகப் புரியும்.

குருட்டு பக்தியும் மனோஇச்சையும் கண்மூடிப் பின்பற்றும் தனிமனித

வழிபாடும் மிகைத்து விட்டதன் காரணத்தினால், முன்சென்ற நல்லோர்(நபித்தோழர்)களின் வழியின் பக்கம் மக்களை அழைப்பவர்களைப் பற்றி சிலர் தீய எண்ணம் கொண்டுள்ளனர். அவர்களைப் பற்றிய தீர்ப்பு அல்லாஹ்விடம் உள்ளது. நாம் அல்லாஹ்விடம் நமக்கும் அவர்களுக்கும் நேர்வழியையும், அசத்தியத்தைப் புறக்கணித்து சத்தியத்தைத் தேர்ந்தெடுக்கும் பாக்கியத்தையும் கேட்போம். நிச்சயமாக அவனே மிகத்தூய்மையானவன், மிகச்சிறந்த பொருப்பாளன்.

மக்களில் சிலர் நபி (ஸல்) அவர்களின் கப்ரை முன்னோக்கியவாறு வெகுதூரத்தில் நின்று கொண்டு ஸலாம் கூறுபவர்களாகவோ, பிரார்த்திப்பவர்களாவோ, உதடுகளை அசைப்பது போன்ற அனைத்தும் நாம் முன்னர் குறிப்பிட்டுள்ள பித்அத்களின் வகையைச் சேர்ந்தவைகளே!
மார்க்கத்தில் அல்லாஹ் அனுமதிக்காததை புதிதாக ஏற்படுத்துவது எந்த முஸ்லிமுக்கும் அழகல்ல. ஒருவர் இச்செயலின் வாயிலாக அல்லாஹ்வைத் தூய்மையாக நேசிப்பதை விட்டும் தூரமாகி, அவன் வெறுப்பின் பக்கம் மிக நெருங்கிவிடுகிறார்.
இச்செயலையும் இதுபோன்றவைகளையும் தடுத்த இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள்,

لَنْ يُصْلِحَ آخِرَ هَذِهِ الأُمَّةِ إلاَّ مَا أَصْلَحَ أَوَّلَهَا
இச்சமுதாயத்தில் முந்தய காலத்தில் வாழ்ந்தவர்களை எது சீர்திருத்தியதோ அதுதான் இச்சமுதாயத்தின் பிந்திய காலத்தவர்களையும் சீர்திருத்தும் என்றார்கள்.

நிச்சயமாக இச்சமுதாயத்தில் முந்தய காலத்தில் வாழ்ந்தவர்களை நபி (ஸல்) அவர்களின் நெறியிலும், நேர்வழி பெற்ற கலீஃபாக்கள், இறைப்பொருத்தத்தைப் பெற்ற நபித் தோழர்கள், அவர்களை நல்லவற்றில் பின் தொடர்ந்தோர்கள் ஆகியோரின் வழியிலும் சென்றதுதான் சீர்திருத்தியது என்பது அனைவரும் அறிந்ததே! எனவே இச்சமுதாயத்தின் பின் தோன்றல்கள் இவ்வழியை பற்றிப் பிடித்து செல்லாதவரை சீர்திருத்தம்

அடையமுடியாது.

முஸ்லிம்கள் அனைவரும் நேர்வழியிலும் வெற்றிப் பாதையிலும் செல்ல அல்லாஹ் கிருபை செய்வானாக! இம்மையிலும் மறுமையிலும் அவர்களை கண்ணியப் படுத்துவானாக! நிச்சயமாக அவனே கொடையாளன். கிருபையாளன்.

## 15. எச்சரிக்கை

பொதுமக்களில் சிலர் எண்ணிக்கொண்டிருப்பது போல் நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வது ஹஜ்ஜின் கடமையான செயல்களிலோ, அல்லது அதன் நிபந்தனை களிலோ உள்ளதன்று. மாறாக மஸ்ஜிதுன் நபவிக்கு வருகை தருபவர்கள் அல்லது அதனருகில் இருப்பவர்கள் நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வது விரும்பத்தக்க செயலாகும்.

மதீனாவை விட்டும் தூரமாக இருப்பவர்கள் நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் பயணம் மேற்கொள்வது கூடாது. மாறாக புனிதப் பள்ளிக்கு -மஸ்ஜிதுன் நபவிக்கு- செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் பயணம் மேற்கொள்வது சுன்னத்தாகும். பள்ளிக்கு வருகை தருபவர் நபி (ஸல்) அவர்களின் கப்ரையும் இரு தோழர்களின் கப்ர்களையும் ஜியாரத் செய்வார். மஸ்ஜிதுன் நபவியை ஜியாரத் செய்வதைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களின் கப்ரையும் அவர்களின் இரு தோழர்களின் கப்ர்களையும் ஜியாரத் செய்யும் வாய்ப்பும் கிடைத்து விடுகிறது.
(وَلَا تُشَدُّ الرِّحَالُ إِلَّا إِلَى ثَلَاثَةِ مَسَاجِدَ مَسْجِدِي هَذا وَالْمَسْجِدِ الْحَرَامِ وَالْمَسْجِدِ الْأَقْصَى )
மூன்று பள்ளிவாயில்களைத் தவிர -நன்மையை நாடி- பயணம் மேற்கொள்ளக் கூடாது. அவை : மஸ்ஜிதுல் ஹராம், என்னுடைய மஸ்ஜித்,

மஸ்ஜிதுல் அக்ஸா என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பாளர் : அபூஸயீத் -ரலி, நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களின் கப்ரையோ அல்லது பிறரின் கப்ரையோ -ஜியாரத் செய்ய- பயணம் மேற்கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதி இருந்திருந்தால் அதனை உம்மத்தினருக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருப்பார்கள். அதன் சிறப்பையும் கூறியிருப்பார்கள். ஏனெனில் நிச்சயமாக அவர்கள் மக்களுக்கு மிகத் தெளிவாக உபதேசம் செய்பவர்கள், அனைவரையும் விட அல்லாஹ்வைப் பற்றி அதிகம் அறிந்தவர்கள், அனைவரையும் விட அல்லாஹ்வுக்கு மிகவும் அஞ்சுபவர்கள். நிச்சயமாக அவர்கள் மக்களுக்கு மிகத் தெளிவாக -மார்க்கத்தை- எடுத்துரைத்து விட்டார்கள். தம் உம்மத்தினருக்கு நல்லவைகள் அனைத்தையும் எடுத்துச் சொல்லி விட்டார்கள். அனைத்துத் தீமைகளை விட்டும் எச்சரித்து விட்டார்கள். மூன்று பள்ளிவாயில்களைத் தவிர -வேறு எங்கும் நன்மையை நாடி- பயணம் மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரித்த நபி (ஸல்) அவர்கள்,
( كُنْتُمْ حَيْثُ تَبْلُغُنِي صَلَاتَكُمْ فَإِنَّ عَلَيَّ وَصَلُّوا عِيدًا قَبْرِي تَجْعَلُوا وَلَا قُبُورًا بُيُوتَكُمْ تَجْعَلُوا لَا )
உங்கள் வீடுகளை கப்ருகளாக்கிவிடாதீர்கள்! என்னுடைய கப்ரை விழாவாக ஆக்கிவிடாதீர்கள்! என்மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்! நிச்சயமாக நீங்கள் எங்கிருந்து ஸலவாத்துக் கூறினாலும் அது என்னை வந்தடையும் என்றும் கூறியுள்ளார்கள் எனும்போது கப்ர் ஜியாரத்திற்காக பயணம் செய்வதை எவ்வாறு அனுமதித்திருப்பார்கள்?!
(அறிவிப்பவர்: அபூஹுரைரா-ரலி, நூல்:அபூதாவூத்)

நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வதற்காக பயணம் மேற்கொள்ள மார்க்கத்தில் அனுமதியுள்ளது என்ற கூற்று அவர்கள் கப்ரை விழாக் கூடமாக்குவதற்கும் அவர்களை அளவு கடந்து புகழ்வதற்கும் வறம்புமீறி உயர்த்துவதற்கும் -சுருக்கமாகக் கூறவேண்டுமானால்- நபி (ஸல்) அவர்கள் எதனை பயந்து எச்சரித்தார்களோ அவை கள் அனைத்தும் அரங்கேறுவதற்குக் காரணமாக அமையும். அதிகமான மக்கள் இத்தவறுகளைச் செய்யக் காரணம் நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத்

செய்வதற்குப் பயணம் மேற்கொள்ள மார்க்கத்தில் அனுமதியுள்ளது என்று அவர்கள் -தவறாக- நம்பியிருப்பதே!

நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வதற்காக பயணம் மேற்கொள்ள மார்க்கத்தில் அனுமதியுள்ளது என சில ஆதாரங்கள் கூறப்படுகின்றன. அவை அனைத்தும் மிகவும் பலவீனமான அறிவிப்பாளர்களின் தொடர்களை உடைய, மாறாக, அவைகள் -நபி (ஸல்) அவர்கள் கூறாததை, அவர்கள் கூறியதாக- இட்டுக்கட்டி கூறப்பட்டுள்ள செய்திகளாகும். ஹதீஸ் கலை வல்லுனர்களான தாரகுத்னீ, பைஹகீ, ஹாஃபிழ் இப்னு ஹஜர் போன்றோர் அதன் பலவீனங்களைக் கூறி எச்சரித்துள்ளார்கள். எனவே -இட்டுக் கட்டப்பட்ட- அந்தச் செய்திகளை மூன்று பள்ளிவாயில்களைத் தவிர -வேறு எங்கும் நன்மையை நாடி- பயணம் மேற்கொள்வதைத் தடுக்கும் ஆதாரப் பூர்வமான ஹதீஸ் களுக்கு எதிராகக் கூறுவது கூடாது.

இத்தலைப்பு தொடர்பான இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை நீங்கள் அறிந்து கொள்வதற்காகவும் அதனைக் கண்டு ஏமாந்து விடாமல் எச்சரிக்கையாக இருப்பதற்காகவும் அதில் சிலவற்றை தங்கள் முன் வைக்கின்றேன்;

مَنْ حَجَّ وَلَمْ يَزُرْنِي فَقَدْ جَفَانِي

யார் ஹஜ் செய்து, என்னை ஜியாரத் செய்யவில்லையோ நிச்சயமாக அவர் என்னை வெறுத்துவிட்டார்.

مَنْ زَارَنِي بَعْدَ مَمَاتِي فَكَأَنَّمَا زَارَنِي فِي حَيَاتِي

நான் மரணித்ததற்குப் பிறகு என்னை ஜியாரத் செய்பவர் நான் உயிருடன் இருக்கும் போது என்னை சந்தித்தவரைப் போன்றவராவார்.

مَنْ زَارَنِي وَزَارَ أَبِي إِبْرَاهِيمَ فِي عَامٍ وَاحِدٍ ضَمِنْتُ لَهُ عَلَى اللهِ الْجَنَّةَ

ஒரே வருடத்தில் என்னையும் எனது தந்தை இப்ராஹீம் அவர் களையும் ஜியாரத் செய்தவருக்கு அல்லாஹ்விடத்தில் சொர்க் கத்தைப் பெற்றுத் தரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

مَنْ زَارَ قَبْرِي وَجَبَتْ لَهُ شَفَاعَتِي

என்னுடைய கப்ரை ஜியாரத் செய்தவருக்காக என்னுடைய பரிந்துரை கடமையாகிவிட்டது.

ஹதீஸ்களாக கூறப்படும் இவை போன்றவைகளை நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கான எந்த ஆதாரமும் கிடையாது.

ஹாஃபிழ் இப்னு ஹஜர் அவர்கள் தல்கீஸ் எனும் நூலில் இது தொடர்பான அறிவிப்பாளர்களின் பல வரிசைகளைக் கூறிவிட்டு இந்த ஹதீஸின் அனைத்துத் தொடர்களும் பலவீனமானவைகளே! என்று கூறியுள்ளார்கள்.

இச்செய்தி தொடர்பாக வரும் எந்த ஒன்றும் ஆதாரப் பூர்வமானதல்ல என ஹாஃபிழ் உகைலீ அவர்கள் கூறியுள் ளார்கள். இந்த ஹதீஸ்கள் அனைத்தும் இட்டுக்கட்டப் பட்டவைகளே! என ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்கள் உறுதியாகக் கூறியுள்ளார்கள்.

இச்செய்திகளை நீங்கள் அறிந்து, நினைவில் நிறுத்தி, பிறருக்கும் எடுத்துரைக்க இதுவே போதுமானதாகும். இதில் ஏதேனும் ஒரு செய்தி ஆதாரப் பூர்வமானதாக இருந்திருந்தால் அதனை செயல்படுத்துவதிலும் மக்களுக்கு விளக்கிக் கூறுவதிலும் அதன்பால் அவர்களை அழைப் பதிலும் நபித்தோழர்கள் மக்களுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்திருப்பார்கள். ஏனெனில் நிச்சயமாக நபிமார்களுக்குப் பிறகு அவர்களே மக்களில் சிறந்தவர்கள், அல்லாஹ்வின் சட்டங்களையும் அவன் தன் அடியார்களுக்கு இட்ட கட்டளைகளையும் நன்கறிந்தவர்கள், அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு மக்களுக்கு அதிகமாக உபதேசம் செய்தவர்கள். இத்தகையோர் -மேற்கூறிய- எதனையும் செய்ததாக எந்தச் செய்தியும் வராதது அவைகள் மார்க்கத்தில் உள்ளவையல்ல என்பதை உணர்த்துகிறது.

மேற்கண்ட செய்திகளில் ஏதேனும் ஒன்று ஆதாரப் பூர்வமானதாக இருந்திருந்தால் -இதுதொடர்பான ஹதீஸ்களை ஒருங்கிணைக்கும் விதமாக-

கப்ரை ஜியாரத் செய்வதற்காக பயணம் செய்யாமல் -வேறு நோக்கத்திற்காக பயணிக்கும் போது கப்ரைக் கண்டால் அதனை ஜியாரத் செய்வதை- மார்க்கம் அனுமதித்துள்ள ஜியாரத்துடன் இதனையும் இணைப்பது அவசியமாகியிருக்கும். -ஆனால் எந்தச் செய்தியும் ஆதாரப்பூர்வமானதாக இல்லை- மிகத் தூய்மையான, மிக உயர்ந்தவனான அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

## 16. குபா மஸ்ஜிதையும் பகீஃயையும் ஜியாரத் செய்தல்

மதினாவுக்கு வருகை தருவோர் குபா மஸ்ஜிதிற்குச் சென்று தொழுவது விரும்பத்தக்க செயலாகும்.

( كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ يَأْتِي مَسْجِدَ قُبَاءٍ رَاكِبًا وَمَاشِيًا - فَيُصَلِّي فِيهِ رَكْعَتَيْنِ )
நபி (ஸல்) அவர்கள் வாகனித்தவர்களாகவும் நடந்தவர் களாவும் குபா மஸ்ஜிதிற்கு வருகை தருவார்கள். அங்கே இரண்டு ரகஅத்கள் தொழுவார்கள் என இப்னு உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள். (நூற்கள் : புகாரீ, முஸ்லிம்)

( مَنْ تَطَهَّرَ فِي بَيْتِهِ ثُمَّ أَتَى مَسْجِدَ قُبَاءَ فَصَلَّى فِيهِ صَلَاةً كَانَ لَهُ كَأَجْرِ عُمْرَةٍ )
ஒருவர் தன்னுடைய வீட்டில் (உளுச் செய்து) தூய்மையாகி, பிறகு குபா மஸ்ஜிதிற்குச் சென்று அங்கே ஏதேனும் ஒரு தொழுகையைத் தொழுவாரானால் உம்ராவிற்குரிய நன்மை போன்று அவருக்குக் கிடைக்கின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: ஸஹ்ல் -ரலி, நூல் : இப்னுமாஜா)

நபி (ஸல்) அவர்கள் பகீஃயின் கப்ர்களையும் ஷுஹதாக்களின் கப்ர்களையும் ஹம்ஸா (ரலி) கப்ரையும் ஜியாரத் செய்து, அவர்களுக்காக துஆச்

செய்துள்ளதால் அவைகளை ஜியாரத் செய்வது சுன்னத்தாகும்.

( زُوْرُوا الْقُبورَ فَإِنَّهَا تُذَكِّرُكُمُ الْآخِرَةَ )

கப்ர்களை ஜியாரத் செய்யுங்கள்! நிச்சயமாக அது உங்களுக்கு மறுமையை நினைவூட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அறிவிப்பவர் : அபூஹுரைரா -ரலி, நூல் : இப்னுமாஜா)

கப்ர்களை ஜியாரத் செய்யும் போது இவ்வாறு -ஸலாம்- கூறவேண்டுமென நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள் :

( اَلسَّلَامُ عَلَيْكُمْ أَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِينَ وَالْمُسْلِمِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللَّهُ بِكُمْ لَاحِقُونَ نَسْأَلُ اللَّهَ لَنَاوَلَكُمُ الْعَافِيَةَ)

அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத் தியாரி மினல் முஃமினீன வல்முஸ்லிமீன், வஇன்னா இன்ஷா அல்லாஹு பிக்கும் லாஹிகூன், நஸ்அலுல்லாஹ லனா வலகூமுல் ஆஃபியா

(பொருள் : முஃமின்களான, முஸ்லிம்களான கப்ர் வாசிகளே! உங்கள் மீது -அல்லாஹ்வின்- அமைதி உண்டாவதாக! நிச்சயமாக நாங்கள் அல்லாஹ் நாடினால் உங்களை வந்தடைவோம். மேலும் நாங்கள் எங்களுக்காகவும் உங்க ளுக்காகவும் அல்லாஹ்விடம் நல்வாழ்வைக் கேட்கின்றோம்.)

(அறிவிப்பவர்: சுலைமான் பின் புரைதா-ரலி, நூல்: இப்னுமாஜா)

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் கப்ர்களை கடந்து சென்றால் அதனை முன்னோக்கி நின்று கொண்டு இவ்வாறு கூறுவார்கள்:

( اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا أَهْلَ الْقُبُورِ يَغْفِرُ اللَّهُ لَنَا وَلَكُمْ أَنْتُمْ سَلَفُنَا وَنَحْنُ بِالْأَثَرِ )

அஸ்ஸலாமு அலைக்கும் யா அஹ்லல் குபூரி யஃபிருல்லாஹு லனா வலக்கும், அன்(த்)தும் ஸலஃபுனா வனஹ்னு பில்அஸர்.

(பொருள் : கப்ர் வாசிகளே உங்கள் மீது -அல்லாஹ்வின்- அமைதி உண்டாவதாக! அல்லாஹ் எங்களையும் உங்களை யும் மன்னித்தருள்வானாக! நீங்கள் எங்களுக்கு முன் சென்று விட்டீர்கள். நாங்கள் உங்களைத் தொடர்ந்து கொண்டுள் ளோம்) (அறிவிப்பவர் : இப்னுஅப்பாஸ் -

ரலி, நூல் : திர்மிதி)

நாம் மறுமையை நினைவு கூர்வதற்காகவும், மரணித்து விட்டவர் மீது இரக்கப்பட்டு அவர்களுக்கு உபகாரம் செய்யும் விதமாக அவர்களுக்காக நாம் துஆச் செய்வதற்காகவும்தான் மார்க்கம் கப்ர் ஜியாரத்தை அனுமதித்துள்ளது என்பதை இந்த நபிமொழிகளின் மூலம் அறியமுடிகிறது.

கப்ர்களிடத்தில் பிரார்த்தனை செய்யும் நோக்கத்திலோ, அங்கு தங்குவதற்காகவோ ஜியாரத்திற்குச் செல்வது, அவர்களிடம் தம் தேவைகளை நிறைவேற்ற வேண்டுவது, நோய் நிவாரணம் தேடுவது, அவர்களைக் கொண்டோ அல்லது அவர்களின் பொருட்டாலோ அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது போன்ற அனைத்தும் மார்க்கம் தடுத்துள்ள பித்அத்தான ஜியாரத்தாகும். இதனை அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதரும் அனுமதிக்கவில்லை. இவ்வாறு முன்சென்ற நல்லோர்(நபித்தோழர்)கள் எவரும் செய்யவில்லை. மாறாக இவையனைத்தும் நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ள, வெறுத்துள்ள காரியங்களாகும்.
( فَزُورُوهَا وَلَا تَقُولُوا هُجْرًا )
கப்ர்களை ஜியாரத் செய்யுங்கள்! வெறுக்கத்தக்கவைகளைக் கூறாதீர்கள்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(அறிவிப்பவர் : சுலைமான் பின் புரைதா-ரலி, நூல் : அஹ்மத்)

மேற்கண்டவை அனைத்தும் -மார்க்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள- பித்அத்தின் வகையைச் சார்ந் தவைகளாகும். எனினும் -அதன் விளைவுகளில்- படித்தரங்கள் உள்ளன. கப்ருக்கருகில் நின்று கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது, மரணித்தவரின் பெயர்களைக் கூறி, அவர்களின் பொருட்டால் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது போன்றவைகளும் பித்அத்கள்தான். என்றாலும் அவை ஷிர்க்கின் வகையைச் சார்ந்தவையல்ல. ஆனால் மரணித்தவர் களிடம் -நேரடியாகப்- பிரார்த்திப்பது, அவர்களிடம் உதவி தேடுவது போன்றவை மிகப்பெரிய ஷிர்க்கின் வகையைச் சார்ந்தவைகளாகும்.

இதனைப் பற்றிய விரிவான விளக்கங்கள் முன்னர் கூறப்பட்டுள்ளன. எனவே இவையனைத்தையும் விட்டு மிகவும் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! அதனை விட்டும் முழுமையாக விலகிக் கொள்ளுங்கள்! உங்களுடைய இரட்சகனிடம் பாக்கியத்தையும் நேர்வழியையும் கேளுங்கள்! அவனே கிருபையாளன், நேர்வழி காட்டுபவன், வணக்கத் திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவனைத் தவிர வேறு இரட்சகனில்லை.

இறுதியாக, இதனையே நாம் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்பினோம். ஆரம்பமாகவும் இறுதியாகவும் அனைத்துப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! அவனது அடியாரும் தூதரும் படைப்பினங்களில் சிறந்தவருமான முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் அவர்களை நல்லவற்றில் -மறுமை நாள்வரை- பின்பற்றுவோர் அனைவரின் மீதும் அல்லாஹ்வின் ஸலாமும் ஸலவாத்தும் நிலவட்டுமாக!



# வஸ்ஸலாம்

***நிறைகளை பிறரிடம் கூறுங்கள்!***

***குறைகளை என்னிடம் கூறுங்கள்!***

***For further informations***
***Please contact:***

***E mail:*** er_sulthan@yahoo.com

***Visit: www.tamilislam.webs.com***